
தர்மசக்கரம்



ரௌத்திரி ௵ ஐப்பசி ௴ சக்கரம் 29 ஆரம் 10

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா.

அந்தர்யோக விவரங்கள்

சேலத்தில் 26—10—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் ; ஸ்ரீ சாரதா கல்லூரியின் பிரார்த்தனை கொட்டகை

நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

சென்னை புரசவாக்கத்தில் 26—10—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் ; ஸர் M. CT. முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி

நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆர்காடு ஜில்லா—அரக்கோணத்தில் 26—10—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ கோதண்ட ராமர் கோவில் (ஸ்ரீ தர்மராஜா கோவிலருகில்)

நேரம் : இரவு 7-30 மணி முதல் 9-00 மணி வரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—கம்பத்தில் 26—10—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : முத்தையாபிள்ளை ஞாபகார்த்த உயர்நிலைப்பள்ளி

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 26—10—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : அகஸ்தியர் கோயில்

நேரம் : காலை 9-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—அருப்புக்கோட்டையில் 26—10—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : இந்து நாடார் நடுநிலைப்பள்ளி

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

பெங்களூர் கண்டோன்மென்டில் 2—11—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : அஜந்தா டாக்கீஸ் எதிரிலுள்ள ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடம்

நேரம் : காலை 10 00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—பாளையங்கோட்டையில் 2—11—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ம. தி. தா. இந்துக்கலாசாலை மேல்நிலைப்பள்ளி

நேரம் ; காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

பெரியார் ஜில்லா—ஈரோட்டில் 9—11—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் சங்கம், பார்க் ரோடு, ஈரோடு-1

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

[அட்டை 4-ம் பக்கம் பார்க்க]

15.10 | 8

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 29 | ரௌத்திரி ஹூ ஐப்பசி மீ | ஆரம் 10

பொருளடக்கம் பக்கம்

சந்தா விவரம்

ஆன்மீகக் கருத்துக்களில் தெளிவுபெற தர்ம சக்கரம் சந்தாதாரராகச் சேர்ந்து பயன்பெறுங்கள்.

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்து விட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரப் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தாச் செலுத்திப் புதுப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் டிபாஸிட் செய்யும் தொகையைப் பேங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 13 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பன்னிரண்டு செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் எட்டு அனுப்பலாம். பாக்கி ரூபாய் நான்கையும் பாண்டிச்சேரி S. விசுவநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி'யினின்று ஈடு செய்து கொள்கிறோம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அவை அனைத்துக்கும் அன்பர்களின் உதவியால் தர்ம சக்கரம் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-25 வெளிநாடு வருட சந்தா ரூ. 25-00

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி

ஸ்ரீ தாயுமானவர் கோயில் உட்பகுதியில் பூச்சு வேலையும் வெளியே மூல ஸ்தானத்திற்கு மேல் கோபுர வேலையும் இப்பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பாலர் பள்ளிக்கும் விருந்தினர் விடுதிக்குமாக ஆய்க்கொண்டிருக்கும் கட்டடத்தில் மேல்தளம் கான்கிரீட் போடும் நிலை அடைந்திருக்கிறது. இரண்டு கட்டடங்களும் இன்னும் மூன்று மாசத்தில் முடிவு பெறும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் ராமேஸ்வரத்தில் முகுந்தராவ் வெங்கட்ராவ் தர்ம சத்திரம் நடாத்தி வந்த தர்ம செயல் எதிர்காலத்தில் நன்கு நடைபெறுதல் பொருட்டு நம் தபோவனம் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனத்தில் ஸ்ரீ தாயுமானவ தபோவனத்தை அனுசரித்து அதன் கிளை ஒன்று ஸ்தாபிக்க ஏற்பாடுகள் ஆய்க்கொண்டிருக்கின்றன.

1980 செப்டம்பர் மாத நன்கொடை விபரம் வருமாறு :

விலாசம்		ரூபாய்
ஆகஸ்ட் மாதம் முடிய நன்கொடை வசூல்		9 80 014
M/s. ஹோம்அப்ளையன்செஸ்	M. G. ரோடு, எர்ணுகுளம், கேரளா	1 500
ஸ்ரீ A. V R. M. V. சங்கரநாராயணன்	கோமதி மில்ஸ், அம்பாசமுத்திரம்	1 001
ஸ்ரீ S. S. ராஜலிங்கராஜா	ரைஸ்மில் ,,	500
ஸ்ரீ N. அருணுசல உடையார்	மின்னும்பள்ளி, சேலம்	300
Dr. செண்பகராமன்	தென்காசி	250
ஸ்ரீ சிவசுப்ரமணியர் கோவில் வழிபாட்டுக் குழுவினர்	தொழுவனூர்	250
பண்ணைபுரம் திரு K. முருகேசன்	திருநகர், மதுரை	250
ஸ்ரீ முருகேசன்	பாரதமாதா பைனான்சியர், கரூர்	150
ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி சுப்புராமன்	நளினி சில்க் பாலஸ், தஞ்சாவூர்	150
ஸ்ரீ மகாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்	அய்யாபிள்ளை தெரு, சென்னை	115
ஸ்ரீமதி S. பானுமதி	அரிசிபாளையம், சேலம்	101
சைவ சித்தாந்த சபை	புதூர், விளாத்திக்குளம், திருநெல்வேலி	101
ஸ்ரீ K. சுப்பையா	முருகானந்தம் ஆட்டோகேரேஜ், பொள்ளாச்சி	101
ஸ்ரீ G. குருநாதன்	சிங்கம்புணரி, ராமநாதபுரம்	101
ஸ்ரீ D. நடேசமுதலியார்	லாங்பஜார், வேலூர், வ. ஆ. மாவட்டம்	101
ஸ்ரீ L. வெங்கடேசலு நாயுடு	அவரங்காட்டுத்தெரு, திருவண்ணாமலை	101
M/s. வெங்கடாசலபதி டிரேடிங் கம்பெனி	அம்பாசமுத்திரம்	101
ஸ்ரீ J. ராஜகோபால் ரெட்டி	தாளம்பேடு, சித்தூர், ஆந்திரா	101
வரிக்கல் சிங்கராஜா தெரு தாய்மார்கள்	ராஜபாளையம்	101
ஸ்ரீ குப. சு. அ. மெ. சொ. மெய்யப்பன்	காரைக்குடி	100
ஸ்ரீ நா. ஆ. மாரிமுத்து	,,	100
ஸ்ரீ G. வேலுசாமி கவுண்டர்	V. G. பாளையம், பல்லடம்	100
ஸ்ரீ P. K. காந்திகுமார்	திருப்பூர்	100
Dr. R. K. கந்தசாமி	,,	100
ஸ்ரீமதி R. K. சரோஜினி	,,	100
திரு. அகத்தூர்கவுண்டர்	நஞ்சைகவுண்டன்புதூர், பொள்ளாச்சி	100
திரு. ஆர். சோமசுந்தரம்	சாராயக்காரத்தெரு, விருத்தாசலம்	100
ரூபாய் நூறுக்குக் கீழ் வந்த நன்கொடைகள்		489
	ஆகக் கூடுதல் ரூ.	9 86 678

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 29 | ரௌத்திரி ஸு ஐப்பசி மீ | ஆரம் 10

பிரார்த்தனை

नयनं गलदश्रुधारया वदनं गद्गदरुद्धया गिरा ।
पुलकैर्निचितं वपुः कदा तव नामग्रहणे भविष्यति ॥

நயனம் கலதஸ்ருதாரயா வதனம் கத்கதருத்தயா கிரா ।
புலகைர்நிசிதம் வபு: கதா தவ நாமக்ரஹணே பவிஷ்யதி ॥

இறைவனுடைய திருநாமத்தை ஓதுகின்றபொழுது கண்களினின்று ஆனந்த பாஷ்பம் பொழிகிறது. நாவினின்று வரும் சொற்கள் தழுதழுத்துப்போகின்றன. உடலெங்கும் மயிர்க் கூச்சு எடுக்கிறது.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன் விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்து உன்னைப் போற்றி, ஜயஜய போற்றி யென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டுகொள்ளே.

— மாணிக்கவாசகர்

அருள் விருந்து

தன்னை வென்றவன் பிறரைத் தாக்குவதில்லை.

தெய்வீகம் அனைவருக்கும் நலன் நல்குகிறது என்பது வெளிப்படை.

ஒரு லட்சியத்துக்காகத் தன்னை ஒப்படைப்பவன் பெருமகன் ஆகிறான்.

தன் பண்புக்கு ஏற்ப மனிதன் நலனையோ பொலனையோ நாடுகிறான்.

நாவடக்கம் பழகுகிறவன் ஏனைய பொறிகளை எளிதில் வெல்லுகிறான்.

அமைதியுற்றிருக்கும் வேளையில் செய்யத்தக்கது எது என்பது விளங்குகிறது.

சான்றோன் சுயநலத்தை ஒதுக்கிவிட்டுப் பொது நலனில் நிலைத்திருக்கிறான்.

பெருவாழ்வு ஆசையினின்று வடிவெடுப்பதில்லை; தத்துவ ஞானத்தினின்று வடிவெடுக்கிறது.

பொறிகளுக்குப் பிரபஞ்சம் எனப் புலப்படுவது ஞானக்கண்ணுக்குத் தெய்வம் எனத் திகழ்கிறது.

கலாசாலைகள் மனிதனைக் கடவுள் மயம் ஆக்குவதால் ஆங்குப் பொல்லாங்கு எதற்கும் இடமில்லை.

இன்பத்தை நாடுபவன் துன்பத்தைத் துய்த்தாகவேண்டும். ஏனென்றால் இரண்டும் இணைபிரியாதவைகள்.

கட்டில் அடங்கிய தீயும் தண்ணீரும் நன்கு பயன்படுவது போன்று கட்டில் அடங்கிய சீற்றம் நன்கு பயன்படுகிறது.

தீங்கு செய்பவனை உலகம் ஒதுக்குகிறது. மற்று, சான்றோன் தீமையை ஒதுக்கி மனிதனை ஏற்றுக்கொள்ளுகிறான்.

நலனுக்கும் கேட்டுக்கும் உள்ள வேற்றுமை கட்புலனாவதில்லை. ஆதலால் பலர் கேட்டை நலனாகக் கருதுகின்றனர்.

தாய்மொழியின் தகைமையை அறிந்துகொள்ளாதவனுக்கு க்ஷீணதசை அணுகிவிட்டது என அறிந்துகொள்ளுக.

கீழான இயல்புகள் மனிதனைப் பாழ்படுத்துகின்றன. அவைகள் இன்பம் தருகின்றன என்று எண்ணி மனிதன் தன்னைத் தானே பாழ்படுத்துகிறான்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

தாம் கொண்டுவந்திருந்த புஸ்தகத்தினின்று மகேந்திரர் மீண்டும் வாசிக்கலாயினர்: மானுடனொருவன் பிறர்க்காக ஏதாவது தானம் செய்ய விரும்பினல் அதற்காகப் பாடுபட வேண்டும். பிறர் நலனுக்காகப் பணிவிடை பண்ணுகின்றவன் சிறிது ஆடம்பரமாக உடைகள் அணிந்து கொள்ளவேண்டும். வசதிகளோடு கூடிய பெருமித வாழ்விலும் அம்மனிதன் சிறிது ஈடுபட்டிருத்தல் வேண்டும். ஆதலால் பவானிபதக் பகர்ந்ததாவது: "கடையை விரித்து வைத்தல் சிறிது அவசியமாகிறது."

பரமஹம்சதேவர் (கடுமையுடன்): "கடையை விரித்து வைத்தல் சிறிது அவசியமாகிறது!' இதுவா கோட்பாடு? மானுடனொருவன் எதை மனதுக்குள் நினைக்கிருனே அதையே வாய் விட்டுப் பேசுகிருன். அல்லும் பகலும் உலக விஷயங்களையே ஒருவன் எண்ணிக்கொண்டு இருப்பானுகில், மக்களோடு பாசாங்குடன் பழகி வருவானுகில் அத்தகைய எண்ணங்களில் தோய்ந்தவைகளாக அவனுடைய சொற்கள் வந்தமைகின்றன. முள்ளங்கிக் கிழங்கை ஒருவன் புசிப்பானுகில் அவன் ஏப்பம்விடும் பொழுது முள்ளங்கிக் கிழங்கு நாற்றம் வெளியாகிறது. 'கடையை விரித்தல்' என்னும் பேச்சு பொருளற்றது. அதற்குப் பதிலாகத் தன் செயலுக்குத் தன்னைக் கர்த்தாவாகக் காட்டிக்கொள்ளுதற்கிடையில் இம்மையில் செயல்களனைத்துக்கும் இறைவனே கர்த்தா என்னும் எண்ணத்தில் அவன் ஆழ்ந்து ஊறியவனுக இருக்க வேண்டும். பொதுநல சேவையில் ஈடுபடுகிறவர்கள் பகட்டான வாழ்வு வாழலாகாது. ஆடம்பரம் எதிலும் கருத்தைச் செலுத்தலாகாது. அன்றொருநாள் பேர்வழி ஒருவன் இங்கேவந்து பாடிக்கொண்டிருந்தான். அவனுடைய பாடல்களில் ஊதியத்தைப் பற்றியும், நஷ்டத்தைப் பற்றியும் ஆகிய பதங்கள் புதைந்திருந்தன. அம்மனிதனைப் பாடவேண்டாம் என நான் பகர்ந்தேன். ஏனென்ருல் இரவும் பகலும் மானுடனொருவன் ஏதேனும் மட்டமான விஷயத்தில் கருத்தைச் செலுத்திக் கொண்டிருப்பானுகில் மேலான விஷயங்கள் அவன் மனதில் நுழையமாட்டா."

புஸ்தகத்தினின்று வாசிப்பு மேலும் நடைபெறுவதாயிற்று. ஈஸ்வர அனுபூதியைப் பற்றி அந்த நூலாசிரியர் விளக்கிக் கொண்டிருந்தார். பிரபுல்லா என்பவள் சௌத்ராணி தேவியாக மாறியிருக்கிருள். அது வைகாசி மாதம். படகின் மேல்தட்டின்மீது அத்தேவியானவள் அமர்ந்திருந்தாள். திவா என்னும் தோழியோடு அவள் பேசிக்கொண்டிருந்தாள். நிலாக்கிளம்பி மேலே வந்து கொண்டிருந்தது. படகு நங்கூரம் போட்டுக் கங்கை நதியில் மிதந்துக் கொண்டிருந்தது. தேவிக்கும் மண்ணுலக மாதுக்குமிடையில் சம்பாஷணை தொடர்ந்து போய்க் கொண்டிருந்தது. மானுடனொருவன் ஈஸ்வர அனுபூதியைப் பெறமுடியுமா? என்பதைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். தேவி சொன்னதாவது, "பூவின் மணத்தை மூக்கு நேரே முகருவது போன்று மனதைக் கொண்டு கடவுள் நேரே அறியப்படுகிருர்."

வாசிப்பு இங்ஙனம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் அதற்குச் சிறிது இடைஞ்சல் பண்ணுகிற பாங்கில் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "ஆம். மனதைக்கொண்டு மனது நேரே கடவுளை அறிகிறது. ஆனல் அத்தகைய மனது உலக விஷயங்களில் ஊறிக்கிடக்கும் சாதாரண மனதன்று. மலம் நீங்கப்பெற்றுள்ள தூய மனதே கடவுளை அனுபூதியில் அறிகிறது. அவ்வேளையில் உலகப்பற்றில் உழலும் சாதாரண மனது செயலற்றுப் போகிறது. மனதில் உலக ஆசை சிறிதளவாவது எஞ்சியிருக்குமாகில் அத்தகைய மனதைத் தூய மனது என்று சொல்லலாகாது. மனதின்கண் படிந்துள்ள மாசுகளனைத்தும் அறவே அகற்றப்படுமானல் அந்த மனது தூய மனதாகிறது. அது சுத்த சைதன்யத்திற்கு ஒப்பானது. அத்தூய மனதையே தூய ஆத்மா என்றும் இயம்பலாம்."

மகேந்திரர்: "சாதாரண மனதானது கடவுளைக் காணமாட்டாது என்று நூலாசிரியர் மேலும் பகருகிருர். தூரத்திலிருக்கும் பொரு

யைக் காண்பதற்குத் தூரதிருஷ்டி கண்ணாடி தேவை. அந்தத் தூரதிருஷ்டி கண்ணாடிக்கு நிகர் யோகம். இந்த யோகமானது மூன்று பாங்குகளில் பகவத்கீதையில் பகரப்பெற்றிருக்கிறது. ஞானயோகம், பக்தியோகம், கர்ம யோகம் என்பன அவைகளின் பெயர்களாம். அம் மூன்றும் தூரதிருஷ்டி கண்ணாடிக்கு நிகர். அவைகளைக் கொண்டு கடவுள் காட்சியைப் பெறலாம்."

பரமஹம்சதேவர்: "அது மிக நன்று. பகவத் கீதை இதே பாங்கில்தான் புகட்டுகிறது."

மகேந்திரர்: "கடைசியாகச் சௌத்ராணி தேவி தன் கணவனைச் சந்திக்கிறாள். தன் கணவனிடம் பேரன்பு பூண்டு ஒழுகினாள். அவனிடம் அவள் இயம்பியதாவது: "நான் வணங்கும் தெய்வம் நீ. உனக்குப் புறம்பாக வேறொரு தெய்வத்தை வணங்க நான் முயன்றேன். ஆனால் அதில் நான் வெற்றிபெறவில்லை, எல்லாத் தேவதைகளின் சொருபமாக நீ எனக்கு இலங்குகின்றாய்.''

பரமஹம்சதேவர்: "நான் வெற்றி பெறவில்லை. இது பெண்பால் ஒருத்தியின் தர்மமாகிறது. அவள் முற்றிலும் தன் கணவனிடத்தே பக்தி வைத்திருக்கிறாள். இத்தகைய பதி விரதா தர்மமே பரத்தை அடைவதற்கான நெறி ஒன்று ஆகிறது."

இப்பொழுது வாசிப்பு முற்றுப் பெறுகிறது. பரமஹம்சதேவர் புன்னகை பூத்தவராக இருந்தார். பக்தர்கள் எல்லாரும் ஆவலோடு அவருடைய முகவிலாசத்தைப் பார்த்த வண்ணமாயிருந்தனர். அப்புஸ்தகத்தைப்பற்றி அவர் என்ன பகருவாரோ என்பதுதான் அவர்கள் கொண்டிருந்த ஆவல்.

பரமஹம்சதேவர் (பக்தர்களைப்பார்த்துப் புன்னகை பூத்தவராக): "இதில் தோஷம் ஒன்றுமில்லை. இது கற்பைப் பற்றிய தர்மமாகும். பெண்ணொருத்தி தன் கணவன்மீது வைக்கும் தூய அன்பு அவனை மேல் நிலைக்கு அழைத்துச் செல்கிறது. விக்ரஹம் ஒன்றின் வாயிலாகக் கடவுள் வழுத்தப் பெறுகிறார். அத்தகைய வழிபாட்டின் வாயிலாகச் சாதகனொருவன் மேல் நிலைக்கும் வருகிறான். பின்பு உயிர் வாழ்ந்திருக்கும் மானுடனொருவனைத் தெய்வ சொருபமாகக் கருதி வழுத்துவதன் வாயிலாகச் சாதகன் ஒருவன் ஏன் மேல் நிலை எய்த மாட்டான்? கடவுள்தானே இவ்வுலகில் இத்தனை மானுடர் வடிவெடுத்து விளையாடுகிறார்.

"சாதனதசையிலிருந்தபொழுது என்னென்னமோ பாங்குகளையெல்லாம் நான் பெறலானேன்! பல நாட்களாகச் சிவசொருபத்திலும் நான் ஆழ்ந்து மூழ்கியிருந்தேன். துர்க்கையின் சொருபத்திலும் மற்றும் பல நாட்களாக நான் ராதையின் சொருபத்திலும் கிருஷ்ணன் சொருபத்திலும் ஆழ்ந்து மூழ்கியிருந்தேன். மேலும் பல நாட்கள் நான் சீதையின் சொருபத்திலும் ராமனுடைய சொருபத்திலும் திளைத்திருந்தேன். ஸ்ரீமதி ராதையின் மனப்பான்மையை என்னிடத்து வரவழைத்துக்கொண்டு கிருஷ்ணனை நாடி நான் கதறிப் பதறி அழுதேன். பின்பு சிறைகிடந்த சீதா பிராட்டியாரின் மனப்பான்மையை என்னிடத்து வரவழைத்துக்கொண்டு ராமனை அடைவதற்காக நான் படாதபாடு பட்டு அழுது கொண்டிருந்தேன்.

"கடவுளைப்பற்றிப் பேசும்பொழுது அவருடைய திருவிளையாடல் என்றும் அவருடைய சொற்பதம் கடந்த மேலாம் பாங்கு என்றும் பகர்கிறோம். இவ்விரண்டினுள் அவருடைய திருவிளையாடல் முடிந்த நிலையாகாது. திருவிளையாடல்களை யெல்லாம் கண்டு அறிந்து கொள்ள நான் அரும்பாடுபட்டேன். அவைகளுக்கிடையில் அன்னை பராசக்தியிடம் நான் பிரார்த்தித்ததாவது: "தாயே, இத்தகைய அருள் நாட்டங்களுள் வழுத்துவோன், வழுத்தப்படும் தெய்வம் என்னும் வேறுபாடு இருக்கிறது. உன்னோடு பிரியாதிருக்கும் பாரமார்த்திகப் பெருநிலையை எனக்கு நல்கியருள்வாயாக." அதன் பிறகு பல நாள் நான் அகண்ட சச்சிதானந்தத்தில் ஆழ்ந்திருந்தேன். அப்பொழுது என் அறையில் மாட்டப்பெற்றிருந்த தெய்வங்களின் படங்களை யெல்லாம் நான் அப்புறப்படுத்திவிட்டேன். எங்குத் திரும்பி எதைப் பார்த்தாலும் அது தெய்வமாகவே எனக்குக் காட்சி கொடுத்தது. ஐதிகத்தை அனுசரித்துச் செய்யும் வழிபாடு என்னைவிட்டு அகன்று போய்விட்டது. அதோ ஆங்குத் தெரிகிற வில்வமரத்தைப் பாருங்கள். வில்வ பத்ரங்கள் கொய்ய ஆங்கு நான் போவதுண்டு. ஒரு நாள்

பத்ரம் ஒன்றை நான் கொய்தபொழுது மரப் பட்டை சிறிது சிதைவுண்டது. அந்த வில்வ மரம் முழுவதும் சைதன்ய சொரூபம் என்பதை நான் உணர்ந்தேன். அந்த மரத்துக்குத் தீங்கு இழைத்ததை முன்னிட்டு நான் சிறிது முகவாட்டம் கொண்டேன். மற்றொரு நாள் கொஞ்சம் அறுகம் புல் கொய்ய நான் முயன்றேன். ஆனால் அச்செயலைச் சரிவர நிறைவேற்ற எனக்கு இயலவில்லை. ஏதோ ஒருவாறு சிரமப்பட்டு நான் அதைக் கிள்ளலானேன்.

"எலுமிச்சம் பழம் ஒன்றை வெட்ட இயலாத நிலையில் நான் இருக்கிறேன். அன்றொரு நாள் மிகச் சிரமப்பட்டு ஏதோ ஓர் எலுமிச்சம் பழத்தை வெட்ட எனக்கு இயன்றது. அன்னை காளிகாதேவியின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு அந்தப் பழத்தை நான் துண்டாக்கினேன். மற்றொரு நாள் மலர் கொய்வதற்கு நான் ஆயத்தமானேன். அம்மலர்கள் மரங்கள் அனைத்தும் வியாபித்திருந்தன. அக்கணமே விசுவரூபத்தின் வடிவம் எனக்குக் கிட்டியது; இறைவனுடைய வழிபாடு அப்பொழுதுதான் முற்றுப்பெற்று இருந்ததாக எனக்குப் புலப்பட்டது. புஷ்பங்கள் யாவும் ஒரு செண்டாக அமைக்கப்பட்டு தெய்வத்தின் சிரசின்மீது வைக்கப்பட்டு இருப்பதாகத் தென்பட்டது. ஆகவே அப்புஷ்பங்களைக் கொய்ய எனக்கு இயலவில்லை.

"இறைவன் மானுட வடிவத்திலும் இலங்குகின்றான். மானுடன் ஒருவனைப் பார்க்கும்பொழுது அவன் நாராயணன் சொரூபம் என நான் உணர்கிறேன். மரக் கட்டைகள் இரண்டை ஒன்றோடொன்று உறைத்தால் அது தீப்பற்றிக்கொள்ளும். அதேபாங்கில் பேரன்பு ஒருவன் உள்ளத்தில் ஓங்குமானால் அன்னவன் தெய்வத்தின் காட்சியைக் காணப் பெறுவான். மானுடன் ஒருவனிடத்துப் பிரேமை பக்தி உருவெடுக்குமானால் அன்னவன் உயிர்கள் அனைத்திடத்தும் இறைவனுடைய சாந்நித்தியத்தைக் காண்கிறான். கோபிமார்கள் கிருஷ்ணனையே எங்கும் காணலுற்றார்கள். உலகம் முழுதும் கிருஷ்ணனால் வியாபிக்கப் பட்டிருப்பதாக அவர்கள் கண்டார்கள், அவர்கள் தாங்களே கிருஷ்ணன் ஆய்விட்டதாகவும் கண்டார்கள். அத்தகைய அனுபவம் வந்தபொழுது அவர்கள் பிரேமை பக்தியில் ஆழ்ந்து திளைத்திருந்தார்கள். மரங்களை அவர்கள் பார்த்தார்கள். கிருஷ்ணன் தியானத்தில் மூழ்கியிருந்த முனிவர்களாக அம்மரங்கள் அவர்களுக்குத் தென்பட்டன. பூமியில் முளைத்திருந்த புல்லை அவர்கள் பார்த்தார்கள். கிருஷ்ணனால் தீண்டப்பட்டு மண்ணுலகு மயிர்க்கூச்சல் படைத்திருப்பதாக அக்காட்சி அவர்களுக்குத் தென்பட்டது.

"மாது ஒருத்தி பதிவிரதம் பூண்டிருப்பது தர்மமாகிறது. கடவுளே ஜீவர்களாக இலங்குகின்றார். ஆதலால் கணவன் கடவுளாகின்றார். அப்படிக் கருதுவது முறை தானே? ஒரு விக்ரஹத்தின் வாயிலாகக் கடவுள் வழிபாடு செய்வது முறையென்றால் வாழ்ந்திருக்கும் மானுடன் ஒருவன் வாயிலாக அக்கடவுள் வழிபாட்டை ஏன் செய்யலாகாது? விக்ரஹம் ஒன்றனிடத்துக் கடவுள் சாந்நித்தியத்தைக் காண்பதற்கு மூன்று கோட்பாடுகள் தேவையாகின்றன. பூஜை பண்ணுகிற பூஜாரி பக்திமானாக இருக்க வேண்டும். இது முதல் கோட்பாடு. விக்ரஹம் அழகாக அமைந்திருக்கவேண்டும். இது இரண்டாவது கோட்பாடு. வழிபடுகிறவன் பக்திமானாக இருக்கவேண்டும். இது மூன்றாவது கோட்பாடு. வைஷ்ணவ சரண் அரிய கருத்து ஒன்றைத் தெரிவித்தார். பக்தன் ஒருவனுடைய மனது படிப்படியாகப் பரத்தின்கண் ஒடுங்குகிறது. அப்பரவஸ்துவே மானுட வடிவெடுத்திருக்கிறது. என்றைக்குப் பக்தனொருவன் மானுட வடிவங்களைக் கடவுள் மயமாகக் காண வல்லவனாகிறானோ அன்றைக்கு மன ஒடுக்கம் தானாக வந்து வாய்க்கிறது.

"மற்றும் ஓர் விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்வீர்களாக. கடவுளின் காட்சி பெற்ற அனுபூதிமானுக்கே அக்கடவுள் மானுட வடிவத்தில் இலங்கிக் கொண்டிருக்கிறார் என்பது விளங்குகிறது. ஈசுவரானுபூதி வாய்க்கப்பெற்றவன் ஒரு குழந்தையின் பாங்கைப் பெறுகிறான். குழந்தையின் பாங்கு என்று ஏன் பகரவேண்டும்? ஏனென்றால் கடவுள் தாமே களங்கமற்ற குழந்தைபோன்று இருக்கிறார். ஆதலால் கடவுள் காட்சி அடையப் பெறுகிறவனும் குழந்தைபோன்று ஆகிறான்."

பைங்கிளிக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

45. மட்டுப் படாத மயக்கமெல்லாம் தீரஎன்னை
வெட்டவெளி விட்டில்அண்ணல் மேவுவனே
பைங்கிளியே.

மட்டுப்படாத-அளவில் அடங்காத. மேவுவனே-கூடுவானே.

யாண்டும் இருப்பவன் பரமன். அப்பரமனைப் பிரபஞ்சமாகக் காண்பது மயக்கம். மயக்கத்தின் வலிமைக்கு ஏற்பப் பிரபஞ்ச நாட்டத்திலேயே ஈடுபட்டிருப்பது ஜீவாத்மனுடைய பாங்கு ஆகிறது. மயக்கம் தெளிவதற்கேற்பப் பிரபஞ்ச நாட்டம் பரநாட்டமாக மாறுகிறது. இரவில் கொழுந்துவிட்டு எரிகிற தீப் பிழம்பை விட்டில் பூச்சி பார்த்தால் தனக்கு நிகழும் விபத்தை எண்ணிப் பார்க்காது அப்பூச்சி தீயினுள் பாய்ந்து சாம்பலாகிறது. அதற்கு நிகராக பராபக்தி வாய்க்கப்பெற்றிருக்கிற ஜீவாத்மன் தன்னை மறந்து அகண்ட சச்சிதானந்தமாயிருக்கும் பரமனிடத்துப் பாய்கிறான். அக்கணமே அவன் தன் ஜீவ வியக்தியை இழந்துவிட்டுப் பரத்தில் ஒன்றுபடுகிறான். விட்டில் பூச்சி அழிந்துபட்டுப் போனதற்கு நிகராக ஜீவாத்மன் தன்னுடைய ஜீவ போதத்தை இழக்கிறான். மற்று, அவன் பெறுவது பரபோதம். அவன் அடைந்துள்ள பெரிய பேறுடன் சீர்தூக்கிப் பார்த்தால் அவனுக்கு நஷ்டம் ஒன்றும் நேரவில்லை, ஒப்பு உயர்வு அற்ற பரபோதத்தையே அவன் அடையப் பெறுகிறான். சொரூபம் இருந்தது இருந்தபடி இருக்கிறது. அந்தச் சொரூபம் அடைந்திருந்த ஜீவ விகாரத்துக்கு அழிவு ஏற்படுகிறது. பொருள் யாண்டும் இருந்தது இருந்தபடியிருக்கிறது. மற்றொரு உபமானம் எடுத்துக்கொண்டால் வானத்திலின்று கீழே விழ்கின்ற மழைத்துளி வானத்திலிருக்கும் பரியந்தம் துளி எனத் திகழ்கிறது. கடலில் வந்து விழ்ந்தான பிறகு நீர்த்துளி என்னும் விகாரத்தை இழந்து விட்டு நீர் நீராக அமைகிறது. பச்சைக் கிளியே, இத்தகைய பெரிய பேறு எனக்கும் வாய்க்குமா என்று இறைவனிடம் சென்று கேட்டுவா என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

46. மாலைவளர்த்து என்னை வளர்த்துஇறைவர்
பன்னெறிஆம்
பாலைவனத் தில்விட்ட பாவம்என்றோ பைங்கிளியே.

மாலை வளர்த்து-நன்னெறியில் ஆசையை உண்டுபண்ணி.

உலக ஆசைகள் எத்தகையவைகள் என்பதை அறிந்து கொள்ளுதற்கு முன்பு நல்ல ஜீவாத்மன் ஒருவன் தக்க சூழ்நிலையிலே தக்கார்களோடு வாழ்ந்திருப்பானாகில் தெய்வப்பற்று என்னும் நன்னெறியில் அவன் ஆழ்ந்து ஈடுபடுகிறான். பிறகு வயது முதிர முதிர உள்ளத்தினுள்ளே புதைந்து கிடந்த பொருந்தாத சம்ஸ்காரங்களும், பூர்வஜன்ம வாசனைகளும் தலையெடுக்கின்றன. அவைகளுக்கு அடிமைப்பட்டு ஜீவாத்மன் ஒருவன் உலக வியவஹாரங்களில் ஈடுபடுவானாகில் அவனுடைய செயல் பாலைவனப் பயணம் போன்று பொருளற்றதாகிறது. பாலைவனத்தில் எப்பக்கம் திரும்பிப் பார்த்தாலும் அது ஒரு பாதை போன்று தென்படும். எப்பாதையில் சென்றாலும் அன்னவன் பாலைவனத்துக்குள்ளேயே திண்டாடிக் கிடப்பான். பிரபஞ்ச வாழ்வு பாலைவனத்துக்கு ஒப்பானது. பிரபஞ்சத்திலே மனிதனுக்கு மையல் ஊட்டும் வழிகள் பல இருக்கின்றன. அச்சிறு நெறிகளுள் எந்த நெறியில் சென்றாலும் அவன் கேடடைவது திண்ணம். ஆதியோடந்தமாக நன்னெறியில் செல்லுபவர்களே பாக்கியவான்கள். ஐயம் திரிபு அற அன்னவர்கள் பரமனைச் சென்றடைகின்றனர். பூர்வ ஜன்மாந்தரங்களில் பெற்றுள்ள கீழான சம்ஸ்காரங்களால் தூண்டப் பெற்றுப் பொறி வழிகள் பலவற்றுள் சென்று வாழ்வைப் பாழ்படுத்திக் கொள்பவர்கள் தௌர்பாக்யவான்களாகிறார்கள். நான் அத்தகைய தௌர்ப்பாக்யவான் ஆகலாகாது. பொருந்தாத சித்த விருத்திகள் உள்ளத்தினுள்ளே உருவெடுக்கவிடமாட்டேன். ஊசி காந்தத்தையே நாடுவதுபோன்று நான் இறைவனையே நாடியிருந்து இறைவனைச் சென்றடைவேன். அழகிய கிளியே, அழகிய செந்நெறியிலேயே இறைவனை நாடி நான் விரைந்து செல்

வேணுக. பாழ்படுத்தும் பொறிவழி எனக்கு வேண்டாம் என்பது இக்கண்ணியின் கருத்து.

47. மெய்யில்நோய் மாற்றுஅவுழ்தம் மெத்த
[உண்டுஎம் அண்ணல்தந்த
மையல்நோய் தீர்க்க மருந்தும் உண்டோ
[பைங்கிளியே.

அவுழ்தம்-மருந்து. மெய்-உடல். எம் அண்ணல் தந்த-கடவுள் உண்டு பண்ணிய.

உடல் பஞ்சபூதங்களால் ஆனது. அந்தப் பூதங்களின் அமைப்பில் பொருத்தமற்ற ஏற்றத் தாழ்வு அமையுங்கால் அது நோய்வாய்ப்படுகிறது. அங்ஙனம் அமைந்துள்ள குறைநிலையைத் திறமை வாய்ந்த மருத்துவன் கண்டுபிடிக்கிறுன். அதை ஒழுங்குபடுத்துவதற்கான மருந்தையும் அவன் அமைக்கிறுன். எனவே பொருத்தமான மருந்தை ஏற்பதன் வாயிலாக மேனியைப் பிடித்துள்ள நோயை அகற்றலாம். மனிதனைப் பிடிக்கும் நோய்களுள் அகற்ற முடியாதிருப்பது அருள் நாட்டம் என்னும் பித்தம். கடவுள் தாமே பித்தனுயிருக்கிறுர். தம்மிடத்திருந்து பிரபஞ்சத்தின்கண் வந்துள்ள ஜீவகோடிகளை மீண்டும் தம்மிடத்துக் கவர்ந்து எடுத்துக்கொள்ளும் பித்துப் பிடித்தவராக அவர் இருக்கிறுர். பண்பாடடைந்து வரும் ஜீவாத்மன் ஒருவனுக்கும் அதே மையல் நோய் வந்து பிடிக்கிறது. அந்த நோயைப் போக்குதற்கு மண்ணுலகில் மருந்து ஏதுமில்லை. தாயை விட்டுப் பிரித்து வைக்கப்பட்ட சேய் மீண்டும் தாயோடு இணைத்து வைக்கப்பட்டாலொழிய அது அமைதியுறுது. அங்ஙனம் அருள் பித்தம் என்னும் அரிய நோயால் வாட்டப்படுகிற பக்தன் இறைவனேடு இணைத்து வைக்கப்பட்டாலொழிய குணமடையமாட்டான். வானத்தில் பறக்கும் சகோரப்பட்சிக்கு அவன் நிகராகிறுன். தாகம் உண்டானல் மழை நீரை நாடி அப்பறவை வானத்திலேயே சஞ்சரித்திருக்கிறது. நிலவுலகில் கடல்கள் பல இருந்தும் நீர் நிலைகள் பல இருந்தும் கீழ் நிலைக்கு அப்பறவை இறங்கி வரமாட்டாது. அதே விதத்தில் அருள் நாட்டம் படைத்திருக்கிற ஆத்மசாதகன் இறைவனுடைய அருளையே நாடியிருப்பான். பிரபஞ்சமயமாகும் மருளில் அவன் கருத்தைச் செலுத்தான். பச்சைக்கிளியே, நான் அருள் நாட்டம் என்னும்நோயால் வருந்திக் கொண்டிருக்கிறேன். அருளாளனுகிய இறைவனேடு சேர்ந்தால் ஒழிய என்னைப் பிடித்திருக்கும் நோய் அகலாது. இந்த அவசரச் செய்தியை நீ இறைவனிடம் சென்று தெரிவித்து வருவாயாக என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

48. மேவுபஞ்ச வண்ணம்உற்றுய் வீண்சிறையால்
[அல்லல்உற்றுய்
பாவிபஞ்ச வண்ணம் பகர்ந்துவா பைங்கிளியே.

கிளியே, நீ கவர்ச்சிகரமான ஐந்து நிறங்களை உடைத்திருக்கிறுய். அத்தகைய நீ கூண்டில் அடைபட்டுக் கிடக்கின்றுய். அப்படி இருப்பது உனக்குப் பொருந்தாது. கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் சிறைவாசத்தினின்று உன்னை நான் விடுவிக்கின்றேன். அதற்கு நல்லதொரு கைம்மாருக நீ இறைவனிடம் சென்று என்னுடைய பரிதாபகரமான நிலையைத் தெரிவித்து வருவாயாக. அண்ணலின் அருளுக்குப் பாத்திரமானுல் ஒழிய எனக்கு அமைதி வாய்க்காது.

49. வாய்திறவா வண்ணம்எனைவைத்துஆண்
[டார்க்கு என்துயரை
நீதிறவாச் சொல்லின் நிஜம்ஆம்காண் பைங்
[கிளியே.

திறவாச் சொல்லின்-பொருத்தமாக எடுத்து விளக்கினல். நிஜம் ஆம் காண்-உண்மை வெளியாகும்.

பைங்கிளியே, பிறவிப் பிணியில் நான் படாதபாடுபடுகிறேன். ஆயினும் இதை வாய் விட்டுப் பேச இயலாத நிலையிலிருக்கிறேன். ஏனென்றுல் அத்தகைய நிலையில் இறைவன் என்னை வைத்துள்ளார். ஆகாத காரியத்தை ஆகும்படிச் செய்ய வல்லவனுகிறுன் பேச்சுத் திறமையாளன் ஒருவன். அத்தகைய சமர்த்து உன்னிடத்து இருக்கிறது. என்மீது இரக்கம் வைத்து என்னுடைய கஷ்டதசையை எல்லாம் என் இறைவனிடத்து முறையாக எடுத்து ஓதி எனக்கு விமோசனம் தேடி வருவாயாக. இந்த அரிய செயல் உனக்குத்தான் சாத்தியம் என்பது உண்மை. உன்னுடைய உதவியினுலே தான் நான் உய்வு அடைய முடியும் என்பதும் உண்மை. ஆதலால் பைங்கிளியே, என்மீது பரிவு வைத்து இந்த அருள் பணியை இனிது நிறைவேற்றி வைப்பாயாக.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

11. பெரியோர்கள் வகுத்து வைத்த அறநெறியை அழிக்கவோ, பெரியோர்களைப் பழிக்கவோ நான் வரவில்லை. நான் எதையும் அழிக்க வரவில்லை, குறை இருப்பதை நிறைவாக்கவே வந்துள்ளேன்.

நான் கூறும் உறுதிமொழியைக் கேளுங்கள். மண்ணுலகம், விண்ணுலகம் மட்டுமல்ல; அணுமுதல் அண்டம் வரையில் யாவும் அறநெறிக்கு உட்பட்டு இருக்கின்றன. அவைகள் யாவும் தத்தம் தர்மத்தினின்றும் தவறாமல் இருப்பதாலேயே பெரிய காரியங்கள் ஒழுங்காக நிகழ்ந்துகொண்டு இருக்கின்றன.

அறநெறியினின்று பிசகுபவன் கீழ்மை அடைகின்றான். அறநெறியினின்று பிசகும்படி பிறரைத் தூண்டுபவனும் கீழ்மை அடைகின்றான். அறநெறியை உறுதியாகக் கடைப்பிடிப்பவன் மேலோன் ஆகின்றான். பிறரை அறநெறியில் செல்லுமாறு தூண்டுபவனும் மேலோன் ஆகின்றான்.

இந்துக்களால் அவதார புருஷர்கள் என்று அழைக்கப்படுவோர்களும், கிறிஸ்தவர்களால் தேவதூதர்கள் என்று அழைக்கப்படுபவர்களும் உலகத்தில் தோன்றி வருவதன் நோக்கம் இங்கு விளக்கப்பட்டு இருக்கிறது. அவதார புருஷர்களைப்பற்றி இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் முக்கியமான கருத்துவேற்றுமை ஒன்று உண்டு. கடவுள் மானுட வடிவெடுத்து ஒருதடவைதான் நாசரேத்தில் ஏசுவாக வந்தாரென்று கிறிஸ்துவர்கள் நம்புகின்றனர். ஆனால் ஒவ்வொரு யுகத்திலும் பல தடவைகள் மானுட வடிவங்கள் தாங்கி கடவுள் அவதாரம் செய்கிறாரென்று இந்துக்கள் நம்புகின்றனர். கிறிஸ்துவர்கள் ஏசுநாதருடைய வாக்கைத் தங்களுடைய கருத்துக்குப் பிரமாணமாகக் காட்டுகிறார்கள். ஏசுநாதர் பகர்ந்துள்ளதாவது: "நான்தான் உண்மைப் பொருள்; நான்தான் வழிகாட்ட வந்துள்ளேன்; என்னைத் தவிர பிதாவிடமிருந்து யாரும் வரவில்லை." ஏசுநாதர் பகர்ந்திருப்பது போன்று மற்ற அவதார புருஷர்களும் பகர்ந்திருக்கிறார்கள். அவர்களும் தாங்கள்தாம் தெய்வத்தின் அவதாரம் என்பதையும் ஏசுநாதர்போன்றே உறுதியோடு கூறியிருக்கிறார்கள். ஸ்ரீகிருஷ்ணர் பகர்ந்திருப்பதாவது: "நான் எல்லா உயிர்களின் உள்ளங்களில் உறைபவன். உயிர்களின் ஆதியும், இடையும், இறுதியும் நானே. உயிர்களுக்கெல்லாம் வித்து நான். என்னையன்றி இயங்குவன, இயங்காதனவாகிய உயிர்கள் ஒன்றுமில்லை. என்னிடத்தே மனதை வைத்து, என்னிடத்தே புத்தியைச் செலுத்து. பின்பு என்னிடத்தே வசிப்பாய் என்பதில் சந்தேகமில்லை. கர்மபலன்களை யெல்லாம் எனக்கு அர்ப்பணம் செய்து என்னிடத்துப் பக்தி பண்ணுபவன் ஆவாயாக."

புத்தர் பகர்ந்துள்ளதாவது: "நீங்கள் என்னுடைய குழந்தைகள்; நான் உங்களுடைய தந்தை. உங்களுடைய துயரங்களைத் துடைப்பதற்கு என்மூலம் முயலுங்கள். பிறவிக்கடலைக் கடந்து கரை சேர்ந்துள்ளேன். நீங்களும் கடப்பதற்கு நான் உதவுவேன். நான் முக்தி அடைந்துவிட்டதால் மற்றவர்களை மூக்திக்கு எடுத்துச் செல்லுவேன். நான் சாந்தி அடைந்திருப்பதால் மற்றவர்களுக்குச் சாந்தியை நல்குவேன். என் உள்ளமும், சிந்தனையும் யாண்டும் சத்தியத்தைப் பற்றியனவாகவே இருக்கின்றன. நான் சத்தியமயமாகிவிட்டேன். சத்தியத்தை அறிந்துகொண்டவர்கள் தெய்வத்தைக் காண்பார்கள்."

நாம் செய்யக் கிடப்பது என்ன? யாருடைய வாக்குகளை நாம் ஏற்றுக்கொள்வது? இயேசு, கிருஷ்ணர், புத்தர் ஆகியோர்கள் கூறியவற்றுள் எதைக் கடைப்பிடிப்பது? அப்பெரியவர்கள் கூறியவைகளிலுள்ள 'நான், எனது' என்பவைகள் சரித்திரபூர்வமான மனிதர்களைக் குறிப்பதாகக் கொண்டால் அவர்களுடைய கொள்கைகளை நாம் புரிந்துகொள்ளமுடியாது. அவர்கள் 'நான், எனது' என்று கூறியிருப்பவைகள் சரீர சம்பந்தமான அஹங்காரத்தையோ, மமகாரத்தையோ குறிக்கா. அவர்கள் தங்களைப் பரமயமாக ஆக்கிக்கொண்டதால் அவர்கள் கூறின 'நான், எனது' என்பன தெய்வத்தன்மையை உறுதிப்படுத்துகின்றன. அவர்கள் தங்கள் மூலமாக நம்மை இறைவனிடம் இட்டுச் செல்கின்றார்கள். இந்துக்கள் பகரும் அவதார புருஷர்கள் யாவரும் தெய்வத்

தன்மை பொருந்தியவர்களே ஆவார்கள்.

தாங்கள் ஞானம் அடைந்திருப்பதாகத் தங்களைப்பற்றிச் சொல்லிக்கொள்வதன் மூலம் தாங்கள் அவதார புருஷர்கள் என்பதை நிரூபிக்க முடியாது. அவர்கள் தங்களுடைய ஆன்மீக சக்தியை மற்றவர்களிடம் செலுத்தும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் மக்களைத் தொட்ட மாத்திரத்தில் மக்களுடைய வாழ்க்கையை மேலாம் வாழ்க்கையாக மாற்றி அமைத்துவிடுகிறார்கள். அவர்களுடைய பார்வையாலும், சங்கல்பத்தாலும் பிறரை மாற்றி அமைக்கும் வல்லமை அவர்களுக்கு உண்டு. ஏசுநாதர் தம் வாழ்க்கையில் இந்தச் சக்தியை வெளிப்படுத்தியிருக்கிறார். ஸ்ரீகிருஷ்ணனும் அர்ஜுனனுக்கு ஞானக் கண்ணை நல்கி விசுவரூபதர்சனத்தைப் பார்க்க அருள்புரிந்தார். அவதார புருஷர்கள் தங்களுடைய மகிமையை இங்ஙனம் விளக்கியிருக்கிறார்கள். தங்களைப் பல வடிவங்களில் தோற்றுவித்துக் கொள்ளவும் செய்திருக்கிறார்கள். பீட்டர், ஜேம்ஸ், ஜான் ஆகியோர்களுக்கு முன்னால் இயேசுநாதர் தம் உருவத்தை மாற்றிக் காட்டியிருக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணனும் அர்ஜுனனுக்கு விசுவரூபதர்சனத்தில் தம்மைப் பல வடிவங்களாக மாற்றிக் காட்டியிருக்கின்றார். இறைவனும் பக்தன் விரும்புகின்ற வடிவங்களில் தம்மைத் தோற்றுவித்துப் பக்தனுக்குக் காட்சி கொடுக்கிறார் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார்.

கடவுள் தம்மை ஏன் அடிக்கடி மனிதனைகத் தோற்றுவித்துக் கொள்ளுகிறார் என்ற கேள்வி எழலாம். அப்படி அவர் மனிதனைகத் தோற்றுவித்துக்கொள்வதன் மூலம் என்ன காரியம் நிறைவேறுகிறது? சரித்திர வாயிலாகப் பார்க்கிறபொழுது ஆத்மீக அலை மேலெழுவதும், கீழே இறங்குவதும் நிகழ்ந்துகொண்டே இருப்பது தெரியும். ஆத்மீகம் குன்றிப்போய் சத்தியமும், தர்மமும் புறக்கணிக்கப்படுகின்ற பொழுது அவதாரபுருஷர் உலகத்தில் தோன்றி மக்களுடைய உள்ளத்தில் ஆத்மீக ஒளியை உண்டுபண்ணுகின்றார். ஸ்ரீ கிருஷ்ணன் பகவத் கீதையில் பகர்ந்திருப்பதாவது:

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानं अधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥
परित्राणाय साधूनाम् विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத
அப்யுத்தான மதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்
பரித்ராணய ஸாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம்
தர்மஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே

பாரதா! எப்பொழுதெல்லாம் அறம் அழிந்து போய் மறம் மேலெழுகிறதோ அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக்கொள்கின்றேன்.

நல்லாரைக் காப்பதற்கும், கெட்டவரைஒழிப்பதற்கும், அறத்தை நிலைநாட்டுவதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன்.

ஸ்ரீ கிருஷ்ணனுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குப் புத்தர் தோன்றினர். புத்தர் அவதாரம் செய்தபொழுது ஆத்மீகம் இந்தியாவில் மிகக் கீழ்நிலையில் இருந்தது. மதச் சடங்குகளைச் செய்வதும், உயிர்ப் பலியிடுவதுமே மதம் என்று அக்காலத்தில் மக்கள் நம்பி இருந்தனர். ஞானனுபவம் பெறுவது மதம் என்பதை மக்கள் மறந்திருந்தார்கள். மக்களுடைய உள்ளத்தில் அன்பை வளர்த்து, கீழ்மையை அகற்றினர் புத்தர். உயிர்களிடத்து அன்பு வேண்டும், உண்மையை அறிதல் வேண்டும் என்பதைப் புத்தர் மக்களுக்குப் புகட்டினர். மதத்தின் பெயரால் நிகழ்ந்து வந்த உயிர்ப்பலியை நிறுத்தினர். அங்ஙனமே ஏசுநாதர் காலத்தில் புறச்சடங்குகள் அக உண்மையை அறிய ஒட்டாது தடுத்துவந்தன. யூத மதத்துக்குப் புத்துயிர் ஊட்டுவதற்கும், அதைப் புதுப்பிப்பதற்கும் ஏசுநாதர் அவதரித்தார்.

ஒவ்வொரு காலத்திலும் நிலையான கொள்கைகளை மக்களிடையே நிலைநிறுத்துவதற்குத் தெய்வத்தின் அவதாரம் வேண்டப்படுகிறது. அவதார புருஷர்கள் தங்களுடைய வாழ்க்கையின் மூலம் வாழ்வைப் பூரணத்துவம் உடையதாக்குவதெப்படி என்பதைக் காட்டித் தருகிறார்கள். பரம்பொருளே மானுட வடிவெடுத்து வந்து பரிபூரண வாழ்வைக் காட்டித் தருகிறது. சாசுவத உண்மைகளை அந்தந்தக் காலத்துக்கேற்றவாறு புதிய முறையில் அவதார புருஷர்கள் விளக்கிக் காட்டுகிறார்கள்.

அவதார புருஷர்கள் மானுட சரீரம் எடுக்கும்பொழுது பசி, தாகம், நோய், மரணம் முத

விய குறைகளுக்குட்பட்டவர்களாக இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் இவ்வுலகில் சரீரம் எடுத்து வருவதற்கும், மற்றவர்கள் சரீரம் எடுத்து வருவதற்கும் வித்தியாசம் உண்டு. ஏசுநாதர் பகர்ந்திருப்பதாவது: "சாதாரண மக்களாகிய நீங்கள் கீழிருந்து பரிணமித்து மேலே வந்திருக்கிறீர்கள். நான் மேலிருந்து கீழிறங்கியிருக்கின்றேன்." வேதாந்தம் பகர்வதாவது: "சாதாரண மக்கள் தங்கள் வினைப் பயனைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பிறப்பெடுத்து வந்து ஆசைக்கு உட்பட்டு செயல் புரிந்து வருகிறார்கள். அறியாமை என்னும் தளையில் கட்டுண்டுக்கிடகிறார்கள். மாயை என்னும் சக்திக்கு வசப்பட்டவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். பிரகிருதியின் அடிமைகளாக அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் அவதார புருஷர்கள் கர்மவசப்பட்டுப் பிறந்தவர்களல்லர். அவர்களுக்கு ஆசையில்லை; வினையில்லை; மாயைக்கு அவர்கள் வசப்படாது மாயையைத் தங்கள் வசத்தில் வைத்திருக்கிறார்கள்."

ஏசுநாதரையோ, கிருஷ்ணரையோ, புத்தரையோ வழிபடுவது கடவுள் வழிபாட்டுக்கு நிகராகிறது. அந்த வழிபாடு மனிதனைக் கடவுளாக வைத்து வழிபடுவதன்று; கடவுளையே வழிபடுவதாகின்றது. பரம்பொருளுக்கு மானுட வடிவம் கொடுத்து அவதார புருஷர்கள் மூலம் வழிபடுகின்றோம்.

இந்து ஒருவன் ஏசுநாதரைக் கடவுளின் அவதாரமாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறான். ஸ்ரீ கிருஷ்ணன் போன்ற அவதார புருஷர்களில் ஒருவராக ஏசுவையும் ஏற்றுக்கொள்ளுகிறான். ஆனால் ஏசு ஒருவர் தாம் கடவுளின் அவதாரம் என்பதை இந்து ஏற்றுக்கொள்வதில்லை. அவதார புருஷர்கள் மாறுபட்ட கருத்துடையவர்களல்லர். உண்மை என்றைக்கும் மாறாதது. எனவே உண்மையைப் பலவாகக் கூற முடியாது. கடவுளைப் பற்றிய உண்மையை ஏசுநாதர்தாம் கூறி இருக்கிறார் என்றால் அது உண்மையாகாது. ஏசுநாதருக்கு முன்பும் அவ்வுண்மை இருந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அது உண்மையாக இருக்க முடியும். ஆகையினால் தான் ஏசுநாதர் "அறநெறியை அழிக்க வரவில்லை; அதனை நிறைவேற்ற வந்திருக்கிறேன்" என்று பகர்ந்துள்ளார். உண்மையை மக்களுக்கு ஞாபகமூட்டவும் காலத்துக்கேற்றவாறு அதைப் புதிய முறையில் மக்களுக்கு வழங்கவும் ஏசுநாதர் அவதரித்தார்.

நீரின் தர்மம் நனைப்பதாகும், அக்னியின் தர்மம் தகிப்பதாகும், காற்றின் தர்மம் உலர்த்துவதாகும். இயற்கையில் இங்ஙனம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தர்மம் இருக்கிறது. அவைகள் யாண்டும் தத்தம் தர்மங்களிலிருந்து பிசகாதவைகளாக இருக்கின்றன. அதே போன்று மனிதனும் தன்னுடைய தர்மத்தினின்று பிசகாதிருக்கவேண்டும். மனிதனுடைய தர்மம் மனதை மாண்படையச் செய்வதாகும். மனதைத் திருத்தியமைப்பதற்கு மனிதன் பிறந்திருக்கிறான். மனதை மேலான மனதாக்குபவன் அறநெறி ஒழுகுபவன் ஆகின்றான். மனதைக் கீழான இயல்புடையதாக்குபவன் அறநெறியினின்றும் பிசகுபவனாகின்றான். தன் மனதை மேலான மனதாக்குபவன் பிறரையும் மேல் நிலைக்குப் போவதற்குத் தூண்டுபவனாகின்றான். தன் மனதைக் கீழ்மையுடையதாக்குபவன் பிறருடைய மனதையும் கீழ்மையுற்றுப் போவதற்குத் தூண்டுபவனாகின்றான். தன்னையும் உயர்த்திப் பிறரையும் உயர்த்துபவன் அறநெறிப்பட்ட வாழ்வு வாழ்பவனாகின்றான். கீழான உணர்ச்சியைக் கட்டுப்படுத்தாது மனதைச் சிற்றின்ப விஷயங்களில் உழலச் செய்பவன் அறநெறியினின்றும் பிசகுபவனாகின்றான். கீழான உணர்ச்சியை மேலானதாக மாற்றியமைத்து மனதை மேலான லட்சியத்தில் செலுத்துபவன் அறநெறி வாழ்பவனாகின்றான். அவதார புருஷர்கள் அறவாழ்வை விளையாட்டுப் போன்று வாழ்கின்றார்கள். அறவாழ்வை மக்களுக்கு எடுத்துப் புகட்டவே அவதார புருஷர்கள் மானுட வடிவம் தாங்கி வருகிறார்கள். அவர்கள் மேலான வாழ்வைப் புகட்டுவதோடு நின்றுவிடாமல் தாங்களே வாழ்ந்தும் காட்டுகிறார்கள். மக்கள் அவர்களுடைய வாழ்வைப் பின்பற்றித் தங்களை மேலோர்களாக்கிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏசு நாதரின் மேற்கூறிய உபதேசம் இக்கருத்துக்களை விளக்குகிறது.

கவிஞன்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் மதுரைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

கவி என்னும் சொல் கடவுளையே குறிக்கும். எல்லாம் அறிந்தவர் என்பது அதன் பொருள். வெளிச்சத்துக்கு உறைவிடமாகச் சூரியன் இருப்பது போன்று பேரறிவுக்கு உறைவிடமாக இறைவன் இருக்கின்றார். கவி என்னும் சொல் மக்களுள் சிறப்புற்றிருந்த ஒருவருக்கும் வழங்கப்பட்டது. கவி என்னும் சொல் விரிந்து 'கவிஞன்' என்பதும் ஆயிற்று. மக்களுள் கவிஞன் யார் என்ற கேள்வி அடுத்தபடியாக எழுகின்றது. கடவுளிடத்திருக்கும் மெய்யறிவு கவிஞனிடத்திலும் இருக்கிறது. கடவுள் சூரியன் போன்றவர் என்றால் கவிஞன் சூரிய கிரணம் போன்றவனாகின்றான். சூரியன் எங்கும் பிரகாசத்தைத் தருகிறான். சூரிய கிரணமோ ஓர் அறைக்கு வேண்டிய வெளிச்சத்தை மட்டும் தருகிறது. சூரிய கிரணம் சூரியனுக்கு ஒப்பாகிறது. சூரிய கிரணம் சூரியனுக்கு ஒப்பாவது போன்று கவிஞன் கடவுளுக்கு ஒப்பாகின்றான். நிறைஞானம் கடவுளிடத்திருக்கின்றது. நிறைஞானத்தின் சிறு பகுதி கவிஞனிடத்திருக்கிறது. கவிஞனிடமிருப்பது மெய்யறிவின் சிறு பகுதியே எனினும் அதுவும் மெய்யறிவே. மெய்யறிவு வேண்டுபவர் யாவரும் கடவுளை அணுக முடியாது. ஆனால் மெய்யறிவு வேண்டுபவர் கவிஞனை எப்பொழுது வேண்டுமென்றாலும் அணுகலாம். மெய்ப்பொருளை அறிந்துகொள்ளும் பகுதி எல்லாரிடத்திலும் இல்லை. மெய்யறிவைப் பெறத் தகுதியற்றவர்களாக இருக்கும் மக்களுக்குக் கவிஞன் துணையாக இருக்கின்றான். உள்ளதை உள்ளவாறு காண முயலுகின்றவர்களுக்குக் கவிஞன் உண்மையைப் பற்றிய முழுக்காட்சியைக் கொடுக்கின்றான். அறிவுத்துறையில் கவிஞன் யாண்டும் மக்களுக்கு ஆசிரியனாக அமைகின்றான்.

கடவுளிடத்திலுள்ள மற்றொரு சிறப்பைக் கவிஞனிடத்துக் காணலாம். கடவுள் உலகைப் படைத்துள்ளார். கவிஞன் கடவுள் படைத்துள்ள உலகுக்கு விளக்கம் கொடுத்துள்ளான். ஒரு பொருளை உள்ளபடி விளக்குபவன் அப்பொருளை உண்டுபண்ணியவனுக்குச் சமானமாகின்றான். உண்மையை விளக்குவதற்குக் கவிஞனுக்கு மொழி கருவியாக இருக்கிறது. கவிஞன் கையாளும் மொழி உயிருடையதாக இருக்கிறது. மற்றவர்கள் கையாளும் மொழி உயிரற்றதாக இருக்கிறது. நாம் மனிதனைப் போன்று ஒரு பொம்மை செய்து அதை நடக்கவும் பேசவும் செய்துவிடலாம். ஆனால் அந்தப் பொம்மைக்கு உயிர் கொடுக்க முடியாது. மானுட உடல் உயிருடன் கூடியது. மானுட உடலின் நடமாட்டம் அது உயிருடன் கூடியதற்கு விளக்கமாகிறது. கவிஞன் வாயினின்று ஊற்றெடுத்து வரும் கவிதையும் உயிர்த்தத்துவம் நிறைந்ததாக இருக்கிறது. மனிதன் ஒன்றை விளக்க முயலுகின்றான். ஆனால் அதைச் சரியாக விளக்க முடியாது திண்டாடுகின்றான். ஆனால் கவிஞன் ஒரு பொருளை விளக்க முயலுகின்றபொழுது அதற்கு நல்ல விளக்கம் தந்து விடுகின்றான். மக்கள் மனதில் மறைந்து கிடப்பதைக் கவிஞன் நன்கு மிளிரும்படி செய்கின்றான். நம் அமைப்பில் உடலும் உயிரும் சேர்ந்து வாழ்வாக வடிவெடுத்திருக்கிறது. கருத்தும் அதற்கேற்ற சொல் சித்திரமும் சேர்ந்து கவிஞனுடைய சிருஷ்டியில் கவிதையாக உருவெடுக்கிறது. எனவே கவிஞன் ஒரு நல்ல சிருஷ்டி கர்த்தா ஆகின்றான்.

கவிஞனை ஓர் அரசனுக்கு ஒப்பானவன் என்றும் சொல்லலாம். பலவிதங்களில் கவிஞன் அரசனுக்கு மிக்கானாகவே இருக்கின்றான். புவியரசன், கவியரசன் என்று இருதரத்தார் இருக்கின்றனர். அவர்களைச் சீர்தூக்கிப் பார்ப்போம். மண் ஆள்பவன் புவி அரசன் எனப்படுகின்றான். மனதை ஆள்பவன் கவியரசன் ஆகின்றான். மண் ஆள்பவனுக்குத் தன் தேசத்தில் மட்டும் சிறப்பு உண்டு. மேலும் அவன் ஆட்சி புரிந்து வருகிற காலத்தில் மட்டும் அவனுக்கு ஆதிக்கம் இருக்கிறது. அவனுடைய ஆட்சிக் காலத்திற்கு முன்போ பின்போ அவனுக்கு ஆதிக்கம் இல்லை. எனவே புவிராஜனுடைய ஆதிக்கம் இடத்திலும், காலத்திலும் அடங்கி இருக்கிறது. கவிராஜனுடைய ஆதிக்கம் ஓரிடத்திலோ, ஒரு காலத்திலோ கட்டுப்பட்டிருப்பதில்லை. கவிஞனுடைய உடல் மறை

வுக்குப் பின்பும் அவனுடைய ஆதிக்கம் இருக்கிறது. எனவே கவிஞனுடைய ஆதிக்கம் விரிவடைந்து கொண்டே போகிறது. கவிஞன் ஒருவனுக்கு இத்தனை விதச் சிறப்புக்கள் இருப்பதால் அவனை மக்களுள் மேலோன் என்று சொல்லாது வேறு என்ன சொல்ல முடியும்!

ஓர் அறைக்குள்ளிருந்துகொண்டு ஒரு மனிதன் ஜன்னல் வழியாக வெட்டவெளியைப் பார்க்கின்றான். அவனுடைய உடல் அறைக்குள் அடைபட்டிருக்கிறதெனினும் அவனுடைய நோக்கு வெட்டவெளியில் அகண்டாகாரத்தில் போகிறது. அவன் காணும் காட்சியைப் பரந்த காட்சி என்று பகரலாம். அவனுடைய நோக்குக்கு ஓர் எல்லை இல்லை. கவிஞனுடைய நோக்கும் அத்தகைய எல்லையற்ற நோக்காக இருக்கிறது. எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளிலுள்ள மெய்ப்பொருளையே கவிஞன் காண்கின்றான். மெய்ப்பொருளின் காட்சி எல்லையில் அடங்குவதில்லை. மெய்ப்பொருள் மொழியிலும் அடங்கிவிடுவதில்லை. ஆனால் கவிஞன் மெய்ப்பொருளை மொழியில் அடங்கியது போன்று அமைத்துக் காட்டுகின்றான். கவிஞனின் கற்பனை சக்திக்கு அளவில்லை. கவிஞன் தன் கற்பனையின் திறமையைக்கொண்டு பொருள் அற்றது என்று மற்றவர்களால் கருதப்படுவதைப் பொருள் உடையதென்று விளக்கிக் காட்டுகின்றான். கீழானதென்று மற்றவர்களால் புறக்கணிக்கப் படுவதனிடத்து மேன்மை மிளிர்வதைக் கவிஞன் நிரூபித்து விடுகின்றான். உலகெங்கும் அழகு ஒன்றே நிறைந்திருக்கிறது. ஆனால் இவ்வுண்மை எல்லார்க்கும் விளங்குவதில்லை. அழகை அழகுபடுத்திக் காட்டுவது கவிஞனின் தனிச் செயல். அழகைக் காணும் கண் இல்லாதவர்களுக்கு அதற்கேற்ற கண்ணை அவன் வழங்குகின்றான். கவிஞனைத் தெய்வப்பெற்றி பெற்றவனென்று போற்றுதலில் பொருள் உண்டு.

உலகை எல்லாம் உள்ளபடி விளக்கிக்காட்டுகின்ற கவிஞன் மானுட வாழ்க்கையையும் உள்ளபடி விளக்கிக் காட்டுகிறான். நல்ல மருத்துவன் நோயாளி ஒருவனைப் பிடித்துள்ள நோய் இன்னதென்று காட்டித் தருகின்றான். நோயைக் காட்டித் தருவதோடு நோய்க்கேற்ற மருந்தையும் அவன் வழங்கிவிடுகின்றான். உயிர்களனைத்தும் வாழ்க்கையில் வாஞ்சை வைத்திருக்கின்றன. ஆனால் உயிர்களுக்கு வாழ்வு நிறைவாழ்வாக அமையவில்லை. வாழ்வில் குறைபாடுகள் இருக்கின்றன. வாழ்விலுள்ள குறைபாட்டை மனிதன் உணர்வது போன்று மற்ற உயிர்கள் உணர்வதில்லை. மனிதன் குறைபாட்டை உணர்வதால் அவனுக்கு அமைதி கிடைப்பதில்லை. வாழ்வில் அவனுக்குச் சஞ்சலங்கள் அதிகமாக இருக்கின்றன. எண்ணற்ற கவலைகட்கு மனிதன் உட்படுகின்றான். நெஞ்சில் கவலையைப் பெருக்கிக்கொண்டிருப்பதுதான் அறியாமை படைத்த மனிதனுடைய வாழ்வாகிறது. "எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே" என்று கவிஞர் ஒருவர் கூறுகிறார். மனிதன் இன்பத்தை நாடுகின்றான். மனிதனுக்கு இன்பத்தை நல்குவதுபோன்று வாழ்வு தென்படுகின்றது. ஆனால் வாழ்வின் மூலம் மனிதனுக்குத் துன்பம்தான் கிட்டுகிறது. துன்பத்துக்கிடையில் அமைதியுற்றிருக்க முடியாது. அமைதியோடுகூடிய வாழ்வுவேண்டுமென்று எல்லாரும் ஆசைப்படுகின்றனர். ஆனால் அமைதியான வாழ்வு மனிதனுக்குக் கிடைப்பது அரிதிலும் அரிதாக இருக்கிறது. வாழ்வில் அமைதி இல்லை என்பதை யாவரும் அறிகின்றனர். ஆனாலும் அமைதியைப் பெறுவது எப்படி என்பது யாருக்கும் விளங்குவதில்லை. அமைதியின்மை என்னும் தீராத மனநோய்க்குக் கவிஞன் ஒருவனே நல்ல மருந்து கொடுக்கின்றான். திருவள்ளுவர் என்னும் கவிஞன் துன்பத்தைப் போக்குவதற்குரிய உபாயத்தை

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

என்னும் குறளில் காட்டித் தந்துள்ளார். நீர் வேட்கையால் தவிப்பவனுக்கு நீர் கிடைப்பது போன்றும் உயிரை இழக்கும் தறுவாயிலிருப்பவனுக்கு உயிர் கிடைப்பது போன்றும், துன்பத்தில் உழல்பவனுக்கு ஈண்டு கவிஞனுடைய ஞான மருந்து கிடைக்கிறது. சுவாசிக்கும் காற்று வேண்டுமென்று அதற்காக யாரும் அலைந்து திரிவதில்லை. அக்காற்றை வேண்டா

மென்று யாரும் விலக்கி விடுவதுமில்லை. இயற்கையில் உள்ள காற்றை ஏற்று மனிதன் உயிர் வாழ்ந்து வருகின்றான். காற்றைக் குறித்து அவன் கவலைப்படுவதில்லை. அதேபோன்று மனிதன் சஞ்சலமற்ற நிலையைப்பெற்றுவிட முடியும். மனிதனுக்குத் தேவையான பொருள்கள் எல்லாம் உலகில் வேண்டியவாறு கிடைக்கின்றன. உலகிலுள்ள பொருள்களைத் தனக்கென்றே உரிமை பாராட்டுவதால் போட்டியும், பொருமையும், போரும் ஏற்படுகின்றன. பசி, பிணி, சாக்காடு ஆகியவைகள் நமக்குப் பெரு நன்மை விளைவித்துக் கொண்டிருக்கின்றன. ஆனல் மனிதன் இதை அறிவதில்லை. மனிதன் அவைகளை வேண்டாமென்று விலக்க முயல்கின்றான். அதனல் அவனுக்குத் துன்பம் வருகின்றது. இன்னது வேண்டும், இன்னது வேண்டாம் என்று எண்ணுபவர்கள் கவலைப்படுகின்றார்கள். மானுட வாழ்வுக்கு இன்றியமையாதவைகளை இயற்கை ஓயாது வழங்கிக்கொண்டிருக்கிறது. அப்போதைக்கப்போது அமைவதையே அனுபவித்து அமைதியுற்றிருக்கக் கற்றுக்கொண்டால் துன்பம் ஒன்றும் இல்லை என்பதைக் கவிஞன் தெளிவுபட விளக்கியுள்ளான். அக்கோட்பாட்டைப் பின்பற்றி வாழும் மனிதனைக் காண்பதுதான் அரிதினும் அரிதாக இருக்கிறது.

இதே கோட்பாட்டை வேறொரு கவிஞன் இன்னொரு விதத்தில் விளக்கியுள்ளான். அவன் பகர்வதாவது: "வேண்டா விருப்பும் வெறுப்பும்; அந்த வில்லங்கத்தாலே விளையும் ஜனனம், ஆண்டான் உரைத்தபடியே சற்றும் அசையாது இருந்துகொள் அறிவாகி நெஞ்சே." அமைதிக்கு இருப்பிடம் எங்கே இருக்கிறது என்பதை ஐயம் திரிபு அற இந்த அருட் கவிஞன் விளக்கிக் காட்டியுள்ளான். அமைதியைப் பெற்றே ஆகவேண்டும் என்ற ஆர்வம் அவனுடைய உள்ளத்தில் ஊற்று எடுத்துக் கொண்டிருந்தது. இவ்வமைதியைக் கவிஞர்கள் பல பாங்குகளில் விளக்கியுள்ளார்கள். வாழ்க்கையில் அமைதியே அவர்களுடைய குறிக்கோளாக இருந்து வந்தது. உலகத்தவர் புற உலகைத் திருத்தி அமைப்பதால் அமைதி வந்துவிடும் என்று யாண்டும் எண்ணி வருகின்றனர். அப்படி அவர்கள் எண்ணுவது சரியன்று. உள்ளத்தை ஒழுங்குப்படுத்துவது தான் அமைதியைப் பெறுவதற்கு உற்ற உபாயமாகும். உள்ளம் ஒழுங்காகி விட்டால் உலகம் எல்லாம் அமைதியுற்று இருப்பது விளங்கும். வெவ்வேறு நிறங்களுடைய கண்ணாடிகளைப் போட்டுக்கொண்டு பார்த்தால் அந்நிறங்கள் உலகத்தில் தென்படுவதைக் காணலாம். மேடுபள்ளமுள்ள கண்ணாடிகளைப் போட்டுக்கொண்டு உலகைப் பார்த்தால் உலகிலுள்ள பொருள்கள் கோணல் கோணலாகத் தெரியும். உண்மையில் கோணல் உலகில் இல்லை. உலகைப் பார்ப்பதற்குக் கருவியாக அமைந்துள்ள கண்ணாடியினிடத்துக் கோணல் இருக்கிறது. அதே போன்று மனம் என்னும் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு நாம் உலகைப் பார்க்கின்றோம். நல்ல மனமுடையவர்க்கு உலகமெல்லாம் நலமுடையதாகத் தென்படுகிறது. கெட்ட மனமுடையவர்க்கு உலகமெல்லாம் கேடுடையதாகத் தென்படுகின்றது. மனம் அலைந்து திரிந்து கொண்டிருந்தால் உலகத்தில் அமைதியைக் காணமுடியாது. மனம் அலையாது அமைதியுற்றிருக்கும் பொழுதுதான் வெளியுலகிலும் அமைதியைக் காண்கின்றோம். மனதின் அசைவற்ற நிலையும் அமைதியும் ஒன்று. மனதுக்கு நடுநிலை வந்து விட்டால் அதற்கு என்னென்ன பெருமைகளெல்லாம் வருகின்றன என்பதைப் பற்றிக் கவிஞன் ஒருவன் பகர்ந்திருப்பதாவது:

"நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரும் ஆவர்
நடுவுநின் றார்வழி யானும்நின் றேனே."

மனிதன் அறிந்துகொள்ள வேண்டிய உண்மைகள் எல்லாம் இக்கவிதையில் பொதிந்திருக்கின்றன. ஒரு தடாகத்தில் உள்ள நீர் தெளிவாகவும் தேங்கியும் இருந்தால் அத்தடாகத்தின் அடிப்பாகம் உள்ளபடி தென்படுகிறது. அங்ஙனம் மனம் தெளிவடைந்து தேங்கியிருந்தால் மனத்தகத்தில் இலங்கும் பேரறிவு மனிதனுக்குச் சொந்தமாகி விடுகிறது. ஒருவன் ஞானி ஆவதற்கு மனம் அமைதியுற்றிருப்பதே உபாயமாகிறது. துன்பத்துக்கு இருப்பிடமாக இருப்பதை உலகத்தவர் நரகம் என்கின்றனர். உலகத்தவர் கூறும் நரகம்

மனிதனுடைய உள்ளத்திலேயே இருக்கின்றது என்கின்றான் கவிஞன். கொந்தளிப்புடைய மனது நரகம் ஆகிவிடுகிறது. மனத்தகத்துக் கொந்தளிப்பு அடங்கி நடுவுநிலை ஏற்படும்பொழுது நரகமும் மாயமாய் மறைந்து போகிறது. தேவர்கள் எனப்படுபவர் மக்களைவிட மேலோர் ஆகின்றனர். மக்களே தேவர்களாகின்றார்கள் என்பதுதான் கவிஞன் கருத்து. மனம் அலையாது நடுவு நின்று விடுங்கால் அந்த நடுவு நின்ற மனதையுடைய மனிதன் தேவன் ஆகிவிடுகின்றான். இது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த பெருநெறி. அமைதியை வேண்டுபவர் மனதை நடுநிலைக்குக் கொண்டுவரவேண்டும்.

மனத்தகத்து அமைதியை அடையப் பெற்றிருப்பவர்க்கு உலகக் காட்சி அடியோடு மாறி விடுகிறது. அண்டமனைத்தும் சாந்த சொரூபமாக இருப்பதை அவர்கள் காண்கின்றனர். மன அமைதியில் உறுதி பெற்றுள்ள கவிஞர்கள் எங்கும் அமைதியைக் கண்டு அவ்வமைதியைக் கவிகளாகவும் பாடி இருக்கின்றார்கள்.

ஓம் த்யௌ சாந்தி: அந்தரிக்ஷம் சாந்தி:
ப்ருதிவிசாந்தி: ஆப: சாந்தி: ஒஷதய சாந்தி:
வனஸ்பதய: சாந்தி: விஸ்வே தேவா சாந்தி:
ப்ரம்ம சாந்தி: சர்வம் சாந்தி:

விண்ணுலகில் இருப்பது அமைதி. மண்ணுலகில் இருப்பது அமைதி. இடைவெளியில் இருப்பது அமைதி. நீரில் இருப்பது அமைதி. செடிகளில் இருப்பது அமைதி. மரங்களில் இருப்பது அமைதி. அண்டங்களில் எங்கும் இருப்பது அமைதி பரம்பொருளில் இருப்பது அமைதி. அனைத்திலும் அமைதியே உள்ளது. அமைதியை அடையப்பெற்றவர் அமைதியையே யாண்டும் காண்கின்றனர். அமைதிக்கு நாம் பாத்திரமாவோமாக.

மனிதனை உயர்நிலைக்கு உயர்த்துவது அவன் எண்ணும் எண்ணமாகும். அவன் எண்ணும் எண்ணமே அவனைக் கீழ் நிலைக்கும் எடுத்துச் செல்கிறது. எண்ணம் மிக வலிவு படைத்தது. எண்ணத்திற்கு நிகரான சக்தியை இயற்கையில் எங்குத் தேடிப்பார்த்தாலும் காணமுடியாது. எண்ணம் மனிதனுடைய இயல்பை எப்படி வேண்டுமென்றாலும் மாற்றி அமைக்கும். நானாவிதமான செயல்களில் எண்ணம் மனிதனைத் தூண்டி விடுகிறது. மனிதன் உலகுக்கு நலம் ஒன்றைச் செய்து சாதிக்கிறான் என்றால் அந்த நலத்தைப்பற்றி அவன் முதலில் எண்ணியாக வேண்டும். அரிய, பெரிய செயல்கள் அனைத்திற்கும் எண்ணமே முதற்காரணமாக இருக்கின்றது. உலக மக்களைத் துன்புறுத்தும் கேடு ஒன்றைக் கயவன் ஒருவன் செய்தால் அக் கேடு செயலாக வடிவெடுப்பதற்கு முன்பு எண்ணமாக அவன் உள்ளத்தில் இடம்பெற்றாக வேண்டும். ஆக, நலம், கேடு ஆகிய இரண்டுக்கும் எண்ணமே முதற்காரணமாக இருக்கின்றது. எண்ணத்திற்கு ஏற்ப உலகம் மேல் நிலையை அடைகிறது அல்லது தாழ்வடைகிறது. கீழான எண்ணங்கள் உலகில் மிக எளிதில் பரவிவிடுகின்றன. அதனால் மக்களுக்குத் துன்பங்கள் விளைகின்றன. தீய எண்ணங்கள் பெரும்பாலோர் உள்ளத்தில் எப்படியோ புகுந்துவிடுகின்றன. மனம் என்னும் கோட்டைக்குள் மறைந்திருந்துகொண்டு தீய எண்ணங்கள் தீமைகள் பலவற்றைச் செய்து வருகின்றன. ஆனால் தீய எண்ணங்களுக்கு எந்த இடத்திலும் நிரந்தரமான ஆதிக்கம் இல்லை. தீங்கு விளைவிக்கும் எண்ணங்களைத் தகர்த்தெறியமுடியும். அதற்கேற்ற உபாயமும்உண்டு. வீடு முழுவதையும் சூழ்ந்துள்ள இருளைப் போக்குவதற்கு ஒரு விளக்குப் போதுமானது. விளக்கை ஏற்றி வைத்ததும் அறையினுள் உள்ள இருள் இருக்குமிடம் தெரியாது மறைந்து போகிறது. நல்லெண்ணம் என்னும் ஞானவிளக்கு ஏற்றி வைத்தால் உள்ளத்தினின்று கெட்ட எண்ணங்கள் தாமே அகன்று போய் விடுகின்றன.

கவிஞன் நல்ல எண்ணத்திற்கு உருவம் கொடுக்கின்றான். படைப்புக் கடவுளாகிய பிரம்மாவிற்கும் கவி என்னும் பெயருண்டு. பிரம்மா உயிர்களுக்கேற்ற உடல்களை உண்டு பண்ணிக்கொண்டு இருக்கிறார். உடல் இல்லாது உயிர் தானாக இயங்காது. உடலின் மூலமாக அன்றி உயிரைத் தனியாக மற்றவர்கள் காணமுடியாது. கவிஞன் மொழியைக் கையாளுகின்றான். நல்ல எண்ணத்திற்கு ஏற்ற கவிதை என்னும் உருவத்தைக் கவிஞன் படைக்கின்றான். உடலிலே உயிர் ஒளிர்ந்தால் அது வாழ்வு என்னும் பெயர் பெறுகிறது. வாழ்வுக்குரிய உடல் தாறுமாறாக அமைக்கப் பெற்ற

தன்று. உடலில் ஒழுங்குப்பாடு இருக்கின்றது. நல்ல உடல் வாழ்வு உயிர் ஓவியம் என்னும் பெயர் பெறுகிறது. சீரியகருத்தும் அதற்கேற்ற செஞ்சொல் அமைப்பும் சேர்ந்து காவியம் எனப்படுகிறது. கவிதை என்பது உடலோடு கூடிய உயிர் வாழ்க்கைக்கு ஒப்பானது. சொல் அழகும், பொருள் அழகும் கவிதையில் பொலி கின்றன. ஓர் உயிர்க்குரிய உடலை மாற்றி அமைக்க முடியாது. அங்ஙனம் சீரிய கவிதை யின் சொல்லமைப்பையும் யாரும் மாற்ற முடியாது. மொழி என்னும் அழகிய உடலிலே மேலாம் கருத்து என்னும் உயிர் திகழ்ந்தால் அது கவிதையாகிறது. அழகிய மொழியினை யும் உயர்ந்த கருத்தையும் அமைத்துக் கவி தையை உண்டுபண்ணுபவனைச் சிருஷ்டி கர்த்தா என்றுதானே பகரவேண்டும்.

இளம்பெருவழுதி என்பவன் அத்தகைய சிருஷ்டிகர்த்தாக்களுள் ஒருவனாவான். அவன் சங்கப்புலவர் கூட்டத்தைச் சேர்ந்தவன். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அவன் வாழ்ந்திருந்தான். இளம்பெரு வழுதி கவிராஜ னாக இருந்ததுபோன்று புவிராஜனாகவும் இருந் தான். அக்காலத்திய பாண்டிய நாட்டு மன் னர்களுள் அவனும் ஒருவனாவான். தீங்கு நிறைந்த இத்தொல் உலகம் ஏன் தட்டழிந்து போகவில்லை என்று அவன் பலகால் எண்ணிப் பார்த்தான். இத்தகைய எண்ணத்தில் அவன் மூழ்கி இருந்தமையால் அவனைத் தவராஜன் என்று பகரலாம். தூய எண்ணத்தினின்று அவன் உள்ளத்தில் உண்மை உதயமாயிற்று. உடனே அது ஒரு கவிதையாக வடிவெடுத்தது. அக்கவிதையில் எட்டு அங்கங்கள் அமைந்திருந் தன. அஷ்டாங்கயோகம் போன்று அஷ்டாங் கங்களை உடைய சீரிய சமூக அமைப்பை அக் கவிதையானது படம் பிடித்துக் காட்டுகிறது. அக்கவிதையின் ஒவ்வொரு அங்கமும் ஒரு தனிச் சிறப்புடையது. பண்புடைய சமூகம் என்னும் பூங்காவில் வித விதமான விருக்ஷங் கள் வளர்ந்திருந்தால்தான் அதன் பொலிவு உச்சநிலையை அடைய முடியும். புறநானூறு என்னும் சங்க நூலில் இளம்பெருவழுதி என் னும் புலவன் எட்டுவிதமான அழியாத விதை களைக் கொடுத்துள்ளான். அவற்றை எப் பொழுது வேண்டுமென்றாலும் மரமாக்கலாம். அவைகளை இக்காலத்திய புலவர்கள் மரமாக் கலாம். அப்படி மரமாக்கும் கவிதைகளில் இருந்து செவிக்கினிய நல்லுணவு கிடைக்கும்.

புறநானூறு என்னும் சங்கநூலில் இளம் பெருவழுதி என்னும் கவிஞன் தந்துள்ள கருத் துக்களை ஆராய்வோம். இவ்வுலகம் கேடுடைய தாக வெளிப்பார்வைக்குத் தோன்றுகிறது. கேடுடையது அழிந்துபட்டுப்போவது திண் ணம். ஆனால் இவ்வுலகமோ அழியாது நிலை பெற்று இருக்கிறது. "உண்டாலம்ம இவ்வுல கம்" என்று இளம்பெருவழுதி பகர்ந்துள்ளார்.

"இந்திரர் அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலர்"

என்பது வழுதியின் கோட்பாடு. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது ஒரு கவிஞனின் கோட்பாடு. நல்லார் யாண்டும் மன்னுயிர்களின் இன்பத்தையே தங்களுடைய இன்பமாகக் கருதி வருகின்றார்கள். "புழு ஒன்று மோக்ஷம் அடைவதற்கு என் வாழ்வு பயன்படுமானால் எத்தனை பிறப்புக்கள் எடுப் பதற்கும் நான் ஆயத்தமாக இருக்கின்றேன்" என்று விவேகானந்த சுவாமிகள் பகர்ந்துள் ளார். வயதான பசித்த புலி ஒன்றைப் பார்த்த பெருமகனார் அப்புலியின் பசியைப் போக்கும் பொருட்டுத் தம் உடலையே அதற்கு உணவாகக் கொடுத்தார். அப்பெருமகனார் புத்தராவார். புத்தர் தம் முற்பிறப்புக்களுள் ஒன்றில் தம் உடலை இத்தகைய தியாகம் செய்திருக்கிறார். தங்களுடைய உடலையே மன்னுயிர்களுக்கு உணவாகக் கொடுப்பவர்கள் தங்களுக்குக் கிடைத்த உணவைப் பிறருக்கில்லாமல் எப்ப டித் தனித்து உண்ணுவார்கள்? தாம் உண் பது தேவாமிர்தம் ஆனாலும் சரி; ஏழையர் உண்ணும் கூழானாலும் சரி; வந்த விருந்தைப் புறத்தே வைத்துவிட்டு நல்லார் தாம் தனித்து இருந்து உண்ணமாட்டார். வந்தவர்க்கு வழங் கிய பின்பே தாம் உண்பார். அப்படி வழங் கும்பொழுதும் வந்துவிட்டாரே என்று நொந்து கொண்டு வழங்கமாட்டார். எனவேதான் முனி விலர் என்று வழுதி பகர்ந்துள்ளார். அவர்கள் ஒருபொழுதும் சினந்துகொள்வது இல்லை. சினந்துகொண்டால் சினந்துகொள்பவரையும், உண்ணும் உணவையும் சினம் நஞ்சாக்கிவிடும். அன்போ அதை அமிர்தம் ஆக்குகிறது. இனி

உணவை வழங்கும்பொழுதும் அச்சம் எதையும் அறியாதிருந்தனர். உணவை வழங்காவிட்டால் சில முரடர்கள் தாக்குவார்கள் என்று அஞ்சி அதற்காக உணவை அவர்கள் பங்கிடுவதில்லை. மேலோர் "பிறர் அஞ்சுவது அஞ்சித் துஞ்சலும் இலர்" என்று வழுதி பகர்ந்துள்ளார். எடுத்ததற்கெல்லாம் அஞ்சுவது பாமரருடைய இயல்பாகும். "அஞ்சுவதும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை" என்கிறார் கவிஞர் ஒருவர். "அச்சம் தவிர்" என்று ஆத்திச்சூடி பகர்கிறது.

அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே
இச்சகத்துளோர் எலாம் எதிர்த்துநின்ற போதினும்
அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே.
... ...
... ...
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே

என்று கவிஞன் பாரதி கூறுகின்றார். ஞானிகள் யாண்டும் இந்த மனநிலையில் இருக்கின்றார்கள். ஞானிகளுடைய மனநிலையைக் கவிஞன் பாரதி நன்கு படம் பிடிக்கின்றார். சான்றோர் உலகில் எதைக் குறித்தும் அஞ்சுவதில்லை. சான்றோர் யாண்டும் வீரம் படைத்திருப்பார்கள். பாய்ந்து வரும் பாம்பைப் பார்த்துப் பறவை கீழே விழுந்துவிடும். ஆனால் கீரி அப்படிச் செய்யாது செயல்புரிந்து நிலைமையைச் சமாளிக்கும். புலியைக்கண்டு அஞ்சுதல் மக்களுடைய இயல்பு. ஆனால் வேட்டைக்காரன் புலியை வேட்டையாடிக் கொன்று விடுவான். பாமரர் அடிமைப்படுத்தும் அன்னியர்களைக் கண்டு அஞ்சித் துஞ்சியிருப்பர். சமுகத்தை உய்விக்கவந்த சான்றோர் அங்ஙனம் செய்யமாட்டார்கள். வாளாவிருப்பது சான்றோர் செயலன்று. பயன்படுகிற நல்வாழ்வை அவர்கள் வாழ்கின்றார்கள். நல்வாழ்வைத் தொடர்ந்து புகழ் தானாக வருகிறது. ஒழுக்கம் கெட்டுப் போனால் புகழ் போய்விடும். ஒழுக்கத்தை உயிரினும்உயர்ந்ததாகப் பெரியோர்கள் காப்பாற்றுவார்கள். இதனைப் 'புகழெனின் உயிரும் கொடுக்குவர்' என்கிறார் இளம்பெருவழுதி. பொருளில் ஆசை வைத்தவர் பழிக்கு அஞ்சுவதில்லை. பெரியோர் மரணத்துக்கு அஞ்சுவதில்லை. ஆனால், அவர்கள் பழிக்கு அஞ்சுவார்கள். நாடாளுதல் எவ்வளவு பெரியது எனினும் பழி எனில் அதை ஏற்கமாட்டார்கள். கவலைக்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தால் மனத்திலுள்ள குறையே காரணமென்பது நமக்கு விளங்கும். மனதில் குறை இருக்கும்பொழுது புறத்தில் எவ்வளவு பெற்றிருந்தாலும் கவலை தீராது. மனத்திலுள்ள குறை கவலையாக வடிவெடுக்கிறது. நிறை மனதுக்குக் கவலையில்லை. நிறைமனதுடையாரை "அயர்விலர்" என்கின்றார் வழுதி. மனதில் நிறைநிலை பெற்றவர்கள் அயர்விலாது அருந்தொண்டு செய்துவருகிறார்கள். உடல், உடைமை, உயிர் எல்லாவற்றையும் பெரியோர்கள் தங்கள் பொருட்டு வைத்திருப்பதில்லை. உலகின் பொருட்டே அவர்கள் அவை யாவற்றையும் வைத்திருக்கின்றார்கள். இத்தகைய மேலோர் ஒரு சிலராவது உலகில் வாழ்ந்திருப்பதால் உலகம் கெட்டுப்போகாது இருக்கிறது. என்கின்றார் இளம்பெருவழுதி. இத்தனை வகையான பண்புகளுக்கும் இடம் வைத்துப் பாடியுள்ள புலவனின் கவிதை வருமாறு :

உண்டால் அம்ம இவ்வுலகம், இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலுமிலரே, முனிவிலர்
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர், அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

மேற்கூறிய பண்புகள் சட்டதிட்டத்தால் வருவன அல்ல. உயிர்களனைத்தையும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை என்று உணருதல், அவைகளிடத்து அன்பு கொள்ளுதல், சினம், அச்சம், சோர்வு ஆகியவைகளை அகற்றுதல், நல்வாழ்வே வடிவெடுத்திருத்தல், நிறை மனம் உடைத்திருத்தல் ஆகியவை மேலாம் பண்பின் அறிகுறிகளாம். இங்ஙனம் பண்பட்டவர் ஒருசிலர் இருந்தாலும் உலகம் அழிந்து போகாது. மக்களில் பெரும்பாலோர் இப்பண்பைப் பெற்றுவிட்டால் மண்ணுலகம் மேலானது ஆகிவிடும். இளம்பெருவழுதியின் கவிதையின் கருத்துக்கள் மக்களிடையே வாழ்வாக உருவாகி உலகம் உய்வடைவது ஆகுக!

இருவரின் இணக்கம்

(திரு. V. S. நரசிம்மன்)

இலட்சிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டு வதன் மூலமே ஏனையோரை அத்தகைய நெறியில் ஈடுபடுத்த முடியும். கரடு முரடான கல்லிலிருந்து கலைவண்ணம் திகழும் சிலையைச் சிற்பி செதுக்கி எடுக்கிறான். அங்ஙனம் சிற்றியல்புகள் நிறைந்த மனிதனை மாற்றிப் பேரியல்புகளுக்கு உறைவிடமாகத் திகழச் செய்வதே கல்வியின் நோக்கமாகும். பாரத தேசத்தில் குருகுலத்தில் இத்தகைய கல்வியே புகட்டப் பட்டது. மாணவனின் மனதை மாற்றி அமைக்கும் செயலில் குரு தம் வாழ்க்கையையே முதன்மையானதாகக் காட்டுகின்றார். வெறும் உபதேசத்தால் வியத்தகு மாற்றம் விளைவிக்க இயலாது. ஞானத்தைப் பெறவேண்டுமாயின் குருவினை அணுகி, அவர் அடிபணிந்து, ஐயங்கள் அகலும்வரை கேள்விகள் கேட்டு, அவருக்குச் சேவை செய்யவேண்டும் என்று கீதை மொழிகின்றது. அத்யாத்ம ஞானம் மட்டுமன்றி, லௌகிகக் கல்வியும் இத்தகைய முறையில்தான் வழங்கப்பட்டது. குருகுல முறையை அப்படியே பின்பற்றுவது தற்போது இயலாத காரியம் ஆகும். ஆயினும் இதன் அடிப்படைத் தத்துவத்தைக் கிரகித்து ஏதேனும் ஒரு வடிவில் அதனைப் பின்பற்றுவது அவசியம். 'தமிழ்த்தாத்தா' என்று போற்றப்படும் டாக்டர் உ. வே. சுவாமிநாத அய்யர் குருகுல முறையில்தான் படித்தார். இன்றைக்கும், ஆசிரியரோடு இல்லத்தில் தங்கி பணிவிடைசெய்து சங்கீதம் பயின்ற வித்வான்கள் இசைக் கல்லூரியில் தேர்ச்சிபெற்றவரைக் காட்டிலும் பன்மடங்கு சிறப்புடன் விளங்குவதை நாம் காண்கின்றோம். காந்தத்தின் அருகே வைக்கப்படும் இரும்புத்துகள் காந்தமயம் ஆகின்றது. அக்கினிச் சுவாலையில் இடப்பட்ட கரி தனது அழுக்கு நீங்கப்பெற்று அதுவும் நெருப்புத் துண்டென ஜொலிக்கின்றது. மின்சாரம் பாயும் கம்பி தொடுபவரை எல்லாம் அதிர்ச்சிக்கு ஆளாக்குகின்றது. அங்ஙனம் குருவின் இணக்கத்தால் சிஷ்யனின் தன்மை மாறுகின்றது. மாசு அகலுகின்றது. அவரது ஸ்பர்ச தீக்ஷை அவனது குண்டலினியைத் தூண்டி தெய்வீக இயல்பு வீறுகொண்டு எழச் செய்கின்றது. இந்தச் சேர்க்கையால் குருவின் மனது மகிழ்ச்சிக் கடலில் ஆழ்கின்றது. சிஷ்யனின் வாழ்வு புனிதமடைகின்றது. இத்தகைய இணக்கத்தைச் சில உதாரணங்கள் மூலம் உணர்வோம்.

சிரத்தைக்கு (விடா முயற்சி, குறிக்கோளில் ஆழ்ந்த பிடிப்பு, தெய்வீகத்தில் நம்பிக்கை) இலக்கணமாகத் திகழ்பவன் 'நசிகேதன்'. கடோபநிஷத் அவனது வாழ்க்கையின் சிறப்பை உணர்த்துகிறது. தன் தந்தையின் யாகம் குறைவற நிறைவேற வேண்டும் என்பதற்காக அவர் முனிந்து கூறிய கடுஞ்சொற்களை ஏற்று, யமனுலகம் செல்கின்றான் நசிகேதன். யமன் தந்த மூன்று வரங்களைப் பெற்று, முதல் வரமாகத் தனது தந்தை சாந்தமனதோடு தன்னை ஏற்க வேண்டும் என்று வேண்டுகின்றான். இரண்டாவது வரத்தினால் சிறப்பான லோகங்களைத் தரக்கூடிய யாகநெறியைக் கற்கின்றான். அவன் வேண்டிய மூன்றாவது வரம் அவனது பரிபக்குவத்தை உணர்த்துகின்றது. "ஒரு மனிதன் இறந்தபின், அவன் இருக்கின்றான் எனச் சிலரும், இல்லை என்று வேறு சிலரும் உரைக்கின்றனர். இதன் உண்மை யாது? உம்மிடமிருந்து நான் அதை அறிய விரும்புகின்றேன்." அவனுடைய கேள்விக்கு யமதர்மன் உடன் பதில் தரவில்லை. பலவிதத்திலும் அவனைச் சோதித்துப் பார்க்கின்றார். "தேவர்கள் கூட அறியமுடியாத இரகசியம் இது. மிகவும் நுட்பமானதும் கடினமானதும் ஆகும். இதற்குப் பதிலாக வேறு ஏதாவது கேள். நிறை செல்வம், பூவுலகு முழுவதும் ஆளும் பதவி, ஆடை அணிகலன்கள், குதிரைகள், யானைகள் அனைத்தும் அளிக்கின்றேன். நசிகேதா, மரணத்தைப்பற்றி என்னிடம் கேட்காதே." நசிகேதனும் தனது முடிவைச் சிறிதும் மாற்றவில்லை. "உம்மைப் போன்ற ஆச்சாரியர் கிட்டுவது அரிது. நீர் தருவதாகக் கூறிய அனைத்தும் நிலையற்றவை. எனது வரத்திற்கு இவை எதுவும் ஈடாக மாட்டா. தங்களுடைய குதிரைகளையும் நாட்

டிய மங்கைகளையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நசிகேதன் வேறு வரம் எதை யும் கேட்கமாட்டான்." அவனுடைய மனஉறுதி, கொள்கையினின்று பிறழாத் தன்மை, தீவிர சிரத்தை ஆகிய பண்புகளை யமதர்மன் வியந்து பாராட்டுகின்றார். 'நசிகேதா, சுவர்க்கத்தின் வாயில் உனக்காகத் திறக்கப்படும். ஞானத் துக்குத் தகுதி உள்ளவனாக உன்னை ஏற்கின் றேன். விவேக புத்தியோடு கூடிய சீடனைக் காண்பது அரிது. அவனுக்குத் தேவையான ஆத்ம ஞானத்தைப் புகட்டும் ஆசிரியனைக் காண்பது அதனினும் அரிது." இங்ஙனம் யம தர்மனால் புகழ்ந்துரைக்கப்பட்ட நசிகேதன் அவர் மூலம் ஆத்ம ஞான உபதேசம் பெறு கின்றான். குரு சிஷ்ய இணக்கத்தில் இவ்விரு வரும் சிறந்த இடத்தை வகிக்கின்றனர்.

யாக்ஞவல்கியர் என்ற மகரிஷி தீவிர தவம் செய்ய விரும்பி, தம் செல்வமனைத்தையும் காத் யாயினி, மைத்ரேயி என்ற தம் இரு மனைவி களுக்கும் பங்கிட்டு அளிக்கின்றார். மைத்ரேயி கணவனை நோக்கி வினவுகின்றாள். "இந்தப் பூவுலகு முழுவதுமே எனக்குச் சொந்தமாகு மாயின் அதனால் நான் அமிர்த நிலையை அடைய முடியுமா?" "உன்னுடைய வாழ்வு பெரிய செல்வந்தர் வாழ்வு போன்றே அமையும். அழி வற்ற நிலை அதனால் உனக்குக் கிட்டாது." "அப்படியெனில் நீங்கள் பங்கிட்டுத் தந்த செல்வத்தால் எனக்கு என்ன பயன்? அழியா நிலையை அடையும் வழியை உபதேசம் செய்வீர்" என்று வேண்டினாள். அவளுடைய சொற் களால் மகிழ்ச்சி அடைந்த மகரிஷி உரைக்கின் றார்: "அன்புக்குரியவளே, இதுகாறும் எனக் குப் பிரியமுள்ளவளாகவே நீ இருந்தாய். தற்போது எனக்குப் பெரும் மகிழ்ச்சி அளிக் கும் சொற்களையே நீ உரைக்கின்றாய். எனக்கு உன்மீதுள்ள பிரியம் அதிகமாகின்றது." இதன்பின், கவனத்தோடு கேட்பாயாக என்றுரைத்து ஆத்ம ஞான உபதேசம் அளிக் கின்றார். லௌகிக வாழ்வில் 'கணவன்-மனைவி' உறவே மிகவும் நெருங்கியது. அத்தகைய வாழ்விலும் ஆத்மஞான உபதேசம் எளிதில் தரப்படுவதில்லை. கணவனோ மனைவியோ அதற்கேற்ற பக்குவத்தை அடையும்போதே உபதேசிக்கப்படுகின்றது. யாக்ஞவல்கியர் தம் மகிழ்ச்சியை வெளிப்படையாகவே உரைத்து அதிகாரி நிலையை எய்திய மனைவிக்கு உப தேசம் அளிக்கின்றார். குரு சிஷ்ய இணக்கத் தில் இத்தகைய இணைப்பு அபூர்வமான ஒன்றே.

தம் மகன் நன்கு படித்துப் பண்போடு வாழ வேண்டும் என்றே பெற்றோர் விரும்புகின்றனர். ஆயினும் தற்போது உலகியல் வாழ்க்கைக் குரியகல்வியை மட்டும் அவர்கள் தருகின்றனர். பாரத தேசத்தில் வித்யா என்ற சொல் ஆத்ம ஞானத்தையே குறிக்கும். या विद्या सा विमुक्तये என்பதே கோட்பாடு. உலகியல் சம்பந்தப் பட்ட அனைத்தும் 'அபரா வித்யா' என்று உப நிஷத் கூறுகின்றது. ஹாருணி என்ற முனி வர் தம் மகன் ஶ்வேதகேதுவை அழைத்து உரைக்கின்றார்: "மகனே, பிரம்மச்சரிய வாழ் வைக் கடைப்பிடிக்க ஆசிரமத்திற்குச் செல். நமது குடும்பத்தில் வேதங்களைப் பயிலாத பிரம் மச்சரிய வாழ்வை முறையாகக் கடைப்பிடிக் காத 'பிராம்மண பந்துவாக' எவரும் இருந்தது கிடையாது." உரை எழுதும்போது ஆசாரியர் குறிப்பிடுகின்றார். ब्राह्मण बन्धु व्यपदिशति न स्वयं ब्राह्मण वृत्तमिति அந்தணனுக்கு உறவானவன் என்பதில் அந்தணனுக்குரிய நற்பண்புகளை அவன் இன்னும் அடையவில்லை என்று உணர்த்துகின்றார் ஹாருணி ரிஷி. தகுதி வாய்ந்த ஆச்சாரியரைத் தேடிப் பிரம்மச்சாரி செல்ல வேண்டும். 'கையில் சமித்துக்களை எடுத் துக்கொண்டு வேதங்களைக் கற்றுணர்ந்து, பிரம்ம வித்தையில் நிலைத்து வாழும் குருவைப் பணிவோடு அணுகவேண்டும். स गुरुमेवाभिगच्छेत् समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठं என்பது நியதி. இத்த கைய பிரம்மச்சாரியைக் கண்ட ஆச்சாரியர் மன மகிழ்ச்சியுடன் ஆசீர்வாதம் செய்கின்றார். धन्योऽसि कृतकृत्योऽसि भावितं ते कुलं यथा—நீ மிகவும் பாக்கியவான். எய்த வேண்டிய லட்சியத்தை நீ எய்தி விட்டாய். உன்னுடைய குலத்தை நீ பெருமையுடையதாகச் செய்கின்றாய்." ஆச்சாரி யர் சிஷ்யன் ஆகியோரின் நெருங்கிய உறவை இங்ஙனம் விவேகசூடாமணி எடுத்துரைக் கின்றது.

ஸ்ரீ கிருஷ்ணனும், அர்ச்சுனனும் இணை பிரியா இரட்டையர். सख्य भाव— தோழமைப் பாவத்திற்கு அர்ச்சுனனை நாம் உதாரணமாக

எடுக்கலாம். இறைவனைத் தோழனாகப் பாவித்துப் பக்தி செய்வதும் ஒரு நெறியாகும். தனக்கு இடர் நேரிட்ட போதெல்லாம் கண்ணனை நாடிச் செல்வான் காண்டீபன். லௌகிக பிரச்சினைகளில் தீர்வு காண்பதே அவனுக்கு வழக்கம். அதற்கு அப்பாற்பட்ட தத்துவங்களில் அவனுக்கு நாட்டம் இல்லை. 'பரம் பொருளே மனித உரு எடுத்து வந்துள்ளது' என்ற உண்மையை அவன் அறியவில்லை. பக்குவம் பெறாத நிலையில் வலிந்து அவனுக்கு உபதேசிக்கக் கண்ணன் முன்வரவில்லை. 'பரிபாக காலம்தான் பிறக்கவில்லையோ' என்று தாயுமானவர் உரைப்பார்! அவன் மனம் பக்குவம் அடையும் வரை ஸ்ரீ கிருஷ்ணன் காத்திருந்தார். कालेनात्मनि विन्दति—சரியான காலத்தில் சாதகன் தன் கீழியல்பை வெல்கின்றான் என்கிறது கீதை. அத்தகைய சமயம் குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் தோன்றியது. தன்னுடைய மரியாதைக்கு உரிய ஆசிரியர், பாட்டனார், உறவினர் ஆகியோரை எதிர்த்துத் தான் போரிட வேண்டிய நிலையில் இருந்தபோது, பாசத்தினால் நிலைகுலைந்தான் பார்த்தன்! அவன் கைகளில் இருந்து காண்டீபம் நழுவியது. சோகத்தினால் பீடிக்கப்பட்டவனாக, 'நான் இனிப் போர்புரிய மாட்டேன்' என்று சேனைகளின் நடுவே சோர்ந்துபோய் அமர்கின்றான். அப்போது பார்த்தனின் சாரதியாக விளங்கிய பரமன் 'எழுந்து நில்' என்று கூறி அவனது மனத்தளர்ச்சியைப் போக்கி, அறிவுரை தந்தார். கண்ணனின் இவ்வுபதேசம் அவன் அகக் கண்ணைத் திறக்கின்றது. இதுவரை தனது நண்பனாக, தனக்குச் சமமாக இருந்த கண்ணன் தன்னினும் பன்மடங்கு மேலான புருஷன் என்பதை உணர்கின்றான். 'எனது மனம் கலங்கியுள்ளது. தர்மம் எது என்று நான் உணரவில்லை. எனக்குச் சிறப்பை (श्रेयस्) எது தருமோ அந்த நெறியை நிச்சயமாக எடுத்துரைப்பீர். நான் உம்முடைய சிஷ்யன். உம்மைச் சரணடைகின்றேன்' என்று வினயத்தோடு பணிகின்றான் விஜயன். यच्छ्रेयस्तान् निश्चितं ब्रूहि तन्मे शिष्यस्तेऽहं शाधिमां त्वां प्रपन्नम्! மாதவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இந்தத் தருணத்திற்காகத்தான் அவர் காத்திருந்தார். கீதை உரைக்கின்றது: तमुवाच हृषीकेशः प्रहसन्निव புன்முறுவலுடன் அர்ச்சுனனை நோக்கிப் பேசினார். 'ஒரு சிஷ்யன் தனக்குக் கிடைத்திருக்கின்றான்' என்ற எண்ணமே புன்முறுவலாகப் பூத்தது! அர்ச்சுனன் இப்போது அவருக்குச் சமமான நண்பன் அல்லன், அரச குமாரன் அல்லன், அவன் ஒரு சிஷ்யன். பணிவும், ஆசாரியரின் உபதேசத்தில் சிரத்தையும், அறிவுரை ஏற்று வாழும் மனநிலையும் பெற்று, வேறு உருப்பெற்று விளங்குகின்றான் விஜயன். தனது கரத்தில் காண்டீபத்தை ஏந்தி கம்பீரத்துடனும், பெருமிதத்துடனும் 'அச்சுதா என்னுடன் போர்புரிபவன் யார் என்று நான் பார்க்க வேண்டும். சேனைகளின் நடுவே எனது ரதத்தை நிறுத்துங்கள்' என்று கண்ணனுக்குக் கட்டளையிட்டான் காண்டீபன். தனது மயக்கத்தை, தர்மத்தை உணர முடியாத மனத்தளர்வை அவன் உணரவில்லை. 'போர்புரியாது இருப்பதே சிறந்தது' என்ற முடிவிற்கு வந்து, அதற்காகப் பல வாதங்களையும் எடுத்துரைத்தான். அத்தகைய அர்ச்சுனனைக் கீதையின் முதல் அத்தியாயம் படம் பிடித்துக் காட்டுகின்றது. ஆயினும் தற்போது அவன் முற்றிலும் மாறுபட்டவன். எனவேதான் கீதோபதேசம் தரப்படுகின்றது. உபதேசத்தை ஏற்கும் பக்குவத்தைச் சீடன் அடையும் பொழுதுதான் குரு அதனைத் தருகின்றார். பண்படுத்தப்பட்ட நிலத்தில் விதைத்தால் பலன் கிடைக்கும். பரிபாகம் அடைந்த உள்ளத்தில்தான் உபதேசம் நிலைத்திருக்கும். எனவே ஸ்ரீ கிருஷ்ணன் மகிழ்ச்சியுடன் அறிவுரை அளிக்கின்றார். அர்ச்சுனனின் மனமாற்றத்தையும் ஸ்ரீ கிருஷ்ணனின் உள்ளத்தையும் இரண்டாம் அத்தியாயம் விளக்குகின்றது.

பாரதீய பண்பாட்டுச் சரித்திரத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர், நரேந்திரர் சந்திப்பு முக்கியத்துவம் பெற்றது. பழைய கலாச்சாரம், புதிய நாகரிகம் இரண்டும் அங்கே இணைந்தன. கீழை நாட்டுத் தத்துவம், மேலை நாட்டு விஞ்ஞானம் அப்போது சந்தித்தன. பாரதீய நடைமுறையில் மூழ்கி ஆன்மீக அனுபவத்தில் திளைத்த வேதாந்த மெய்ஞ்ஞானம் எதையும் ஆராய்ச்சிக் கண்ணோடும், சந்தேக மனப்பான்மையோடும் காணும் விஞ்ஞானத்தை எதிர்கொண்டழைத்தது. நரேந்திரன் முதன் முறையாகப் பரமஹம்சரைக் காணச் சென்றான். மிகுந்த அன்புடன்

னும், ஆர்வத்துடனும், "ஆகா! வந்துவிட்டாயா! உனக்காக நான் எவ்வளவு நாட்கள் காத்திருந்தேன்" என்ருர் பரமஹம்சர். அவருடைய அன்பு உரைகளை அதிகம் பொருட்படுத்தவில்லை நரேந்திரன். 'வெறும் பிதற்றல்' என்றே கருதினன். ஆயினும் 'அடிக்கடி அவரைக் காண வேண்டும்' என்ற ஆர்வம் மேலோங்கி இருந்தது. 'பார்ப்பதற்குப் பித்தனைப் போலக் காணப்படுகின்ருர். ஆயினும் என் உள்ளத்தைக் கவர்கின்ருர்' என்ற முடிவிற்குவந்தான். 'என் உள்ளம் கவர் கள்வன்' என்ற அடைமொழி அவருக்குப் பொருந்தியது! சாதாரணமாகத் தோன்றிய இச்சந்திப்பு பிரிக்கவொண்ணுத பிணைப்பாக மலர்ந்து, இன்று உலகம் முழுவதும் பரவிக்கிடக்கும் இராம கிருஷ்ண இயக்கத்தின் வித்தாக அமைந்தது எனலாம்.

சிஷ்யனைத் தம்முடன் வசிக்கச் செய்து, படிப்படியாகப் பண்படுத்திப் பரிணமிக்கச் செய்வது குருவின் கருணை உள்ளம் ஆகும். ஆயினும் அருளாசியை இங்ஙனம் பல ஆண்டுகளில் தர வேண்டும் என்ற நியதி எதுவும் இல்லை. தற்காலக் கல்வி முறை போன்று குறிப்பிட்ட காலவரையறையோ, பாடத்திட்டமோ இதில் இல்லை. குருவின் அருளால் மொழியப்பட்ட ஒரு வாக்கியமோ, சொல்லோ போதுமானது. சீடன் அதனைத்தன் உள்ளத்திலேதியானித்துப் புடம் போடப்பட்டவனுகத் தன்னை மாற்றி அமைக்கலாம். ஸ்பர்ஸவேதி (Philosopher's Stone) சாதாரண உலோகத்தை ஒரு முறை தீண்டினலே போதுமானது! அந்த உலோகம் பொன்மயமாகின்றது. அது போன்று நொடிப்பொழுதே ஆயினும் குருவின் உறவால் தகுதி வாய்ந்த அதிகாரி பெரிய நிலையை அடைகின்ருன். குருவின் காலடியில் அமர்ந்து பல ஆண்டுகள் உபதேசம் கேட்கும் நிலை தாயுமானவ சுவாமிகளுக்கு அமையவில்லை. 'நமச்சிவாய, சும்மா இரு" என்ற இரண்டு வாசகங்களை மட்டுமே அவருடைய குருநாதர் மொழிந்தார். ஆத்ம ஞானம் முழுவதையும் பொக்கிஷமாக இவை அடக்கியுள்ளன. சிப்பியின் உள்ளேவிழும் நீர்த்திவலை முத்தாக மாறுவதுபோன்று, இந்த வாசகங்கள் அவருடைய இதயத்தில் ஆழப் பதிந்தன. தாயுமானவரின் பாடல்களில் 'சும்மா இரு' என்ற சொற்களின் ஆழ்ந்த தத்துவம் பல இடங்களில் விளக்கப் பட்டிருப்பதை நாம் காணலாம்.

சீடனுக்கு உபதேசம் செய்யச் சரியான தருணத்தை எதிர்பார்த்துக் குரு காத்திருப்பார். கர்நாடக மாநிலத்தில் பணிபுரிந்த ஆசிரியர் ஒரு சந்நியாசியை நாடிச் சென்ருர். இத்துறவியும் பூர்வாசிரமத்தில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்தவர். எனவே இருவரும் பள்ளி நிர்வாகம், ஆசிரியர், மாணவர்உறவு,பாடத்திட்டம், கல்வி இயக்குநரின் விஜயம் என்று பல விஷயங்களைப் பற்றியே பேசுவார்கள். பல முறை இப்படிப்பட்ட சம்பாஷணைகள் நடந்தன. தன்னுடைய வருகையால் பெரிய நலன் எதுவும் விளையவில்லை என்று சீடர் உணர்ந்தார். ஆயினும் எப்படிப் பேச்சை ஆன்மீகப்பாதையில் துவக்க வேண்டும் என்று அவருக்குத் தெரியவில்லை. ஒரு நாள்எப்படியோ துணிவை வரவழைத்துக் கொண்டு ஒரு கேள்வி கேட்டார். "சுவாமிஜி, ஞானி ஒருவருக்குத் தலைவலி வந்தால், அந்த வலியை அவர் உணர்வாரா?" சுவாமிஜி அவர்களுக்கு இந்தக் கேள்வியே போதுமானது. சாதாரணமாகப் பேசுவதற்கோ, பொழுது போக்குவதற்கோ சீடர் வரவில்லை என்பதை அறிந்தார். இந்தக் கேள்வியை ஆதாரமாகக் கொண்டு சாதாரண மனிதனுக்கும், ஜீவன் முக்தனுக்கும் உள்ள வேறுபாட்டை அழகாக விவரித்தார். ஆண்டுகள் பல கழிந்த பின்னரும் அந்த ஆசிரியர் இந்நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து, தம் குருவின் கருணை உள்ளத்தை எண்ணி நெகிழ்வார். "குழந்தைத்தனமான, சாதாரணக் கேள்வியை நான் கேட்டேன். எத்தகைய ஆர்வத்தோடு அன்போடு என் குரு பதில் தந்தார்." அற்ப நிகழ்ச்சியையும் அற்புத உபதேசத்திற்காகப் பயன்படுத்துவதே ஞானியர்தம் கருணை ஆகும்!

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் நேர் சீடர்களும் தங்கள் மீது குருமகராஜ் காட்டிய அன்பை மற்றவர்கள் மீது பொழிந்தனர். பேலூர் மடத்தில் துறவியாகத் தன் மகன் சேர்ந்துவிட்டான் என்று கண்ணீரும் கம்பலையுமாக ஒருதாய் சுவாமி விவேகானந்தரிடம் முறையிட்டாள். அவள் புலம்பல் ஓயும் வரை சுவாமிஜி அமைதியாக இருந்தார். அவள்

சென்றவுடன் உரைத்தார். "அருகே ஓடும் கங்கை நதியைப் போன்று இத்தகைய தாய் மார்களின்கண்ணீர்ப்பிரவாகம் பெருக்கெடுத்து ஓடவேண்டும்; பாரத நாட்டிற்கு அப்போது தான் விமோசனம் பிறக்கும்." இதே போன்ற வேறு ஒருசந்தர்ப்பத்தில் சுவாமிபிரம்மானந்தர் மொழிந்தார். "மேலான வாழ்க்கையை லட்சிய மாகக் கொண்டு இந்த இளைஞன் இங்கு வந் துள்ளான். அந்தப் பாதையினின்று திருப்பி விடும் செயலை நான் செய்யமாட்டேன். போக வேண்டும் என்று அவனே விரும்பினால் தடை செய்ய மாட்டேன்." தியாகத்திற்கும் துறவு வாழ்க்கைக்கும் பாரத நாடு முக்கிய இடம் அளித்து வருகின்றது. அந்தப் பண்பாட் டையே இவர்கள் ஞாபகப்படுத்தினர். "यः आत्ममुक्तौ न यतते मूढधीः सहि आत्महा स्वं विनिहन्त्यसत् ग्रहात्—ஆத்ம மூக்திக்காக எவன் முயற்சி செய் வது இல்லையோ அவன் தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பாகின்றான்" என்ற ஆசாரி யர் சங்கரரின் கருத்தை இவர்கள் எதிரொலிக் கின்றனர்.

இங்ஙனம் தொன்று தொட்டு मुमुक्षुत्वं — மோட்சம் அடையவேண்டும் என்ற நாட்டம் கொண்ட சாதகர்களாகிய சீடர்களுக்கும், ஆத்மானந்தத்தில் திளைத்து இருக்கும் ஆசாரி யர்களுக்கும் ஏற்பட்ட இணக்கம் இன்றும் மாறாது இருக்கின்றது. பாரத நாட்டில் குரு சீட இணக்கம் அதற்கே உரிய பாரம்பரியத்தோடு திகழ்கின்றது. அமைதி யான சூழ்நிலையில் ஆசிரமம் அமைத்துக் குரு குலத்தை நிறுவிய தபோதனர்கள் நல்ல மாண வர்கள் தம்மைத் தேடி வரவேண்டும் என்று விரும்பினர். आमायन्तु ब्रह्मचारिणः स्वाहा, विमायन्तु ब्रह्मचारिणः स्वाहा – பிரம்மச்சாரிகள் எல்லாத் திக்குகளில் இருந்து வரவேண்டும்; அதிக எண்ணிக்கையில் வரவேண்டும்; புலனடக்கம் அமைதியோடு இலங்கும் மாணவர்கள் வர வேண்டும்" என்று யாகம் செய்தனர். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயர்ந்த பண்புடன் தாம் அடைந்த ஞானத்தை மற்றவர்களுக்குத் தருவதற்குக் காத்திருந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அம்பிகையின் காட்சி பெற் றார். அம்பிகை ஒரு கூடை நிறைய சித்திகளைக் காட்டி ஏற்றுக்கொள்ளுமாறு ஸ்ரீ ராமகிருஷ் ணரை மயக்கினாள். அப்பொழுது ஸ்ரீ ராம கிருஷ்ணர் பகர்ந்ததாவது:

"நான் உன் குழந்தை. நீ எனக்குத் தாய். சித்திகளைக்கொடுத்து நீ என்னை மயக்கவேண் டாம். எனக்கு நீதான் வேண்டும். உன்னைத் தவிர வேறு எதுவும் வேண்டாம்." என்று பகர்ந்தார். ஆனால் அவர் மற்றொரு சமயம் தாம் பெற்ற ஞானம் தமக்குமட்டுமன்றி மற்ற வர்களுக்கும் உரியதாக வேண்டும் என்று விரும்பினார். எனவே அவர் அம்பிகையிடம் பிரார்த்தித்ததாவது: "தாயே எனக்குக் கற் றோர்களாகவும், இளைஞர்களாகவும், தூய மனம் படைத்தவர்களாகவும் உள்ள உத்தமர் கள் சிஷ்யர்களாக வந்து வாய்க்கவேண்டும். அவர்கள் மூலம் நான் பெற்ற ஞானம் உலக மக்களுக்கு உரியதாகவேண்டும்" என்று பிரார்த் தித்தார். அப்பிரார்த்தனையின் விளைவாகச் சுவாமி விவேகானந்தர் போன்றவர்கள் அவருக் குச் சிஷ்யர்களாக வந்து வாய்த்தார்கள். இப் படி ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஞான பரம்பரையைத் தோற்றுவித்தார். பண்டைக்கால ரிஷிகளும் தங்களுடைய குலப் பரம்பரையைக் காத்தது போல், கவனத்துடன் வித்யா பரம்பரையையும் காத்தனர். இத்தகைய பரம்பரை என்றும் நிலைத்துத் தர்மத்தை நிலைநாட்டி, பாரதத்தை யும், இப்பாரினையும் புனிதம் ஆக்குவதாகுக.

இன்றைக்குக் குரு சிஷ்ய இணக்கம் பாராட் டத்தக்க முறையில் அமையவில்லை. ஆகையால் கல்வியின் தரம் கீழே போயிருக்கிறது. கல்வி யின் தரம் உயர வேண்டுமானால் குரு சிஷ்யர் ஆகிய இருவரின் தரமும் உயரவேண்டும். குரு தியாகஉள்ளம் படைத்தவராயும், தெளிந்த அறிவு உடையவராயும், ஒழுக்கம் நிறைந்தவ ராயும் இருக்கவேண்டும். சிஷ்யன் குருபக்தி உடையவனாயும், பணிவுடையவனாயும், சேவை மனப்பான்மை உடையவனாயும், பிரம்மச் சரிய வாழ்வு கடைப்பிடிப்பவனாயும், சிரத்தை உடையவனாயும் இருக்கவேண்டும். இதுவே பண்டைக்கால குரு சிஷ்ய இணக்கமாக இருந் தது. இன்றும் அத்தகைய இணக்கம் ஏற் பட்டால் கல்வி புனிதம் அடையும்; தர்மம் நிலைநாட்டப்படும். உலகெங்கும் அமைதியும், அன்பும் வளர இத்தகைய குரு சிஷ்ய இணக் கம் உண்டாவது ஆகுக!

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

5. உவமையின் சிகரம்

அசோகவனத்தின் தன்மை, அரக்கியரின் காவல், சீதையின் தோற்றம், அவளுடைய சோகம் இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துத் தான் தேடிவந்த தேவி இவள்தான் என்று அனுமன் உறுதி கொள்கின்ருன். ராமன் சீதையின் தோற்றத்தைப்பற்றிக் கொடுத்த வர்ணனை அனுமனுக்கு நினைவில் இருந்தது. ஆனல் ராமன் வர்ணித்த சீதை அவனுடன் அயோத்தியிலும் ஆரண்யத்திலும் ஆனந்தமாக இருந்தவளுடைய தோற்றம் தான். இப்போது அசோக வனத்துச் சீதையின் தோற்றம் ராமனுக்கும் தெரியாத ஒன்று. காதால் கேட்ட வர்ணனையைக் கண்முன் காணும் வடிவத்துடன் பொருத்திப் பார்க்கவேண்டிய அனுமன் திகைத்தால் அதில் வியப்பில்லை. ராமனின் வருணனையில் வந்த சீதையோ வனத்தில் செழித்த கொடி; அனுமன் கண்முன் காணும் சீதையோ

'கள் மருங்கு எழுந்து என்றும் ஒரு துளிவரக் காணு நன்மருந்துச் செடி.'

[காட்சிப் படலம் 3]

ராமன் சொன்ன சீதையின் நிறத்திற்கோ உவமையே இல்லை; மாந்தளிரைச் சொல்லலாமா என்ருல் இவள் நிறத்திற்கு முன் அந்நிறம் முதுமை பெறும். பொன்னின் நிறத்தைச் சொல்லலாமா? முடியாது. இவள் முன் அது கருகிப் போகும். அவள் நிறத்திற்கு அவளே தான் உவமையாவாள்! ஆனல் அனுமன் காணும் சீதையோ,

'வெயிலிடைத் தந்த விளக்கு என ஒளியிலா [பெய்யாள்!'

எனவே அனுமனுடைய காரியம் கடினமானது தான். அயோத்தியிலும் ஆரண்யத்திலும் ராமனின் அன்பில் திளைத்திருந்த சீதையின் தோற்றத்தை மனத்தில் நிறுத்திக்கொண்டு அசோக வனச் சீதைதான் அத்தோற்றத்திற்கு உரியவள் என்று கண்டுபிடிப்பது அனுமனின் அரிய பணி. வால்மீகி முனிவர் இந்த அரிய பணியில் இருக்கும் சிரமத்தை விளக்குவதற்கு ஓர் உவமையைப் பயன்படுத்துகின்ருர் பாருங்கள்! இந்த உவமை ஒன்றே வால்மீகியின் பெருமையைப் பலகோடி ஆண்டுகள் பேசும். உவமையைப் பார்ப்போம்.

அற்புதமான கருத்துக்கள் அடங்கிய செய்யுள் ஒன்று அறிவிலி ஒருவனல் சிதைக்கப்பட்டு அச்செய்யுளின் அமைப்பு மாற்றப்பட்டுவிட்டது. அப்படிச் சிதைக்கப்பட்ட செய்யுளாகச் சீதை இருந்தாள். சிதைக்கப்பட்ட அச்செய்யுளின் மூலவடிவம் இன்னது தான் என்று கண்டு பிடிப்பதற்கு அறிஞன் ஒருவன் எவ்வளவு சிரமப்படவேண்டும்? அந்த அறிஞனின் நிலையில் இருந்தான் அனுமன். பண்ணும் பாவும் முறையாக அமைக்கப்பட்ட செய்யுளுக்குச் சான்ருகின்ருள் ஜானகி. ராவணன் என்ற அறிவிலியினல் அச்செய்யுளிலுள்ள வார்த்தைகள் கலைக்கப்பட்டு முன்னுக்குப் பின் முரணுக ஆக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டது போன்று அசோகவனச் சீதை காட்சியளிக்கின்ருள்! கலைக்கப்பட்ட அச்செய்யுள் தொடர்களைச் சரிப்படுத்திச் செய்யுளின் மூல வடிவத்தைக் கண்டு பிடிக்கும் அறிஞனுக்கு ஒப்பாகின்ருன் அனுமன். இந்த உவமையின் சிகரத்தை ஆதி கவியின் வாக்கில் காணலாம்:

दुःखेन बुबुधे सीतां हनुमान अनलङ्कृतां ।
संस्कारेण यथा हीनां वाचमर्थान्तरं गताम् ॥

—வால்மீகி ராமாயணம், சுந்தர காண்டம்
சர்க் 15. சுலோ. 37:

[हनुमान् — அனுமன்; सीतां — சீதையை संस्कारेण—இலக்கண உருவத்தோடு हीनां— அமையாது अनलङ्कृतां—மூல மொழியின் அலங்காரத்தை விட்டொழித்து अर्थान्तरं - தப்பு அர்த்தத்தை गतां—அடைவிக்கப் பட்டுள்ள वाचं—மூலவாக்கியத்தை यथा - போல दुःखेन—மிகவும் கஷ்டப்பட்டு बुबुधे- தெரிந்து கொண்டார்.

— ராவ் சாஹிப் P. S. கிருஷ்ணசாமி ஐயர் மொழி பெயர்ப்பு]

இதே 15-வது சர்க்கத்தில் சில சுலோகங்களுக்கு முன் சீதை அசோக வனத்திலிருந்ததை வான்மீகி முனிவர் வர்ணித்துள்ளார். அசோகவனச் சீதையின் நிலையை உவமைகள்

பல கூறி விவரித்திருக்கின்றார். அந்த உவமை களுள் ஒன்று:

"तां स्मृतीमिव सन्दिग्धाम्" – Ibid சுலோ 31

[सन्दिग्धां–பொருள் புலப்படாத, तां–பிர சித்தமான, स्मृतीमिव — ஸ்மிருதியைப் போன்றவள் Ibid மொழிபெயர்ப்பு]

வான்மீகியின் சிறப்புக்களுள் ஒன்று அவருடைய உவமைகள். இயற்கையோடு இயைந்தவையாகவும், சூட்சுமமானவையாகவும், இலக்கியச் சுவை மிகுந்தவையாகவும் அவ் உவமைகள் விளங்குகின்றன. மேலே நாம் கண்டது ஒரு பதம்தான்.

6. வான்மீகியில் அனுமனின் நினைவு அலைகள்:

ஆதி காவியத்தில் அனுமன் அசோகவனத்தில் நுழைந்து ஆயிரக்கணக்கான தூண்களால் தாங்கப்பட்டதும், மிக உயர்ந்ததும், கயிலையங்கிரி போன்று வெண்மையானதும், பவளங்களால் செய்யப்பட்ட படிகளையுடையதும், தங்கத்தால் எழுப்பிய மேடைகளையுடையதும் ஆன ஒரு தேவாலயத்தில் அரக்கியர் சூழ அமர்ந்திருக்கின்ற சீதையைப் பார்க்கின்றான். ராமன் விவரித்த சீதையும் இங்கு இருக்கும் மங்கையும் ஒருத்தியே என்று அனுமன் உறுதி கொள்கின்றான்.

'சீதை அணிந்திருந்ததாக ராமன் தெரிவித்த நகைகள் அருகிலுள்ள மரக்கிளையில் தொங்க விடப்பட்டுள்ளன. சீதை கழற்றி வனத்தில் எறிந்ததாகக் கண்டெடுக்கப்பட்ட நகைகள் இங்குக் காணப்படவில்லை. மேலும், அந்த நகைகளைக் கட்டிப் போடுவதற்காகச் சீதை தன்னுடைய ஆடையின் ஒரு பகுதியில் கிழித்தெடுத்த துணியும் இங்கே இந்த மாதரசி உடுத்தியிருக்கும் துணியும் ஒன்றே! இதிலிருந்துதான் நகைகளை முடிந்துபோடுவதற்கான துணி கிழிக்கப்பட்டிருக்கின்றதென்பது நன்கு தெரிகின்றது.

'சீதையின் மனம் ராமனிடத்திலும் ராமனுடைய உள்ளம் சீதையினிடத்திலும் இருக்கின்றன. அதனால்தான் இவளும் ராமனும் கொஞ்ச காலமாவது உயிருடன் இருக்க முடிந்துள்ளது. இவளைப் பிரிந்து ராமன் இருப்பது செயற்கரிய செயல்தான். ராம, இலக்குவர்களும் சீதையும் கூட இவ்வாறு வருந்த நேரிட்டால் காலத்தின் கொடுமையை என்னென்பது! இவளாலன்றோ வாலியும், கபந்தனும், விராதனும், கரதூடணரும் எண்ணிறந்த அரக்கரும் கொல்லப்பட்டனர். இவளால்தான் வலிமை மிக்க வாலியின் ராஜ்யம் சுக்ரீவனுக்குக் கிடைத்தது. இவள் காரணமாகத்தானே இப்பெரும் கடல் என்னால் தாண்டப்பட்டது! இவளுக்காக ஆழி சூழ் உலகம் முழுவதையும், ஏன் இப்பிரபஞ்சம் முழுவதையும் தலைகீழாய்ப் புரட்டிவிட்ட போதிலும் பொருத்தமானதாகவே எனக்குத் தோன்றுகின்றது. உலகில் உள்ள செல்வங்களையும் முவுலக ஆட்சியையும் ஒரு பக்கம் வைத்து, சீதையை இன்னொரு பக்கம் வைத்தால் சீதையின் ஓர் அணுவுக்கும் அவை ஈடாகமாட்டா.

'இச் சீதை ராமனிடம் அழுத்தமான பக்தி பூண்டிருக்கின்றாள்! மகாத்மாவான ஜனகருக்கு மகளாகவும் வீரம் விளைவித்த தசரதனின் மூத்த மருகியாகவும் இவள் இருக்கின்றாள். ராமனைக் காண்பதற்காகவே இவள் தன் உடம்பைக் காத்துக் கொண்டு இருக்கின்றாள் போலும்! இந்த அரக்கியரின் கொடுமையும் அசோக வனத்தின் இனிமையும் இவளது மனத்தை அசைக்க முடியவில்லையே! பெண்ணிற்கு மிகச் சிறந்த அணிகலன் அவள் கணவன்தான். இந்த அணிகலன் அருகில் இல்லாமலிருப்பதால்தான் சீதையின் முகம் ஒளி குன்றியிருக்கின்றது.

'இன்பத்தையே அனுபவிக்கப் பிறந்த இவள் இத்தனை இன்னல்களுக்கு ஆளாகி இருப்பது கண்டு என் மனம் கொதிக்கின்றது. இவளுடைய பொறுமை பூமிக்கு நிகரானது. பனியால் வாடிய தாமரை போன்று துன்பத்தின் தொகுதியினால் வாட்டப்பட்ட இச்சீதை துணையைப் பிரிந்த சக்கரவாகப் பறவை போன்று துன்புறுகின்றாள். இவ் அசோக வனத்து மலர்களும், ஆயிரம் கிரணங்கள் வீசி அழகுடன் விளங்கும் சந்திரனும் இவளுடைய சோகத்தை அதிகப்படுத்துகின்றனவேயன்றிக் குறைக்கவில்லை. அதிகமான பாரம் ஏற்றிய மரக்கலம் நடுக் கடலில் அவதிப்படுவது போன்று சோக பாரங்களால் அழுத்தப்பட்ட சீதை திசை தெரியாது தவிக்கின்றாள்.'

இவ்வாறு, சீதையின் நிலைக்கு வருந்துபவனாகவும், அதே சமயம் சீதையைப் பார்த்து விட்ட மகிழ்ச்சியில் திளைப்பவனாகவும் ராம இலக்குவர்களை மனத்தில் நினைத்துத் தொழுது

மறைவாக ஒரு மரக்கிளையில் அமர்ந்திருந்தான் அனுமன்.

7. அரக்கன் தோன்றினன்......

அப்போது பின்னிரவு நேரம். அனுமன் வேதமறிந்த அரக்கப் பிராமணரின் வேத கோஷத்தைச் செவியுற்றான்; அசோக வனத்தின் நுழைவு வாயிலில் பரபரப்பான ஒலிகள் கேட்டன; அனுமன் அத்திசையில் நோக்கினன். முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் உடைய இலங்கையர்கோன், கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் ஜானகியை மனச் சிறையில் அடைத்துக்கொண்டு அசோகவனச் சிறையிலிருக்கும் அறச் செல்வியைப் பார்க்க வந்து கொண்டிருந்தான் பரிவாரங்களுடன். இலை தழைகள் நிறைந்த கிளைகளுக்கிடையில் தன்னை மறைத்துக்கொண்டும் ராம நாமத்தை உச்சரித்துக்கொண்டும் ராவணன் சீதையிருக்குமிடம் நோக்கி வருவதைப் பார்த்துக்கொண்டிருந்தான் அனுமன். அரக்கர்கோன் இவ்வாறு வந்ததைக் கம்பன் :

"என்று இவை இனையன எண்ணி, வண்ணவான்
பொன்திணி நெடுமரப் பொதும்பர் புக்கு, அவண்
நின்றனன்; அவ்வழி நிகழ்ந்தது யாதெனில்
துன்று பூஞ்சோலைவாய் அரக்கன் தோன்றினன்"

—காட்சிப் படலம்-77

[வண்ணவான்-அழகிய பெரிய. பொன்திணி நெடு மரம்-பொன் மயமான, அடர்ந்த, நீண்ட மரம். பொதும்பர்-இலைகள் செறிந்த கிளை. துன்று பூஞ்சோலைவாய்-நெருங்கிய பூக்களையுடைய அசோக வனத்தில்]

என்று நாடகபாணியில் படம் பிடித்துக்காட்டுகின்றான்.

சுந்தர காண்டத்தில் ராவணன் சீதை சந்திப்பும், இருவருக்கும் தெரியாமல் அனுமன் அவர்களைக் கவனித்ததும் ஒரு முக்கியமான கட்டமாகும். இலங்கையில் சீதை எத்தகைய கொடுமைக்கு ஆளாகிக்கொண்டிருக்கின்றாள் என்பதையும், தன்னுடைய தூய்மையைப் பாதுகாக்கச் சீதை காட்டிய வீரத்தையும் கண் முன்னாகப் பார்க்கும் வாய்ப்பு அனுமனுக்கு இங்குதான் கிடைக்கின்றது. இதுவே, பின்னர் ராமனிடம் சீதையின் விடுதலையை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கவும், தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோளாகச் சீதையின் விடுதலைக்குப் பாடுபட வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்படவும் காரணமாகின்றது.

8. மாருதியின் மனத்திருப்பம்

பிரிவு என்பது ராமனுக்கும் சீதைக்கும் பொதுவானதுதான் என்றாலும் இதனால் அதிகம் துன்புற்றது சீதைதான் என்பது தெளிவு. சீதையைப் பிரிந்த ராமனுக்குத் தைரியம் சொல்லித் தேற்றத் தந்தையைப் போன்று இலக்குவன் இருந்தான்; சீதையின் கற்பிற்கு ஏற்பட்ட சோதனை போன்று ராமனுக்கு எந்தச் சோதனையும் ஏற்படவில்லை; ராமனின் சுதந்திரம் பாதிக்கப்படவில்லை; சீதையைப் பிரிந்தபின்னர் தன் மேல் அன்பு செலுத்தும் பலரைச் சந்திக்கும் வாய்ப்பு ராமனுக்குக் கிடைக்கின்றது; அதிலும் தன்னைப் போலவே மனைவியைப் பிரிந்து வாடும் சுக்ரீவனுடைய நட்புக்கிடைத்தது ராமனுக்குப் பிரிவுத் துயரில் பங்குகொள்ள இன்னொரு ஆள் கிடைத்தது போன்றாகிவிட்டது. நம்மைப்போன்று துயரப்படுபவரைக் கண்டால் நம் துயரத்தின் வேகம் சிறிது தணிவது இயல்புதானே! இதுபோன்று எந்தச் சாதகமான சூழ்நிலையும் சீதைக்கு வாய்க்கவில்லை. அசோக வனத்தில் தான் இருந்த இடத்தைவிட்டு அவளால் நகரமுடியாது! அவளைச் சுற்றிலும் புதிய முகங்கள்; முகங்களா அவை? பேய்களும் கண்டு பின்வாங்கும் கோர உருவங்கள்! அன்பு காட்ட ஆள் இல்லாத சிறை! மழைத்துளி காணாத பாலைவனம்! அவளுடைய தூய்மைக்குச் சோதனை! இரும்பினைக் காய்ச்சிச் செவிகளில் ஊற்றியதுபோன்ற ராவணனின் காமப் பிரவாகப் பிதற்றல்கள்! அவளுடைய சோகத்தைப் பகிர்ந்துகொள்ளத் துணையில்லாத தனிமை. இவற்றையெல்லாம் ஒப்பிட்டு நினைத்துப் பார்த்த அனுமனுக்குச் சீதையின்மேல் அதிகமான அனுதாபமும் பக்தியும் ஏற்பட்டதில் வியப்பு ஒன்றும் இல்லை.

ராம இலக்குவரை முதன் முதலில் கண்டபோது தன் எலும்பும் உருகும் வண்ணம் அவர்கள்மீது ஓர் அன்பு உணர்ச்சி ஏற்படுவதை உணர்ந்தவன் அனுமன். அந்த நொடிமுதல் அவர்களுடன் நட்புப் பூண்டு உறவாடுவதையே வாழ்க்கையின் குறிக்கோளாக்க முடிவு செய்தவன் அனுமன். பின்னர், ராமனுடைய கதை

யைக் கேட்டதும் அவன் மேல் அளவு கடந்த பக்தியும் அனுதாபமும் ஏற்பட்டு அவனுடைய துன்பத்தைப் போக்குவதற்குத் தன் முழுப்பலத்தையும் பயன்படுத்தவேண்டுமென்று முடிவு செய்கின்றான். ஆனால் அசோக வனத்தில் சீதையைக் கண்ட பிறகு தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அவளுடைய பாதகமலங்களில் சமர்ப்பித்து அவளை ராமனுடன் சேர்த்து வைப்பதையே விரதமாகக் கொள்கின்றான்.

ராமனுடைய பெருமையைச் சீதையைப் பார்த்த பின்புதான் அனுமன் முழுவதுமாக உணர்ந்துகொள்கின்றான் என்றும் சொல்லலாம். ராமனுடைய அவதார விஷயத்தில் ஓரளவு நம்பிக்கை வைத்திருந்த அனுமனுக்குச் சீதையைப் பார்த்தவுடன் அந்த நம்பிக்கை முழு உறுதி பெற்றது. 'அரவின் நீங்கிய தேவனே' ராமன் என்றும் அவன் மார்பில் உறையும் 'கமலச் செல்வியே' சீதை என்றும் அசோக வனச் சீதையைப் பார்த்த பின்புதான் அனுமன் முடிவுக்கு வருகின்றான். அனுமனுடைய இந்த மனத்திருப்பத்திற்கு முக்கிய காரணமாக அமைந்தவை அசோகவனத்தில் அவன் கண்ட சீதையின் நிலைமையும், ராவணன்-சீதை பேச்சு நடந்த காட்சியும்தான்.

ராவணன் சீதையிருக்கும் இடம் சென்று இதற்கு முன்பும் பலமுறை அவளைத் தன் விருப்பத்திற்கு இணங்குமாறு மிரட்டியிருக்கின்றான். ஆனாலும் அனுமன் முன்னிலையில் அந்தக் காட்சி நடைபெறுவதாகக் காட்டியது ஆதிகவியின் காப்பிய ரசனைக்குச் சிறந்த சான்றாக விளங்குகின்றது. இந்தக் காட்சி இல்லாமலிருந்தாலும் அனுமன் சீதையின் மனநிலையையும் பிரிவுத் துயரையும் உணர்ந்திருப்பான் என்றாலும், இந்தக் காட்சியினால் சீதை எத்தகைய கொடுங்கோன்மையை எதிர்த்துத் தனித்துப் போராடிக்கொண்டிருக்கின்றாள் என்பதை அனுமன் தெரிந்துகொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படுகின்றது. அனுமன் இருப்பதை அறியாமல் ராவணன் சீதையிடம் தன் காமத்தைப் பற்றிச் சொன்னதும், ராம தூதன் இருக்கின்றான் என்று தெரியாமல் சீதை ராவணனைத் தன் சொல்லம்புகளால் தாக்கியதும் ஆகிய இந்த நிகழ்ச்சி ராமாயணக் காப்பியத்திலேயே நாடகச் சுவை நிறைந்த ஒருபகுதியாகும். எனவே இந்தக் காட்சியை நாமும் அனுமன் போன்று மறைந்திருந்து கவனிக்கலாம். சீதையின் வீரத்திற்கும், கற்பின் திண்மைக்கும் சான்றாகக் காட்டும் நிகழ்ச்சி ராமாயணத்தில் இதைவிடச் சிறந்தது வேறு இல்லையாதலால் இது அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

அசோகவனத்தில் அனுமன் சீதையைக் கண்ட பின்னிரவு நேரத்தில் ராவணன் அங்கு வந்து சீதையிடம் காதல் பிச்சைகேட்டதையும், இலங்கேசுவரனைத் துரும்பாக நினைத்துச் சீதை தன் வீரமொழிகளால் அவனைத் திருப்பி யனுப்பியதையும், இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு இருந்த அனுமனின் சிந்தனைகளையும் அடுத்த பகுதியில் விரிவாகக் காண்போம்.

சூதாட்டம்

சூதும் வாதும் வேதனை செய்யும். பிறர் பொருளை முறை தவறிக் கைப்பற்றுவது சூதாட்டம். அப்படிச் சம்பாதித்த செல்வம் நிலைத்திராது. பாபத்தையும் பாதரசத்தையும் ஜீரணம் பண்ண முடியாது. சூதாட்டம் பொல்லாதது என்பது தொன்று தொட்டு நிரூபிக்கப்பட்டு வந்திருக்கிறது.

பழங்காலத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் பகடை என்ற சூதாட்டம் விளையாடி நாட்டைப் பாழ்படுத்தினார்கள். இக்காலத்தில் நம்மவர்கள் பரிசுச்சீட்டு என்ற சூதாட்டத்தையும் குதிரைப் பந்தயம் என்ற சூதாட்டத்தையும் செய்து வருகிறார்கள். இவைகளின் விளைவு கேடு. நல்லார் இத்தீங்குகளினின்று விலகி இருப்பார்களாக. பொதுநலனுக்காகவென்றும் இவைகளில் ஈடுபடலாகாது. இவைகளில் கருத்துச் செலுத்தாதிருக்குமளவு நலத்தை நாம் வளர்த்தவர்களாவோம்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-146

847. तलोदरी தலோதரீ — மெல்லிய இடையை உடையவள்.

மெல்லிய இடை படைத்திருப்பது பெண்பாலர்க்கு அழகாகிறது. மத்தளம் போன்று தடித்துப் பிதுங்கியிருக்கும் இடை அழகைத் தராது. இனி, இயற்கையின் பிரதிநிதியாயிருப்பவள் பெண். பெண்ணுலகு அனைத்துக்கும் எடுத்துக்காட்டாயிருப்பவள் அன்னை பராசக்தி. உலகு அனைத்தையும் அவள் தன் னகத்துத் தாங்கி வைத்திருக்கிறாள். அங்ஙனம் உலகுக்கு ஆதாரமாயிருப்பதில் அவளுக்குச் சிரமம் ஏதுமில்லை என்னும் கோட்பாட்டை அவள் படைத்திருக்கிற மெல்லிய இடை எடுத்துக் காட்டுகிறது. தலம் என்னும் சொல் வெவ்வேறு படித்தரங்களில் இருக்கின்ற பிரபஞ்சத்தைக் குறிக்கும். அவைகளில் சில அதளம், இதளம், சுதளம், ரசாதளம் எனப் பொருள்படும், இத்தனைவிதமான படித்தரங்கள் இருக்கின்ற உலகனைத்தையும் அன்னை தாங்கிக்கொண்டு இருக்கிறாள் என்பது கோட்பாடு. இந்த அமைப்பை அமைதியாகச் சிந்தனை பண்ணுவது அன்னையின் வழிபாடு ஆகும்.

848. उदारकीर्ति உதாரகீர்த்தி — பெரும் புகழுக்கு இருப்பிடமானவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிரபஞ்சம் அனைத்துமாய் அம்பிகை இலங்குகின்றாள். அப்பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பகுதியும் போற்றுதற்குரியதாகவே அமைந்திருக்கிறது. பாலைவனம் போன்ற வெறும் வெளியைப் போற்றுதற்கு என்ன இருக்கிறது எனச் சிலர் கருதலாம். ஆனால் அதன் அமைப்பைக் கவிஞர்கள் மூலமாகக் கேட்கின்ற பொழுதுதான் அதன் அழகு மற்றவர்களுக்கு விளங்கும். பகவதி என்பது அம்பிகையின் பெயர். பக என்னும் சொல் தெய்விக சம்பத்துக்கள் பலவற்றிற்கு இருப்பிடம் எனப் பொருள்படுகிறது. அந்தச் சம்பத்துக்களுள் கீர்த்தியும் ஒன்றாகிறது. பூமியில் புகழத்தக்க பொருளே எனப் பக்தர் ஒருவர் தாம் வழிபடு தெய்வத்தைப் போற்றினர். பெயர் எதுவாயினும் அது மெய்ப்பொருளாகவே இலங்குகிறது. அத்தகைய மெய்ப்பொருள் கீர்த்திக்கு இருப்பிடம். அக்கீர்த்தியோ பொருள் சேர்ந்த புகழ் ஆகிறது.

" இருள்சேர் இருவினையும் சேராஇறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு "

என்பது பொய்யாமொழி. அம்பிகையின் கீர்த்திகளைப் போற்றுதற்கு ஏற்ப ஆத்மசாதகனிடத்து அஞ்ஞான இருள் அகலுகிறது. ஞான பரிபாகம் ஓங்குகிறது.

அன்னை பராசக்தி மட்டும் கீர்த்திக்கு உரியவள் அல்லள். அவளை உபாசிக்கின்ற நல்லவர்களும் கீர்த்திக்கு இலக்காகின்றனர்.

ஆரம் என்பது மங்களம் எனப்பொருள்படுகிறது. ஆதலால் நவக்கிரகங்களுள் ஒன்றாகிய செவ்வாய்க்கும் அப்பதம் உரியதாகிறது. செவ்வாய் கிரஹம் ஆதிக்கத்திலிருக்கிறபொழுது கேடுகள் பல வருகின்றன. அன்னையின் உபாசனையினால் அக்கேடுகள் பெரிதும் தவிர்க்கப்படுகின்றன. ஆகவே அன்னை பராசக்தியின் வழிபாட்டின் வாயிலாகப் பாராட்டுதற்குரிய பண்புகள் பல வந்தமைகின்றன என்னும் கோட்பாடு இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

849. उद्दामवैभवा உத்தாமவைபவா — தாமம் என்பது கயிறு. கட்டுதற்கு அது உதவுகிறது. எது கட்டப்படுகிறதோ அது எல்லையில் அடங்குகிறது. உத்தாமம் என்பது எந்தவிதமான கட்டிலும் அடங்காதது எனப்பொருள்படுகிறது. வைபவம் என்பது வளம் எனவும் வல்லமை எனவும் பொருள்படுகிறது. கட்டில் அடங்காத செல்வத்தை அம்பிகை படைத்திருக்கிறாள். கட்டிலடங்காத வல்லமையையும் அன்னை படைத்திருக்கிறாள். இயற்கைத் தாயின் திருவிளையாடல்களே அதற்குச் சான்றாகின்றன.

850. वर्णरूपिणी வர்ணரூபிணீ — நிறங்களின் வடிவத்திலிருப்பவள் என இந்த நாமம் பொருள்படுகிறது.

வர்ணம் என்னும் சொல் அக்ஷரம் அல்லது எழுத்தைக் குறிக்கிறது. மொழிகளில் அறுபத்து நான்கு அக்ஷரங்கள் இருக்கின்றன. ஒவ்வோர் அக்ஷரத்துக்கும் ஒவ்வோர் ஓசை

உண்டு. அந்த ஓசைகளின் திரள் ஓங்கார மாகிறது. உச்சரிக்கப்படும் ஓங்காரம் நாதப் பிரம்மத்தைக் குறிக்கிறது. நாதப் பிரம்மமோ அகிலாண்டங்களுக்கும் அடிப்படை வித்தாக அமைந்திருக்கிறது. ஆகவே காரண நிலை யிலோ அல்லது காரிய நிலையிலோ இயற்கை யில் அமைந்துள்ள யாவும் அன்னை பராசக்தி யினுடைய தோற்றங்களாம்.

அடுத்த படியாக வர்ணம் என்பது நிறத்தை யும் இனத்தையும் குறிக்கிறது. சூரியகிரணம் சிதறடைந்தால் ஏழு நிறங்களாகப் பிரிகிறது. இந்த ஏழு நிறங்களை மேலும் எண்ணிறந்த நிறங்களாக இயற்கை செய்துகொண்டிருக் கிறது. பச்சை நிறம் என்றால் அதில் பல படித்தரங்கள் இருக்கின்றன. அதே பாங்கில் சிவப்பு முதலிய ஏழு நிறங்களிலும் எண்ணி றந்த பாங்குகள் இருக்கின்றன. இயற்கை யின்கண் நாம் காண்கிற நிறங்களனைத்தும் அன்னையின் மகிமைகளாக மிளிர்ந்து கொண்டி ருக்கின்றன.

இனி, வருணம் என்பது உயிர் வகைகள் படைத்துள்ள பரிபாகத்தை விளக்குகிறது. மக்களுக்கிடையில் எத்தனைபேரோ அத்தனை விதப் பரிபாகங்கள் இருக்கின்றன. வசதியை முன்னிட்டு அவையாவும் நான்குபடித்தரங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள்முறையே பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்ர வருணங் கள் எனப் பகரப்படுகின்றன. பண்பாட் டில் உச்சநிலையை எய்தியிருக்கிற உயிர்வகை கள் அனைத்தும் பிராம்மண சொருபங்களாக விளங்குகின்றன. பண்பாட்டில் ஆரம்பதசை யிலிருக்கும் உயிர்வகைகள் சூத்திரவருணத்தில் உள்ளதாகச் சொல்லப்படுகின்றன. அப்படி வாழ்க்கையைத் துவக்குகிற உயிர்கள் அடுத்த படிக்கு வருகிறபொழுது வைசிய இனத்தைச் சேர்ந்தவைகளாக எடுத்துக்கொள்ளப்படுகின் றன. அதற்கும் மேல்படிக்கு வருபவைகள் க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவைகளாக அங்கீ கரிக்கப்படுகின்றன. இப்படியாகப் பரிண மித்து மேல் நிலைக்கு வருகின்றன. பிறகு வருணங்களையெல்லாம் தாண்டியநிலையில் பரம் பொருளில் ஒன்றுபடும் ஆத்ம பரிபாகம் சாத கனுக்கு வந்தமைகிறது. ஆகவே உயிர்வகை களின் இனம், வகுப்பு, பரிபாகம், முன்னேற் றம் ஆகிய யாவும் அன்னையின் சொருபங் களாதலால் அவள் வர்ண ரூபிணீ என விளக் கப் பெறுகிறாள்.

851. जन्ममृत्युजरातप्तजनविश्रान्तिदायिनी ஜன்மம்ருத்யு ஜரா தப்த ஜன விச்ராந்தி தாயினீ—பிறப்பு, இறப்பு, முதுமை இவை களால் தாக்கப்படுகிற ஜனங்களுக்கு விச்ராந் தியை அல்லது அமைதி நிலையை நல்குபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பள்ளிக்கூடத்தில் சிறுவன் ஒருவன் பாலர் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகிறான். படிப்பிலே படிப்படியாக மேல் நிலைக்கு வந்து அவன் கல்விமானாகப் பரிணமிக்கிறான். அதே விதத்தில் உயிர்வகைகள் நான்குவகுப்புக்களில் துவக்க வகுப்பாக இருக்கிற சூத்திர வர்ணத் தில் வாழ்வைத் துவக்குகின்றன. அந்த வகுப் பிற்கேற்ற முயற்சியில் அவைகள் ஈடுபடுகின் றன. அதில் பரிபாகம் அடைவதற்கு ஒரு பிறப்பு போதாது. பல பிறவிகளும் அவற்றைத் தொடர்ந்து வருகிற மரணமும் ஒவ்வொரு ஜீவ னுக்கும் வந்து அமைகின்றன. பிறந்த உயிர் இளமையில் வாழ்க்கையைத் துவக்குகிறது. காளைப்பருவம், முதுமைப்பருவம், மூப்பு ஆகி யவைகள் வாயிலாக ஒவ்வொரு ஜீவனும் படிப் படியாக மேல்நிலைக்குப் போய்க்கொண்டிருக் கிறது. மாணாக்கர்களுள் ஒரு சிலர் எளிதில் கல்வி பெறுகின்றனர். மற்றும் சிலர் சிரமப்பட் டுக் கல்வியைப்பெறுகின்றனர். இன்னும்சிலர், படாதபாடுபட்டுக் கல்வியில் மேல்நிலைக்கு வரு கின்றனர். மேல்நிலைக்கு வருகிற மாணாக்கர்கள் மேல் வகுப்பைச் சேர்ந்தவர்களாகிறார்கள். அதேவிதததில் ஆத்ம பரிபாகத்தில் மேல்நிலை எய்துகிறவர்கள் வருணத்தில் மேலே வந்தவர் கள் ஆகிறார்கள். இப்படி மேன்மையடைவ தற்குப் பிறப்பும், இறப்பும், மூப்பும் நன்கு பயன்பட்டு வருகின்றன. அந்தந்தப் படித்தரத் திலிருக்கும் ஜீவன் ஆத்ம பரிபாகம் அடைவ தற்கு ஏற்ற கடமையை அல்லது வர்ண தர்மத்தை நன்கு நிறைவேற்றியாக வேண்டும். அதன் பொருட்டு இடையிடையே ஓய்வு எடுத் துக் கொள்ளுவதும் அவசியமாகிறது. முன் னேற்றத்திற்கு முயற்சி எவ்வளவு இன்றியமை யாததோ அவ்வளவு இன்றியமையாததாக ஓய்வும் வந்தமைகிறது. நன்கு ஓய்வு எடுத்துக்

கொள்கிறவனே அடுத்த நாள் வேலைக்குத் தகுதி உடையவனாகிறான்.

வாழ்க்கையில் அமைந்துள்ள இக்கோட்பாட்டுக்கு விளக்கமாக ஹிமாசலத்தில் கேதார நாத, பத்ரிநாத யாத்திரைகள் அமைந்திருக்கின்றன. இந்த யாத்திரைகளில் திண்ணிய உடல் படைத்திருக்கிறவர்கள் விரைந்து சென்று விரைவில் யாத்திரையைப் பூர்த்தி பண்ணுகின்றனர். தகைமையில் பின் தங்கி இருப்பவர்கள் நிதானமாக நடந்து செல்லுகின்றனர். அன்னவர்களுக்கு வழி நெடுக விச்ராந்தி அல்லது ஓய்வு வேண்டிய அளவுக்குத் தேவையாகிறது.

அன்னை பராசக்தி அனந்தங்கோடி ஜீவர்களை வர்ணபாகுபாட்டின் வாயிலாகவும் முயற்சியின் தரத்திற்கேற்றவாறும் படிப்படியாக முன்னணிக்குக் கொண்டுவருகிறாள். அதற்குப் பிறப்பு, மூப்பு, இறப்பு முதலிய மாறுபாடுகள் இன்றியமையாதவைகளாக இருக்கின்றன. முன்னேற்றத்தின் பொருட்டுப் பெரும்பாடுபடுவதையும் ஜீவர்கள் தவிர்க்க முடியாது. அடுத்த முயற்சிக்கு ஆயத்தப்படுத்தல் பொருட்டு ஓய்வு எடுத்துக்கொள்ளுதலும் வாழ்க்கையில் இன்றியமையாத கூறு ஆகிறது. இம்முறைகள் யாவையும் கையாண்டு அன்னை பராசக்தி உயிர்களைப் படிப்படியாகப் பக்குவப்படுத்தி வருகிறாள் என்பது இந்த நாமத்தின் உட்பொருள்.

852. सर्वोपनिषदुद्घुष्टा சர்வோபனிஷத் உத்குஷ்டா—உபநிஷதங்கள் அனைத்தாலும் ஒருங்கே போற்றப்படுபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

உபநிஷதங்கள் எனப்படுபவை மறைமுடி என்று அழைக்கப்படுகின்றன. வேதங்களின் உச்சநிலை என்பது அதன் பொருள். வேதங்களை விருட்சங்களாக வைத்துக்கொண்டால் அவைகள் தோற்றுவிக்கும் கனிகளாக அமைந்திருப்பவை உபநிஷதங்கள். வேதங்களைக் கர்ம காண்டமாக வைத்துக்கொண்டால் அதினின்று உருவெடுக்கின்ற ஞானகாண்டம் என உபநிஷதங்களைப் பர்ராட்டலாம். வேதங்கள் பிரபஞ்ச அமைப்புக்கு விளக்கங்களாக அமைந்திருக்கின்றனவென்றால் பிரபஞ்சத்துக்கு அப்பாலிருக்கின்ற பரவஸ்துவை அடைவதற்கு வழிகாட்டிகளாக அமைந்திருப்பவைகள் உபநிஷதங்கள். அப்பாலிருக்கின்ற பரவஸ்துவின் சொரூப இலக்ஷணம், தடஸ்த இலக்ஷணம், அப்பொருளை அடைவதற்கான சாதனங்கள் ஆகியவைகளை உபநிஷதங்கள் விளக்குகின்றன. பரவஸ்து யாண்டும் இருப்பதால் அது ஸத் எனவும், அது தன்னைத்தானே அறிந்து கொண்டிருப்பதால் சித் எனவும் தன்னில் திருப்தி அடைந்து இருப்பதால் ஆனந்தம் எனவும் இயம்பப் பெறுகிறது. இதுதான் மெய்ப்பொருளைப்பற்றிய சொரூப இலக்ஷணம். பிறகு படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்சகிருத்தியங்களை அப்பரவஸ்து நிகழ்த்திக் கொண்டிருப்பதால் இப்பஞ்சகிருத்தியங்கள் அப்பொருளின் தடஸ்த இலக்ஷணங்கள் எனவும் இயம்பப்படுகின்றன. வழிகாட்டியாக உபநிஷதங்கள் அமைந்திருந்தும் மனம் மொழிக்கு எட்டாத பொருளைச் சொல்லால் ஏகதேசம் விளக்கியும் விளக்காமலும் இருப்பதால் உபநிஷதங்களின் உட்பொருள் இரகசியம் என இயம்பப் பெறுகிறது. ஏஹ்யானும் மௌனஸ் சாஸ்மி என்பது பகவத்கீதை வாக்கியம். முடிந்த பொருளுக்கு விளக்கமாக நான் மௌனமாகவிருக்கிறேன் என்பது அதன் பொருள். தக்ஷிணாமூர்த்தி தாமே மௌனோபதேசத்தில் மூழ்கியிருக்கிறார். சொல்லற்கரிய பொருளை ஒரு சொல்லால் உணர்த்தி என்று சான்றோர் ஒருவர் இயம்புகின்றார். அப்படிச் சொல்லால் சுட்டிக்காட்ட முயலுவது உபநிஷதங்களின் போக்கு ஆகும்.

பரவஸ்துவுக்குப் பிரம்மம் என்றும் பிரக்ஞானம் என்றும் பிராணன் என்றும் ஆத்மா என்றும் பெயர்கள் பல அமைந்திருப்பினும் அப்பரவஸ்துவின் சொரூப விளக்கத்தில் உபநிஷதங்களுக்கிடையில் கருத்து வேறுபாடு இல்லை. அவை யாவும் ஏகோபித்துச் சகுண சொரூபமாயிருக்கும் அம்பிகையின் மகிமையையே பலப்பல விதங்களில் போற்றி வருகின்றன, நிர்க்குணமாயிருக்கும் பரவஸ்துவைச் சொல்லால் விளக்கமுடியாது. குணத்தோடு கூடியிருக்கிற அதே பொருளைப் பலப்பல பாங்குகளில் இவ்வுபநிஷதங்கள் சுட்டிக்காட்டியும் புகழ்ந்து பேசியும் வருகின்றன.

வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

ஆத்மா, அனாத்மா என்பவைகளுக்குள் உள்ள வித்தியாசங்களை எப்படி அறிவது? புருஷனுடைய லக்ஷணம் ஸ்திரீயினிடத்தில் இல்லை. ஸ்திரீயின் லக்ஷணம் புருஷனிடத்தில் இல்லை. புருஷனும் ஸ்திரீயும் வெவ்வேறு ஆகிறார்கள். அதேபோன்றுஸத் (என்றும் இருப்பது) என்பதன் லக்ஷணம் பொய்யில் (ஏதோ ஒரு சமயத்திலாவது, அவஸ்தையிலாவது இல்லாது போவது) கிடையாது. எப்படி வெளிச்சத்தின் லக்ஷணம் இருட்டில் இல்லையோ, இருட்டின் லக்ஷணம் வெளிச்சத்தில் இல்லையோ அதே போல அறிவின் (சித்) லக்ஷணம் ஜடத்தில் (அறிவும் உணர்வும் அற்றது) இல்லை. ஜடத்தின் லக்ஷணம் அறிவில் இல்லை. சந்திரிகையின் (குளுமை, மென்மை, இனிமை) லக்ஷணம் வெய்யிலில் இல்லை. வெய்யிலின் லக்ஷணம் சந்திரிகையில் இல்லை. அதே போல ஆனந்தத்தின் லக்ஷணம் துக்கத்தில் இல்லை. துக்கத்தின் லக்ஷணம் ஆனந்தத்தில் கிடையாது. ஆகையால் ஸத் சித் ஆனந்த ரூபமான ஆத்மாவும், அந்ருத (பொய்யான) ஜட, துக்க ரூபமான அனாத்மாவும் வேறு வேறு ஆனவைகள். (ஆத்மாவே அனைத்தும் ஆகியிருக்கிறது. இறைவனே அத்தனையும் ஆகி இருக்கிறார் என்கிற முடிந்த கோட்பாட்டை இங்கே எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்த நூலும் சர்வம் பிரம்மமயம்—ஜகத் முழுவதும் பிரம்மமே என்கிற முடிவுக்குத்தான் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. ஆனால் ஆத்மாவைப்பற்றி நன்கு தெரிந்துகொள்வதற்கு முதலில் ஆத்மா — அனாத்மா விசாரம் தேவை. ஆத்மாவும் அனாத்மாவும் வேறு வேறு ஆனவைகள், இருமைகள். துவந்துவங்களைப்பற்றி முதலில் அறிந்துகொள்கிறோம். நன்மை தீமை, இன்பம் துன்பம், பெரியது சிறியது, பாபம் புண்ணியம் என்கிற வேற்றுமைகளை, துவந்துவங்களை முதலில் புரிந்துகொண்டால்தான் இருமைகள் அற்ற கடந்த நிலையைப் புரிந்துகொள்ள முடியும். இவைகள் வெறும் தோற்ற மாத்திரம், மனது பொருள்படுத்திய விதம் என்கிற உண்மை அடுத்த படியில்தான் விளங்கும்.

ஆத்மா அனாத்மா இவைகளுக்கிடையில் உள்ள வித்தியாசத்தை இன்னும் விரிவாக அறிந்துகொள்வோம். இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் இம் மூன்றிலும் பாதிக்கப்படாமல் ஒரே ரூபமாய் எப்போதும் இருப்பது ஸத். முக்காலத்திலும் பொய்யாக இருந்தாலும் மெய்போல் தோன்றி விசாரிக்கிற போது பாதிக்கப்படுவது, மறைந்துபோவது அஸத் ஆகும். இதற்கு உதாரணமாகச் சந்தியா வேளையில் பாதையில் கிடக்கும் கயிறு, ஸர்ப்பமாக மாலையாக, தடியாக, நீர்க்கோடாகத்தென்படுவது சொல்லப்படுகிறது. நமது எண்ணம் போல் அது தோன்றுகிறது. பிறகு கூர்ந்து பார்க்கும்போது முன்பு தென்பட்ட எல்லா காட்சிகளும் மறைந்துவிடுகின்றன. கயிறு தன் நிஜ சொருபத்தில் காட்சி தருகிறது. பிராந்தி (மயக்கம், பொய்த்தோற்றம்) ஏற்படுவதற்கு முன்னும் பிராந்தி இருக்கும் போதும், பிராந்தி நீங்கியபின்னும் கயிறு ஒரேரூபமாகக், கயிறாகவே இருக்கிறது. அந்தக் கயிற்றில் ஆரோபிதமான (தோற்றமான) ஸர்ப்பம் முதலியவைகள் முக்காலத்திலும் இல்லாதவைகளாக, பொய்யாக இருந்தும் இருப்பவை போல் தோன்றுகின்றன. அதைப்பார்க்கும் மனிதன் உண்மையை விசாரித்துப் பார்த்தால் அது பாதிக்கப்படுகிறது, மறைந்து விடுகிறது. இப்படிப்பட்ட கயிற்றின் லக்ஷணம் ஸர்ப்பத்தில் இல்லை. ஸர்ப்பத்தின் லக்ஷணம் கயிற்றில் இல்லை. ஆகவே சொல், அர்த்தம், லக்ஷணம், தோற்றம், வியவகாரம் என்கிற ஐந்து வகையாலும் கயிறும் அதில் தோன்றும பாம்பும் ஒன்றுக்கொன்று விலக்ஷணமானது (மாறுபட்டது, ஒன்றல்ல) வேறுவேறு லக்ஷணம் கொண்டது என்பது தெளிவாகிறது. அப்படியே ஸத்தின் லக்ஷணம் அஸத்தாகிய தேகம் முதலிய பிரபஞ்சத்தில் இல்லை. அஸத்தின் லக்ஷணம் ஸத்தான ஆத்மாவில் இல்லை. ஆகையால் இவைகளுக்கிடையிலும் மேலே சொன்ன ஐந்து வகை லக்ஷணங்களால் வைலக்ஷண்யம் (ஐந்துவகை லக்ஷணங்களாலும் ஒற்றுமை இன்மை) இருக்கிறது. இப்படி

விசாரணை செய்து ஸத்துக்கும் அஸத்துக்கும் உள்ள வித்தியாசத்தை உணரவேண்டும். (அவனுடன் உள்ள விவகாரத்தை விட்டுவிடு. அவனுடன் உனக்கு என்ன சம்பந்தம்? வயது, அந்தஸ்து, படிப்பு, தொழில், ஜாதி எதிலாவது ஒற்றுமை இருக்கிறதா? பொருத்தமற்றவனுடன் வம்புசெய்துகொண்டிருக்கிறாயே என்று நம் மேல் அன்புள்ளவர்கள் நமக்குப் புத்தி சொல்கிறார்கள், கண்டிக்கிறார்கள். இதேபோன்று இங்கு शब्देन - अर्थेन - लक्षणेन - प्रतित्या·व्यवहारेण च पञ्चभिः प्रकारैर्वैलक्षण्यं சொல், அர்த்தம், லக்ஷணம், தோற்றம், வியவகாரம்என்ற ஐந்துவகைகளால் ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக் காட்டி ஒருவிதத்திலும் ஒற்றுமை இன்மையால் இரண்டும் வேறு வேறு ஆனவைகள் என்று நிருபிக்கிறார்கள். वैधव्यं=தலைவன் அற்ற நிலைமை. वैगुण्यं=குணம் அற்றது அதுபோல वैलक्षण्यं = லக்ஷண சம்பந்தம், ஒற்றுமை இல்லாமை என்று பொருள்.)

சித் என்பதற்கும் ஜடம் என்பதற்கும் உள்ள பேதத்தை அறிவோம். சூரியன் சந்திரன் முதலியவைகளின் ஒளியைஎதிர்பாராமல் தன்சொந்த பிரகாசத்தாலேயே பிரகாசித்துக் கொண்டு தன்னிடம் ஆரோபிதமான (தோற்றமான) ஜடவஸ்துவையும் பிரகாசப்படுத்துகிறதாகவும் இருக்கிறது சித். ஒளியுள்ள சூரியன் சந்திரன் முதலியவைகளையும் ஒளியற்றதான மண் கல் முதலிய வஸ்துக்களையும் எது பிரகாசப்படுத்துகிறதோ. (பார்க்கிறதோ, உணர்கிறதோ அறிகிறதோ) அதுதான் சித்வஸ்து. ஜடத்தின் லக்ஷணம் தானும் பிரகாசிக்காமல் மற்றவைகளையும் பிரகாசப்படுத்த முடியாத தன்மை உடையது. இரண்டிற்கும் திருஷ்டாந்தம்: சூரியன் வேறு எதன் பிரகாசத்தையும் எதிர்பாராமல் தானே பிரகாசித்துக்கொண்டு, குடம் வஸ்திரம் போன்ற இதர ஜடப்பொருள்களையும் பிரகாசப்படுத்துகிறது. இது போன்றுதான் சித்பிரகாசமும். குடம், வஸ்திரம் முதலியவை தாங்களும் பிரகாசிக்காமல் மற்ற பொருள்களையும் பிரகாசப்படுத்த சக்தியற்றவைகளாகவிருக்கின்றன. அம்மாதிரியே எல்லா ஜடவஸ்துக்களும் இருக்கின்றன. சூரியன், குடம், வஸ்திரம் ஆகியவைகளுக்கு மேலே சொன்னசொல், அர்த்தம், லக்ஷணம், தோற்றம், வியவகாரம் ஆகிய ஐவகையிலும் பேதம் இருப்பது போன்று சித்துக்கும் ஜடத்துக்கும் இடையில் பேதம் இருக்கிறது.

இப்படி அறிவதனால் என்ன பிரயோஜனம்? உலகில் எந்த வஸ்து பிரகாசப்படுத்தப்படுகிறதோ அதில் உள்ள மாறுதல்கள் பிரகாசிக்கும், பிரகாசப்படுத்தும் பொருளை முக்காலத்திலும் பாதிப்பதில்லை என்பதை அறிந்து கொள்கிறோம். இது ஒரு முக்கியமான ஞானபலன். சூரியனால் பிரகாசப்படுத்தப்பட்ட குடத்தில் ஓட்டை ஏற்பட்டால் சூரியனுக்கு நஷ்டமோ, ஓட்டை இல்லாமல் இருந்தால் லாபமோ இல்லை. ஸ்பர்சத்தால் விலக்கப்படும் தன்மையோ, ஸ்பர்சம் இல்லாத இடத்து ஸ்வீகரிக்கும் (தன் வசப்படுத்தும்) தன்மையோ, நல்ல லக்ஷணத்தால் சந்தோஷமோ, அவலக்ஷணத்தால் துக்கமோ, நன்றாக இருந்தால் சிறப்போ, நன்றாக இல்லாமையால் சிறப்பின்மையோ— இவை போன்ற மாறுதலான குணங்கள் பிரகாசத்தைக்கொடுக்கும் சூரியனை அடைவதில்லை, மாற்றம் அடையச் செய்வதில்லை. இதுபோல ஆத்மாவினால் பிரகாசத்தை அடையும் தேகம், இந்திரியம் முதலியவைகளிலுள்ள பெயர், ரூபம். ஜாதி, வருணம், ஆசிரமம், பிரவிருத்தி, நிவிருத்தி, கட்டளை, தடை, ஆறுவித மாறுதல்கள் (உண்டாவது, இருப்பது, வளர்வது, மாறுவது, குறைவது, அழிவது) ஆறுவித ஊர்மிகள் (ஊர்மிகள் = அலைகள் = ஜீவனைத் தாக்குகிற, அடித்துச் செல்கிற மாயையின், பிரபஞ்ச சாகரத்தின் அலைகள்: அவையாவன சோஹம்— மோஹம் — பசி — தாகம் — கிழத்தனம் — சாவு) ஆறு கோசங்கள் (உரைகள்) குருட்டுத் தன்மை, மந்தத்தன்மை, சாமர்த்தியம் முதலிய சகல குணபேதங்களும் பிரகாசப்படுத்தும் ஆத்மாவை முக்காலத்திலும் கொஞ்சமேனும் பாதிக்காது என்கிற ஞானம் நமக்கு ஏற்படும். கண்ணாடியின் முன்பு யார் எக்கோலத்தில் நின்றாலும், அழுதாலும், சிரித்தாலும், உள்ளது உள்ளபடி காட்டுகிறது. அந்தக் குணதோஷங்களை அது ஏற்பதில்லை, அதனால் பாதிக்கப்படுவதில்லை, மாற்றம் அடைவதில்லை. எல்லாவற்றிற்கும் சாக்ஷியாக, எல்லாத் தோற்றத்துக்கும் காரண பூதமாக, எல்லாவற்றின் சத்தாக, சித்தாக உள்ள பொருளின் தன்மை அது.

இனி, ஆனந்தத்துக்கும் துக்கத்துக்கும் உள்ள பேதத்தைப் பற்றித் தெரிந்து கொள்வோம். ஆனந்தத்தின் லக்ஷணம் என்ன? வேறு ஒன்றினலும் ஏற்படாததும், மிகமிகச் சிறந்ததும், அதைவிட மேலானது இல்லாததும், சாசுவதமானதும் ஆன இன்பம், சுகம் எதுவோ அதுவே ஆனந்தம். துக்கம் என்பது என்னவெனில் பிரதிகூலமாக, நமக்கு இடைஞ்சலாக, வேண்டாததாக அறியப்படுவதெல்லாம் துக்கம் எனப்படுகிறது. இவ்வுலக இன்பம் இன்பம் போன்றுதோன்றித் துக்கத்தில் முடிகிறது. அது ஓயாது இன்று இன்பம், நாளை துக்கமாக மாறி அமைந்து கொண்டிருக்கிறது, இந்திரியங்களைத் தேய்க்கிறது, ஒருநாளும் திருப்தி உண்டாவதில்லை. அவைகளிடத்து உண்மையில் இன்பம் இல்லை. இந்த விழிப்பை அடைந்தவன் இவ்வுலகையே துக்கமயம், 'அநித்தியம், அசுகம், இமம் லோகம்' என்கிற உண்மையைக் கண்டு கொண்டவன் ஆகிறன். கடவுளிடத்திருந்து வந்த இப்பிரபஞ்சத்தைக் கடவுளாகப் பாவிக்க, பார்க்க, உணர, அறியத்தெரியாதது போலத் துக்கத்தை மயக்கத்தால் இன்பமாகக் கருதுகிறோம். உண்மையை அறிந்தவனே இவ்வுலக இன்பங்களை வெறுத்து ஒதுக்குகிறன். துக்கத்தைப்பற்றித்தெரியாதார்யார்? இவ்வுலக வாழ்க்கை துக்கம் நிறைந்தது. உடலில் வாழ்வது துக்கம். இந்திரியசுகங்கள் யாவும் துக்கத்துக்கு ஏதுவானவைகள். பொருள்களிடத்தில் பற்று, விருப்பம் வைப்பது, அவற்றைத் தன் வசப்படுத்த முயல்வது, வெறுப்பையும் துவேஷத்தையும் வளர்க்கின்றன. நாம் பற்று வைத்த பொருள்களும் மலினமடைகின்றன. இவைகள் எல்லாம் துக்கம் தரும் செயல்கள். இதுவே துக்கத்தின் லக்ஷணம் என்று சொல்லலாம்.

இந்தத் துக்கம் மூன்று வகைப்படும். **1. ஆத்யாத்மிகம், 2. ஆதி பௌதிகம், 3. ஆதி தைவிகம்.** இந்திரியங்களினல் தேகத்தில் வாதம், பித்தம், சிலேஷ்மம் இவற்றினல் உண்டாகும் வியாதி, வேதனைகள் ஆத்யாத்மிகத் துக்கம். பிருதிவி முதலிய பூதங்களாலும் ஸர்ப்பம் முதலிய பிராணிகளாலும் ஏற்படும் துக்கம் ஆதி பௌதிகம். இயற்கையால், தெய்வத்தால் ஏற்படும் மழைஇன்மை, அதிகமழை, கொள்ளை நோய், இடி இவற்றல் ஏற்படும் துக்கம் ஆதி தைவிகம் எனப்படுகிறது. இந்த மூன்று விதமான துக்கங்களிலிருந்தும் ஜீவர்களை ரக்ஷிக்கும்படி பிரார்த்திக்கிற முறையில்தான் எல்லா வேதபாராயணத்தின் முடிவிலும் ஓம் சாந்தி என்று மும்முறை சொல்லப்படுகிறது.

ஆனந்தத்துக்கும் துக்கத்துக்கும் என்ன திருஷ்டாந்தம்? (உதாரணம்): அமிருதம் தானே சுயமாகச் சுக ரூபமானது. அதைச் சாப்பிடுகிறவர்களுக்கும் சுகத்தைக் கொடுக்கிறது. விஷம் தானே கொடியது, அதைச் சாப்பிடுகிறவர்களையும் தபித்துக் கொல்லுகிறது. இந்த விதமான அமிர்தத்துக்கும் விஷத்துக்கும் முன்பு சொன்ன சொல், அர்த்தம், லக்ஷணம், தோற்றம், வியவகாரம் முதலிய ஐந்து வகையாலும் எப்படிப் பேதமுள்ளதோ அப்படியே ஆனந்தத்துக்கும் துக்கத்துக்கும் வைலக்ஷண்யம் (லக்ஷணத்தில் ஒற்றுமை இன்மை) இருக்கிறது. ஆனந்தத்தின் லக்ஷணம் தாபத்ரயங்களை (மூவகைத் துன்பங்களை) உண்டுபண்ணும் துக்கத்தில் இல்லை. துக்கத்தின் லக்ஷணம் ஆத்ம சொரூபமான ஆனந்தத்தில் இல்லை. ஆகையால் ஐந்து வகையிலும் இரண்டிற்கும் இடையில் பேதம் உண்டு என்று அறிய வேண்டும். இதனல் முடிவாகிற உண்மை என்னவெனில் 'நான்' என்பதில் உள்ள ஆத்மா கயிற்றைப் போல 'ஸத்' ரூபமானதும், சூரியனைப் போல 'சித்' ரூபமானதும், அமிர்தம் போல 'ஆனந்த' ரூபமானதும் ஆகும். பாம்பைப் போலப் பொய்யானதும், குடத்தைப் போல ஜடமானதும், விஷத்தைப் போலத் துக்கத்தை உடையதுமான தேகம் இந்திரியம் முதலானபிரபஞ்சத்திலிருந்து வேறுபட்டது. குருமுகமாக ஆத்மாவை அறிந்துகொள்கிறனே அவனே பற்றற்றவன், அவனே செய்யவேண்டியதைச் செய்தவன், அவனே முக்தன்என்பது வேதாந்த சாஸ்திரங்களின் முடிபு ஆகும். இவைகள் எல்லாம் உண்மைதாம் என்று அறிவுக்குப்படுகிறது, அறிவுஏற்றுக்கொள்கிறது. ஆனல் அதனல் பிரயோஜனமில்லை. இடையருத மனனம் நிதித்யாசனம் மூலம் அவைகள் நமது போதமாக, உணர்வாக, அனுபூதியாக ஆகவேண்டும். ஆத்மா மூன்று சரீரங்களைக் காட்டிலும் வேறனது என்கிற முதல் லக்ஷணம் நிரூபிக்கப்படுகிறது.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

5. மனிதனும் நீர்மூழ்கிக் கப்பலும்

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல; காலவகையினுனே" எனும் நன்னூல் சூத்திரப்படி மனிதன் தன் திறமையால் புதுப் புதுப் பொருட்களைக் கண்டு பிடித்துக் கொண்டே இருக்கிறுன். இதனுல் பழைய பொருட்கள் மறைந்து புதியவை உருவாகின் றன. அறிவியல் அறிஞர்கள் இரவும் பகலும் ஓயாது உழைத்துப் பல புதிய உண்மைகளைக் கண்டு பிடித்தனர்; கண்டு பிடிக்கின்றனர். மோட்டார் வண்டி, வானெலி, வான ஊர்தி, ரேடார், தொலைபேசி, தொலைக்காட்சி போன்ற பொருட்களைக் கண்டு பிடித்தனர். அவர்களின் கண்டு பிடிப்புக்கள் நமக்கு நாள்தோறும் நன்கு உதவுகின்றன. காற்றின் தன்மைகளை ஆராய்ந்து அதில் பறந்து வெற்றி கண்டனர். நீரின் தன்மைகளை ஆராய்ந்து அதில் கப்பலைச் செலுத்தினர். மேலும் முன்னேற்றம் கண்டு நீர்மூழ்கிக் கப்பலையும் தோற்றுவித்தனர். இதன் உதவியால் கடலின் உள்ளேயும் பயணம் செய்யலாம்.

நம் பாரத நாட்டுக் கப்பற்படையிலும் பிற நாட்டுக் கப்பற்படைகளிலும் நீர்மூழ்கிக்கப்பல் களை (Submarines) வைத்திருக்கிறுர்கள். இந்த நீர்மூழ்கிக் கப்பல்களை வேண்டும்போது நீருக்குள் மூழ்கும்படி செய்யலாம். நீர்மட்டத் திற்கு மேலே வந்து மிதக்கும்படியும் செய்ய லாம். நீரில் கப்பல் மூழ்கியிருக்கும்போது நீரின் அழுத்தத்தால் கப்பல் பிளந்து விடாத படி கப்பலின் வெளிப்பகுதி உறுதியாகச் செய்யப்பட்டிருக்கும். 1898ஆம் ஆண்டில் "ஜான்ஹாலந்து" என்ற அமெரிக்க அறிவிய லறிஞர் முதன் முதலாக நீர்மூழ்கிக் கப்பலைச் செய்தார். பின்பு அதனைத் திருத்தியமைத்துப் பல நீர்மூழ்கிக் கப்பல்கள் செய்யப்பட்டன. தற்காலத்தில் அணுசக்தியால் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல்களும் இருக்கின்றன.

இந்நீர்மூழ்கிக் கப்பல்களில் உள்ள தொட்டி களுக்கு "பாலஸ்ட் தொட்டிகள்" என்று பெயர். இத்தொட்டிகளில் துவாரங்கள் இருக் கும். அவற்றைத் திறந்தால் தொட்டிகளுக்குள் நீர் நிரம்பும். இதனுல் கப்பலின் எடை அதிக மாகி, கப்பல் தண்ணீருக்குள் மூழ்கும். இவ் வாறு நிரம்பிய நீரை வெளியேற்றுவதற் கென்று அழுத்தமிக்க காற்றை உற்பத்தி செய் யும் அமைப்புக்கள் கப்பலில் உள்ளன. அதன் துணைகொண்டு காற்றைத் தொட்டியினுள் நிரப்பினுல் நீர் வடிந்துவிடும். இதனுல் கப்ப லின் எடை குறையும். கப்பல் நீர் மட்டத்துக்கு மேலே வந்து மிதக்கும்.

நீர்மூழ்கிக் கப்பலைப் போன்றவன் மனிதன். நீர்மூழ்கிக் கப்பலில் நீர் நிரம்புவதற்காக வைக்கப்பட்டுள்ள தொட்டிகள் போன்றது உள்ளம். தொட்டிகளில் உள்ள துவாரங்கள் போன்றவை இந்திரியங்கள். நீர் நிரம்பினுல் கப்பல் நீரில் மூழ்கும். அதுபோன்று உள்ளம் என்னும் தொட்டியில் இந்திரியங்கள் என்னும் துவாரங்கள் வழியாக உலக விஷயம் என்னும் நீர்புகுந்தால் மனிதன் பந்தபாசக் கடலில்மூழ்கி விடுகிறுன். அழுத்தமிக்க காற்றைச் செலுத் தினுல் நீர் வெளியேறிக் கப்பல் நீரின் மேற் பரப்புக்கு வருகிறது. அதுபோன்று அழுத்த மிக்க காற்று என்னும் பகவத் சிந்தனை செய்தால் தொட்டியில் இருக்கும் நீர் வெளியேறி நீர்ப் பரப்புக்கு கப்பல் வருவதைப் போல உள்ளத் திலுள்ள பற்றுக்கள் வெளியேறி மனிதன் பந்த பாசக் கடலில் மூழ்காமல் வாழ்ந்திருந்து அதைக் கடக்கலாம். நீரைப் பயன்படுத்திக் கடலைக் கடப்பது அறிவுடைமை. அந்த நீரைக் கப்பலினுள் புகச்செய்தால் கப்பல் அமிழ்ந்து விடும். அதுபோன்று உலகைப் பயன்படுத்தி பந்தபாசக் கடலைக் கடப்பது அறிவுடைமை. உலக விஷயம் என்னும் நீரை உள்ளத்தினுள் புகச்செய்தால் பந்தபாசக் கடலில் மூழ்குவோம். ஆக, கப்பல் கடலில்இருந்தால்தான் சேர வேண்டிய இடத்தைச் சேரும். மனிதனும் உல கில் இருந்தால்தான் கடவுளை அறிய இயலும்.

"படகு நீரில் இருக்கவேண்டும். ஆனுல் நீர் படகுக்குள் நுழையலாகாது. அங்ஙனம் மனி தன் உலகில் வாழலாம். ஆனுல் உலக ஆசை அவன் உள்ளத்தில் புகுந்துவிடலாகாது."

— ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்.

குமரகுருபரர்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

கருவிலே திரு உடையவர் ஸ்ரீ குமரகுருபரர். இப்பேறு எல்லாருக்கும் வாய்ப்பது அரிது. எழுமை அல்லது எழு பிறப்புக்களிலும் தொடர்ந்து வாய்க்கின்ற திருவருளும், குருவருளும், கல்விப் பேறும் உடையவர்களுக்கே இத்தகைய அரும்பேறு கைகூடுவதாகும்.

குமரகுருபரர்க்கு, அவர் பழம் பிறவிகளில் செய்து வந்த தொடர்ச்சியான நல்வினைகள் அனைத்தும் இப்பிறவியில் ஒன்று கூடின.

திருஞானசம்பந்தப் பெருமானுக்கு உமாதேவியார் திருப்பாலமுது ஊட்ட, ஞானம் பெற்றுத் தேவாரப் பதிகம் பாடியருளினர்.

மணிவாசகப் பெருந்தகை திருவாசகம் பாடுவதற்கு, "நமச்சிவாய" எனச் செப்பேட்டில் எழுதித் திருப்பீடத்தின் அடியில் வைத்தருளினர் சிவபெருமான்.

சேக்கிழார் பெருமான் பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளுவதற்குச் சிதம்பரம் திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில், "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத்தருளினர் ஆடல் வல்லானாகிய கூத்தபிரான்.

அருணகிரிநாதர் திருப்புகழைப் பாடுவதற்கு "முத்தைத் தரு" என அடியெடுத்துக் கொடுத்தருளினர் வயலூர் முருகப்பெருமான்.

கவி காளிதாசனுக்குக் காளிதேவியே பிரத்யட்சமாக நேரில் தோன்றிக் கவிபாடும் ஆற்றலை நாவில் தந்தருளினள்.

குமரகுருபரருக்குத் திருச்செந்தூர்க் கந்தவேள் திருவருள் பாலிக்க, கந்தர் கலிவெண்பாவைப் பாடியருளினர். செந்திலாண்டவன் திருவருள் பெற்றுக் கந்தர்கலி வெண்பா என்னும் அருட்பாத் தமிழைப் பாடியருளினர்.

நாள்தோறும் கந்தர் கலிவெண்பாவைப் பாராயணம் பண்ணி முருகப் பெருமானைத் தியானம் செய்தால் நினைத்த காரியங்கள் நிறைவேறும் என்பது ஆன்றோர் அனுபவத்தால் கண்ட உண்மையாகும்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

ஸ்ரீ குமரகுருபரர் ஸ்ரீ வைகுண்டத்தினின்றும் யாத்திரையாகத் திருஆலவாய்என்னும் மதுரையம்பதி வந்து சேருகின்றார். அச்சமயம் மதுரையைத் திருமலைநாயக்க மன்னர் ஆட்சி செய்து வந்தார். அம்மன்னர் முன்னிலையில், மீனாட்சியம்மன் திருக்கோவிலில் குமரகுருபரர் மீனாட்சியம்மை பெயரில் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் என்னும் அருள் நூலைப் பாடியருளினர்.

பெண் தெய்வ வழிபாடு

பெண் தெய்வ வழிபாடு பழங்காலத்திலிருந்து நம் நாட்டில் இருந்து வருகிறது. கொற்றவை பெண் தெய்வம். சங்க இலக்கியங்களில் கொற்றவை பற்றிப் பேசப்படுகிறது.

இந்தியா முழுவதிலும் எல்லாத் தெய்வங்களையும் வபழிட்டாலும் ஒவ்வொரு மாநிலத்திலும் சில தெய்வங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் சிறப்பாக வழிபட்டு வருகிறார்கள்.

வங்காளத்தில் துர்க்காதேவிக்கு முதலிடம் கொடுத்து, அம்பிகை வழிபாடு நடத்தி வருவதை நாம காணலாம்.

கொற்றவை திராவிடரின் வெற்றித் தெய்வம் எனக் குறிப்பிடப்படுகின்றாள். இவள் முருகப் பெருமானுடைய தெய்வம் எனவும் குறிக்கப் பெறுகிறாள்.

கொற்றவைக்கு வழிபாடு முருகப்பெருமானுக்கு நடைபெற்று வந்தது போலவே, வெறியாட்டுடன் நடைபெற்று வந்தது.

எனவே, குமரகுருபர சுவாமிகள் முருகப் பெருமான் மீது கந்தர்கலிவெண்பாவைப் பாடித் துதித்த பிறகு, மீனாட்சியம்மையைப் போற்றித் துதித்து வழிபடுவது மிகவும் பொருத்தமாகும்.

கொற்றவைக்குப் பலி கொடுத்து வாழ்த்தியதைக் "கொற்றவை நிலை" எனத் தொல்காப்பியம் கூறுகிறது.

[தொல்காப்பியம்—பொருளதிகாரம்—நூற்பா-56]

"உருகெழு மரபின் அயிரை பரவியும்" [பதிற்றுப்பத்து]–மரபு நிலை வழுவாது, அயிரை மலையில் உறைகின்ற கொற்றவைத் தெய்வத்தைச் சேரமன்னர் வழிபட்டு வந்தனர் என்னும செய்தி பதிற்றுப்பத்து நூலால் தெரிய

வருகிறது.

"அஞ்சவரு மரபில் கடவுள் அயிரையின் நிலை" [பதிற்றுப்பத்து] – அச்சம் தருகின்ற முறைமையினை உடைய கொற்றவை உறைகின்ற அயிரைமலை என அதே பதிற்றுப்பத்து இயம்புகின்றது.

"விடர்முகை அடுக்கத்து விறல் கெழு சூலிக்குக் கடனும் பூணும்" [குறுந்தொகை : 218.]– பிளவுகள், குகைகள் இவற்றை உடைய மலைச் சாரலில் எழுந்தருளியுள்ள, வெற்றி நிரம்பிய திரிசூலத்தைக் கையிலே கொண்ட கொற்றவைக்குப் பலிக்கடனை நிறைவேற்றுதல் பற்றிக் குறுந்தொகை என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

சக்தியை முழுமுதல் தெய்வமாகக் கொண்டது சாக்தம். சாக்தம் இந்துமதத்தின் உட்பிரிவுகளான ஆறுவகைச் சமயங்களிலே ஒன்றாகும்.

இந்தியாவில் சக்தி பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை சக்தியின் பெருமையை நினைவூட்டுகின்றன. சிவஸ்தலங்களாக இருந்தாலும், அம்பிகைக்குப் பிரதானம் கொடுக்கக்கூடிய ஸ்தலங்களும் உண்டு. தனியே சக்தி தெய்வத்திற்கு ஆலயம் நிர்மாணம் செய்யப்பட்டிருப்பதையும் நாம் அறிகிறோம்.

சைவசித்தாந்தத்தில் சக்திக்குப் பிரதான இடம் உண்டு. இறைவன் அம்மையும் அப்பனுமாகக் காட்சியளிக்கிறான் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை.

சிவபிரான் தன் செயல் அனைத்தையும் சக்தியின் மூலமாகத்தான் செயல்படுத்துகிறான். அதாவது, சிவபெருமான் திருக்கருணைத் திறன் சக்தியின் மூலமாகப் பரிணமிக்கிறது. "சக்தி இல்லாவிட்டால் சிவனே என்று இரு" எனச் சொல்லுவதையும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். சிவபெருமான் பஞ்ச கிருத்தியங்களாகிய ஐந்தொழில்களைச் செய்வதற்குத் துணைக் காரணமாய் இலங்குபவள் சக்தி.

உமையம்மையே கோப வேளையில் காளி எனப்படுகிறாள். போர் முனையில் போர் செய்யும்போது, துர்க்கை எனப்படுகிறாள். ஆன்மாக்களாகிய அடியார்களுக்கு எல்லா ஐசுவர்ய போக போக்கியங்களை வழங்கும் போது பவானி எனப் போற்றப்படுகிறாள். புருஷரூபமான வேளையில் புருஷோத்தமன் எனப்படுகிறாள்.

கொற்றவையின் அருள் வடிவங்களாக மகாமாயை, மகிஷாசுர மர்த்தினி, காளி, சாமுண்டி, சண்டிகா தேவி, சியாமளா தேவி, சிவதூதி ஆகியவை சொல்லப்படுகின்றன.

காளிதாசர், காளமேகப் புலவர், குமரகுருபரர், அபிராமிபட்டர், சத்திரபதி வீர சிவாஜி, இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஆகியோர் அம்பிகையின் திருவருள் பெற்றவர்கள் ஆவார்கள்.

இன்றும் நம்மில் பலர் தேவி உபாசகர்களாக விளங்கி வருவதை நாம் பார்க்கலாம். கவிராஜ பண்டிதர் என்பவர் சௌந்தர்யலஹரியைப் பாடி தேவியின் அனுக்ரஹம் பெற்றார்.

இறைக்கு அடுத்தபடியாக நமக்கு உறுதுணையாக அமைந்திருப்பது மழை. மாரி என்னும் சொல் மழையைக் குறிக்கும். மாரி என்னும் மழையைப் போற்றி வந்த நிலை, காலப்போக்கில் மாரியம்மன் தெய்வமாக மாறி, மாரியம்மன் வழிபாடாக வடிவெடுத்தது.

கொற்றவை என்பவள் வெற்றித் தெய்வமாக இருந்து சங்ககாலத்தில் அனைவராலும் வணங்கப்பெற்றாள்.

காலப்போக்கில் அவளே சிறு தெய்வம், பெருந்தெய்வம் எனப்பிரிக்கப்பட்டாள். மாரியம்மன், காளியம்மன், திருநெல்வேலி மாவட்டத்தில் இசக்கி அம்மன், முப்பிடாரி அம்மன், கேரளாவில் பகவதி அம்மன் எனப் பல்வேறு பெயர்களை அம்பிகை பெறுகிறாள். காவல் தெய்வமாகவும் ஆக்கப்பெற்றாள். இன்றும் சிற்றூர்களில் எல்லையில் அம்மன் கோவில்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

வைதிக சமயக் கலப்பிற்குப் பிறகு பெருந்தெய்வமாக, சக்தியாக, உமாதேவியாக அம்பிகை ஆனாள். சிவன் கோவில்களிலே சிவனோடு சேர்ந்து பெருந்தெய்வம் ஆனாள்.

சிந்து வெளி நாகரிகத்தில் மூன்றுகண்கள் உடைய பெண் தெய்வ உருவம் ஒன்று கிடைத்ததாக வரலாற்று ஆசிரியர் ஒருவர் குறிப்பிடுகிறார்.

ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருள்களில் இருந்து, அங்கும் தாய் வழிபாடும் தாய்த் தெய்வ வழிபாடும் இருந்தன

வாகத் தெரிகின்றன.

வங்காளத்தில் துர்க்கை வழிபாடு பிரசித்த மானது என்பதை அறிவோம். துர்க்கை-காளி-கொற்றவை தமிழ் நூல்களிலே சொல்லப்பட்ட கொற்றவையே ஆவாள். காளிகோட்டம்-காளி கோவில். காளி கோட்டம் என்பது திரிந்து கல்கத்தா என வழங்கப்படுகிறது. கரியகாளி என்னும் பொருளில் காளிதேவியைக் கல்கத் தாவில் குறிப்பிடுகிறூர்கள். கரியகாளி கரியாளி என மருவியது. வங்கப் பெண்களுக்குக் கரி யாளி என்னும் பெயர் இடப்படுவதை இன்றும் காணலாம்.

தமிழர் எந்தக் காலத்தில் தோற்றத்திற்கு வந்தார்களோ அன்றுமுதல் தாயின் பெரு மையை உணர்ந்து, அவளின் தலைமையை ஏற் றவர்கள் ஆவார்கள். தாய்வழிச் சொத்துரிமை யைப் பெற்றிருக்கிறூர்கள்.

உலகில் ஏனைய மக்களிடையே இறைவன் ஆண்பால் உருவில் வழிபடப்பட்டு வந்திருக் கிறுன்.

ஆனல், தமிழர் எகிப்தியர், இலெமூரியர் சிந்துவெளித் தமிழர் ஆகியோரிடையே கடவுள் பெண்பாலாகத் தாய் உருவத்திலும் வழிபடப் பட்டு வந்தமையைக் காணலாம்.

பழந்தமிழர், மலையாளத்தார், பாலித்தீவு மக்கள், கிழக்கிந்தியத் தீவு மக்கள் இவர் களுக்கு இடையேயும் தாய்வழி உரிமை அமைந்தது.

தாய் என்பதிலிருந்துதான் தாயம் என்னும் உரிமையைக் குறிக்கும் சொல் வந்தது. தாயம் என்பதிலிருந்து தாயபாகம் என்னும் சொல் சட்ட நூலில் இடம் பெற்றுள்ளது நினைவு கூரத் தக்கது.

சங்க இலக்கியத்தில் காணப்படுகின்ற கொற்றவை வழிபாடு காலப்போக்கில் உலகு எங்கும் பரவி, எப்படி எல்லாம் மருவி வழங் கப்படுகிறது என்பதற்கான ஆதாரங்களைப் பார்த்தோம்.

கொற்றவையே மீனுட்சி, காமாட்சி, விசா லாட்சி, நீலயதாட்சி, பங்கஜாட்சி இவ்வா றெல்லாம் புகலப்படுகிறுள்.

கொற்றவையாகிய தாய் வழிபாடே உலகம் முழுவதும் பரவி இருந்தது என்பதைச் சம்ஸ் கிருதச் சுலோகம் ஒன்று எவ்வாறு கூறுகிறது? அதனைக் காண்போம்.

"மனித பாந்தவ்யங்கள் யாவற்றிலும் அன்னை யின் பாந்தவ்யமே மிகப் புனிதமானது. ஆத லால், இந்தியாவில் சகுணப் பிரம்மத்தின் பாவனைகள் யாவற்றிலும் ஜகன்மாதாவினு டையதே மிகவும் மேலானதாகக் கருதப்படு கிறது. அன்னையின் அன்பைப் போல, இளகி யதும். கவனத்தைக் கொண்டதும், பொறுமை யைப் பெற்றதும், சகிப்புத் தன்மையை உடை யதுமான அன்பு வேறு எதுவும் இல்லை. ஆத லால், கடவுள் நம் தாயாக ஆகிவிட்டால், வாழ்க்கையின் எல்லா நிலைமைகளிலும் நமக்கு ஒரு நிச்சயமான ஆதரவு ஏற்பட்டு விடுகிறது. இதையறிந்த இந்துக்கள் பரமாத்மாவை அன்னையாகவே வழிபட விரும்புகின்றனர். அவளுடைய பாதங்களில்தாம் தங்களுடைய இன்பமான சுவைமிக்க பாடல்களைப்பாடி அர்ச் சிக்கின்றனர். எந்த உருவத்திலும் அவளைக் கண்டு வணங்குகின்றனர். நன்மை தீமை ஆகிய இரண்டும் அவளுடைய மகிமையின் ஆவிர்ப்பவமே யாகும். அவள் இல்லாத இடம் இல்லை.''

குமரப் பெருமான் திருவருளைப் பெற்ற குமர குருபர சுவாமிகள், அடுத்து, அன்னையை வியந்து மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடி யது மிகவும் பொருத்தமாகும்.

பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் என்பது தமிழில் வழங்கு கின்ற தொண்ணூற்று ஆறுவகைப் பிரபந்தங் களில் ஒன்று.

நாம் எல்லாரும் இறைவனுக்கு–கடவுளுக்கு–குழந்தைகள் ஆவோம். நம் அனைவரையும் குழந்தைகளாகப் பாவித்து அருள்பாலிக்கிறூர் கடவுள். அத்தகைய கடவுளையே சிறுபிள்ளை யாகப் பாவனை பண்ணிப் பாடப்படும் நூல் பிள்ளைத்தமிழ். இது ஒரு விநோதமான கற் பனை. இறைவன் அல்லது இறைவியினுடைய அளப்பரிய ஆற்றலை இந்நூலுக்குள்ளே அமைத்துப் புலவர்கள் தங்களுடைய கற்பனைத் திறனுக்கு ஏற்ற முறையிலே பாடுவார்கள். அம்முறையில் மதுரையில் எழுந்தருளியுள்ள எம்பெருமாட்டி மீனுட்சியம்மையின் திருவருளை வியந்து குமரகுருபரரால் பாடப்பட்டது மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் ஆகும்.

பாரதப் பண்பு

(திருவேடகத்தில் ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவா சங்கம் நடத்திய பயிற்சி வகுப்பில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் நிகழ்த்திய அருளுரையும், ஆசி உரையும், வினா-விடைகளும்)

தாய் நாட்டின் செல்வர்களே! விவேகானந்தரின் வாக்கொன்றுள்ளது. "நீங்கள் தெய்வீகம் வாய்க்கப் பெற்றவர்களாக இருங்கள். மற்றவர்கள் தெய்வீகம் வாய்க்கப்பெற்றவர்களாவதற்குத் துணை புரியுங்கள்." மானுட ஜன்மத்தின் நோக்கம் முழுவதும் இந்த ஒரு வாக்கியத்தில் வந்து முடிகிறது.

அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

எல்லா மொழிகளுக்கும் முதலெழுத்தாக வருவது 'அ' என்கிற எழுத்து. அதுவே திரிவு பட்டு எல்லா எழுத்துக்களுமாக வடிவெடுக்கின்றது. அதுபோலவே உலகம் முழுவதும் ஆதிபகவனில் இருந்து வந்திருக்கின்றது. பொருள் ஒன்று தோற்றங்கள் பல. இதுவே தசாவதாரத்தின் தத்துவமாகும். உயிர்களின் பரிணாமமே தசாவதாரம். பத்து நிலையில் உள்ள மூர்த்திகளின் மூலமாக நம்முடைய ஜீவிதம் நமக்கு விளக்கப்படுகிறது. உயிர்வகைகளுள் அற்புதமாய் இருப்பது மனிதப் பிறவி. பிரபஞ்சத்தில் உயிர்கள் எத்தனை எத்தனை பாங்குடையவைகளாக அமைந்துள்ளனவோ, அந்தப் பாங்குகளனைத்தும் மனிதனிடம் அமைந்துள்ளன. மனிதன் ஒரே ஜன்மத்தில் மகோன்னத நிலைக்கும் போகலாம்; மேல் நிலையிலிருந்து கீழ்நிலைக்கும் வரலாம். தெய்வீகமான சூழ்நிலையில் தெய்வீகமான வாழ்க்கை வாழ்பவர்களுக்கிடையே மக்களை வைத்து விட்டால் மறைந்து கிடக்கின்ற தெய்வீகம் மக்களிடத்துத் தானாக வெளிவருகின்றது. மனதை மேன்மைப்படுத்தினால் மனிதன் மேன்மையடைகின்றான். நல்ல மனதுக்குச் சான்றாக, எக்காலத்திலும் மனிதனுக்குச் சான்றாக, சிறுவர்களுக்கெல்லாம் முன்மாதிரியாக அமைந்திருப்பவன் நசிகேதன். சுயநலத்தைப் பரநலத்தின் பொருட்டு ஒப்படைக்கின்றவனே பெரியவனாகின்றான். தந்தையைச் சத்திய சங்கல்பனுக்குவதன் பொருட்டு நசிகேதன் எமலோகம் போகின்றான். எமனிடத்திலே நசிகேதன் பெற்ற ஞானம் உலகை உய்விக்கின்றது. நசிகேதனின் பரிபாகம் சிறிதளவாவது நமக்கு வாய்க்குமானால் நாம் உலகத்துக்குப் பயன்படுகிற உத்தமர்களாவோம்.

நசிகேதனின் பண்பை ஒரு போக்கில் இந்தக் காலத்தில் பயன்படுத்தியவர் சுவாமி விவேகானந்தர். அவருடைய ஜீவிதம் எந்த அளவிற்கு உலகிற்குப் பயன்பட்டு வருகின்றதென்பது சொல்லாமலே விளங்கும்.

இளமைப் பருவத்தில் இங்கு (சங்கத்தில்) நாம் நல்ல பயிற்சி பெற்று வருகின்றோம். இங்குப் பெறுகின்ற பயிற்சியை நாம் நன்கு பயன்படுத்தி நமது வாழ்வை நம்முடைய சமுதாய நலனுக்காகப் பயன்படுத்துவோமானால் அது தலைசிறந்த தீர்மானம். இந்தப் பயிற்சி யளிப்பவர்கள் பெரிய காரியம் செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பயிற்சியின் மூலம் ஹிந்து சமுதாயத்தை உலகில் உயர்ந்ததாகச் செய்வீர்களானால் எடுத்த மானுடப் பிறவியை நன்கு பயன்படுத்தியவர் களாவீர்கள்.

பாரினில் உயர்ந்த நம்முடைய பரத கண்டம் உயர்வுற்று மீண்டும் உலக குருவாக ஆக வேண்டும். உலகுக்கு வழி காட்டியாக அமைய வேண்டும். இந்த அரிய பணியைச் செய்ய நீங்கள் பெறும் அரிய பயிற்சி துணைபுரிகிறது. ஆசையால் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நல்ல மாணவர்களாக இங்கிருந்து செல்வீர்களாக. எல்லாம் வல்ல இறைவன் சர்வகாலமும் அருள் புரிந்து வருவாராக.

* * *

உலகத்திலே பல சமயங்கள் இருக்கின்றன. இத்தனை சமயங்கள் அவசியமா என்ற கேள்வி கிளம்புகின்றது. அவரவர் மனப்பான்மைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப அன்னை பராசக்தி பலப்பல சமயங்களைக் கிருபைகூர்ந்து அமைத்து வைத்திருக்கின்றாள். சமயங்களை நாம் முறையாக அனுஷ்டித்தால் அவை யாவும் நம்மைப் பரத்தின்கண் கொண்டு சேர்க்கின்றன.

மதங்களுக்கெல்லாம் தாய்மதமாக இருப்பது ஹிந்துமத மென்று சர்வமத மகாசபையில்

விவேகானந்தர் பகர்ந்தார். மற்ற மதங்களுக்கு மத ஸ்தாபகர் உண்டு. ஹிந்து மதத்துக்குக் கிடையாது. ஏனென்ருல் மனிதர்க்கு முதல் ஸ்தானம் தராமல் கொள்கைக்கு முதலிடம் தருவதுதான் நமது ஹிந்து மதம். மனிதனை மேலான மனிதனுக்குவது ஹிந்து மதத்தின் சிறப்பு. நம்முடைய மதத்திற்குப் பெயர் தருவதென்ருல் அதனை "தர்மம்" என்று கூறவேண்டும். எக்காலத்திற்கும் உண்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறபடியால், மார்க்கம் மாருது அமைந்திருப்பதனல் 'சனுதன தர்மம்' என்று பெயர். இது ஜன சமூகம் முழுவதற்கும் பொதுவானது. உலகம் முழுவதற்கும் பொதுவானது.

பிரபஞ்சம் முழுவதுமே தர்ம சொருபம். உயிர்வகைகள் அடைந்திருக்கின்ற பரிபாகத்தை முன்னிட்டு அவற்றுக்குத் தர்மம் இருக்கின்றது. சனுதன தர்மத்தில் புகட்டுவது இரண்டே இரண்டு கோட்பாடுகள்தாம். மற்ற அனைத்துமே அதில் அடங்கியிருக்கின்றன. அதாவது "சத்தியம் வத; தர்மம் சர" என்பது. உண்மையையே பேசு, அறநெறி பிறழாதே என்பதாகும்.

சனுதன தர்மத்தில் பரிணும வாதம் உள்ளது. சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமித்து வருகின்றன என்பதே அந்தத் தத்துவம். மற்ற மதங்களில் பரிணுமவாதம் கிடையாது. கடவுள் என்ற ஒரு பெரிய பேருயிர் இத்தனை உயிர் வகைகளாக வடிவெடுத்து வருகிறது. பல பிறவிகள் மூலமாக அவை பரிணுமமடைகின்றன. ஒரே உயிர்தான் இத்தனை உயிர்களாகவும் இலங்குகின்றது என்பது ஹிந்து மதத்தின் தனிச்சிறப்பு.

சத்தியம் என்பது எது? எண்ணுவது, செயல்புரிவது, சொல்லுவது இந்த மூன்றும் திரிகரணங்களுக்கும் ஒத்திருப்பதே சத்தியம். கடவுள்தான் இத்தனையுமாயிருக்கிருர் என்பதை ஞாபகமூட்டுவதெல்லாம் சத்தியம். மனிதனுடைய மேலான நிலையை அவனுக்கு ஞாபகமூட்டி அதற்கேற்ப நடத்திவருவதுதான் "தர்மம் சர", அறவழி நடப்பது. மக்களை வரையும் மேல் நிலைக்குக் கொண்டுவருகிற சொல்லையே சொல்லி வருவதுதான் "சத்தியம் வத."

இதுதவிர வேறு இரண்டு கோட்பாடுகளையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒன்று யக்ஞம், இந்த யக்ஞம்தான் காமதேனு. மக்கள், விலங்குகள், பறவைகள் இவை ஒன்ருேடொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. இவை பரஸ்பரம் உதவி பண்ணிக்கொண்டிருந்தால் நல்வாழ்வு வாழலாம். நீ எவ்வளவுக்கெவ்வளவு சமுதாயத்திற்குத் தொண்டனுகிருயோ, தனி நலனைச் சமுதாய நலனுக்குப் பின்னணியில் வைத்துவிட்டுச்சமுதாய நலனில் எவ்வளவுக்கெவ்வளவு ஈடுபடுகிருயோ அவ்வளவுக்கவ்வளவு நீ மேன்மகனுகின்ருய். இதுதான் யக்ஞம், தியாகம்.

உலகத்தில் நாகரிகம் எது என்ற கேள்வி எழுகிறது. ஆசையைப் பெருக்கிக் கொள்வது தான் முன்னேற்றத்திற்கு அறிகுறி என்று கருதுகிருர்கள். ஆசையை ஒடுக்குகின்றவளவு மனிதன் மேலோன் ஆகின்ருன் என்பது பாரதப் பண்பு. பேரரசன் ஒருவனிடத்து வெறும் கௌபீனதாரியான முனிவர் ஒருவர் வந்தால் அந்த ராஜா எழுந்து நின்று அவரை வரவேற்கின்ருர். இது நம்முடைய தேசியப்பண்பாடு. ஏனெனில் உலக சம்பந்தமான பொருளெதுவும் அந்த முனிவரிடம் கிடையாது. பாரமார்த்திகப் பெருநிலைதான் அவருடைய பெரிய பேறு.

நாம் இந்தியாவில் பிறந்ததினுலேயே இந்தியர்களாகி விடமாட்டோம். இந்தியப் பண்பு எது என்று அறிந்து அந்தப் பண்புக்கேற்றபடி வாழ்ந்தால்தான் இந்த நாட்டுக்குரிய நன்மக்களாக நாம் ஆகின்ருேம். இந்தியப் பண்பு என்ன? ஒவ்வொரு மனிதனும் யக்ஞ மூர்த்தியாக இருக்கவேண்டும். தனக்கென வாழாது சமுதாயத்திற்கென வாழ்பவன் யக்ஞமூர்த்தி. ஆசையை வெல்லுகின்றவளவுக்கு நாம் மேல் நிலைக்குச் செல்லுகின்ருேம். அதுவே இந்தியப் பண்பு. பொருளாசையை ஒதுக்கிவைத்துவிட்டு அருளாசையை வளர்க்க வேண்டும். இதை நாம் ஒரு போதும் மறக்கலாகாது.

இராமாயணம், மகாபாரதம் நம் தேசியப் பாடப்புத்தகங்கள். இராமாயணத்தைப் பற்றிக் கூறும்படி அமெரிக்கன் கல்லூரி முதல்வரிடம் அமெரிக்கர்கள் கேட்டனர். "நான் கிறிஸ்தவன், எனக்கு இராமாயணம் தெரியாது" என்ருர். "இராமாயணமும் மகாபாரத

மும் தெரியா விட்டால் நீ இந்தியனே அல்ல" என்று அந்தக் கல்லூரி முதல்வரிடம் அமெரிக்க மக்கள் கூறினர்கள். அவ்விரு நூல்களும் நமக்குப் புகட்டுகின்ற பாடம். "சத்தியம் வத, தர்மம் சர." "சத்தியத்தினின்றும் பிசகாதே, தர்மத்தை உறுதியாகக் கடைப்பிடி" என்பது தான். இதற்கு வியாக்கியானமாக இந்தப் பெரிய இதிகாசங்கள் அமைந்திருக்கின்றன. அன்னிபெசன்ட் அம்மையார், "இராமாயண மகாபாரதத்துக்கு நிகரான நூல்கள் உலகத் தில இல்லை" என்று குறிப்பிட்டிருக்கிருர். இராமன் பண்பாட்டில் சிறந்தவன், நரோத்த மன். யுவராஜனுக முடிசூட்டப்பட விருந்தவன் மறுநாள் தாய் தந்தையர் உத்தரவுப்படி காட் டுக்குப் புறப்பட்டுப் போகின்ருன். மறுநாள் நிம்மதியாக மரத்தடியில் படுத்துத் தூங்குகின் ருன், அது மனபரிபாகத்திற்கு அறிகுறி. இராமன் தனது தந்தை தசரத சக்கரவர்த்தி யைச் சத்தியசங்கல்பனுக்கும் பொருட்டு வன வாசம்போனன். இது சத்தியத்துக்கு விளக்கம். காட்டில் இராமனுக்கும், பரதனுக்கும் இடையே தியாகத்தில் போட்டி நடக்கிறது. இது நம் முடைய தேசியப் பண்பு. எவ்வளவுக் கெவ் வளவு தியாக புத்தியில் மேலே போகிறேமோ அவ்வளவுக்கவ்வளவு பரத்தை அடைய நாம் தகுதியுடையவர்களாகின்ருேம். இரண்டு பேர் களும் சத்தியத்தை அவ்வளவு தீவிரமாகக் கடைப்பிடித்தார்கள். தர்மத்தினின்றும் பிச காதிருந்தார்கள்.

மகாபாரதமும் இதையே வலியுறுத்துகிறது. கௌரவர்கள், பாண்டவர்களுக்கு எவ்வளவு கொடுமைகள் இழைத்தாலும், தர்மம் பிசகா திருந்ததினுல் கடைசியில் அவர்கள் வெற்றி யடைந்தார்கள். யுதிஷ்டிரன் தர்மத்தினின்று பிறழாது ஆட்சி நடத்தினன். அது மட்டுமன்று. அவன் சொர்க்கலோகத்திற்குச் சென்ற பொழுது சகோதரர்கள் அனைவரும் இடையில் விழுந்து விட்டனர். நாய் மட்டும் கடைசி வரை வந்தது. இந்திரன் விமானத்தைக் கொண்டு வந்து தர்மனை விமானத்தில் ஏறச் சொல்லு கின்ருன். ஆனல் தர்மன் தம்முடன் வந்த சிற்று யிராகிய நாயை விட்டு விட்டுச் சொர்க்கத்திற் குப் போக விரும்பவில்லை. "சொர்க்கத்தில் தம்பிமாரோடும் திரௌபதியோடும் இருக்க விரும்புகிறீரா அல்லது துன்பம் நிறைந்த பூலோகத்தில் நாயுடன் இருக்க விரும்புகிறீரா" என்று இந்திரன் கேட்கின்ருன். "என்னை நம்பி வந்த நாய் சிற்றுயிராக இருக்கலாம், எனினும் இடை வழியில் நான் அதைக் கைவிடமாட் டேன்" என்ருன் தர்மன். இது தர்மத்தினு டைய உச்சநிலை. அந்தநாய்தான் தர்மதேவதை. சுய நலத்தை நாடுகின்றவன் தர்மத்தினின்றும் கீழே போகின்ருன். தியாகம் பண்ணப் பண்ண மேல்நிலைக்கு வருகின்ருன். சத்தியத் தையும் தர்மத்தையும் நாம் மிக உறுதியாகக் கடைப் பிடிக்கவேண்டும். அப்பொழுதுதான் இந்தப் புண்ணிய பூமிக்குச் சொந்தமான பெரு மக்களாகின்ருேம். இறைவனுடைய திருவரு ளால் இந்த மேலான கருத்தை ஏற்று இந்த நாட்டுக்குரிய நல்ல அருட் செல்வர்களாக மாறி அமைய நம் உள்ளத்திலே குடி கொண்டிருக்கிற இறைவன் சதா நமக்குத் துணை புரிந்து வரு வாராக.

* * *

"இளைஞர்களே! நீங்கள் பாக்கியவான்கள். இலங்காபுரிக்குப் போகவேண்டிய ஆஞ்சனே யன், ஒரு கணத்திற்கு உறக்க நிலையில் இருந் தான். அவனுடைய நிஜசொரூபம் என்ன வென்று அவனுக்கு ஞாபகப்படுத்தியவுடனே இலங்காபுரிக்குப் போவது மட்டுமன்று, சீதா பிராட்டியார் இந்தப் பிரபஞ்சத்தில் எங்கிருக் கிருள் என்று கண்டுபிடிக்கிற வல்லமையும் வந்தமைகிறது. அந்தப் பாங்கிலே நீங்கள் எத்தகைய தகைமை வாய்ந்தவர்கள் என்பது ஞாபகமூட்டப் பட்டிருக்கிறது.

கண்ணன் அர்ச்சுனனுக்குக் கூறியது போன்று கோழைத் தனத்தை உதறித் தள்ளிப் பராக்கிரமம் வாய்ந்தவர்களாக நாம் எழுந் திருக்கவேண்டும். அரிய பெரிய காரியங்களைச் செய்து வரவேண்டும்.

இந்தப் பிரபஞ்சத்தில் எடுத்துக்கொண்டால் நம் நாடு பாக்கியம் நிறைந்த புண்ணிய நாடு என்பதில் சந்தேகமில்லை. "பலமஸி, பலமயி தேஹி, வீர்யமஸி வீர்யமயி தேஹி" இந்த நாட்டுச் செல்வர்களாய் இருக்கின்ற நீங்கள் உடலில் உறுதி, உள்ளத் தெளிவு, ஆன்ம பரி பாகம் பெறவேண்டும். வீரர்களாக இருக்கின்ற நீங்கள், தீரச் செயல்களைப் புரிந்துவர வேண்

டும். நீங்கள் இத்தனைபேர் சேர்ந்து பயிற்சி செய்தீர்கள். "சங்கச் சத்வம், சம்வதத்வம், சம்வோமனம்சி ஜானதாம்." "உடம்பிலே ஒத்திருப்போமாக, பேச்சிலே ஒத்திருப்போமாக, சிந்தனையில் ஒத்திருப்போமாக." மூன்று கரணங்கள் ஒன்றுகூடுமானால் அரிய பெரியகாரியங்களைச் சாதிக்கலாம். தேங்காய் நாரை ஒன்ருகச் சேர்த்துக் கயிருகத் திரித்தால் அந்தக் கயிற்றைக் கொண்டு யானையைக் கட்டலாம். நாம் எல்லாரும் ஒன்றுபட்டு நம்மிடையே ஒருமைப்பாடு வருமானால், அரிய பெரிய காரியங்களைச் சாதிக்கத் தகுதியுடையவர்களாகின்ருேம்.

வீரமென்பதென்ன? அதர்மத்தை அழித்தொழிப்பது தர்மம். ஒரு முறை சுவாமி விவேகானந்தரைக் குரங்குகூட்டம் ஒன்று துரத்தியது. விவேகானந்தர் எதிர்த்து நின்றபோது குரங்குகள் பறந்தோடின. அதுபோலவே நாம் தீமையை எதிர்த்து நிற்கவேண்டும். நாம் ஒற்றுமையாக இருந்தால் அதுவே வலிமை.

கடந்த ஒரு மாதத்திற்குள் எவ்வளவு தூரம் உங்களுக்கு மனபரிபாகம் வந்திருக்கிறது என்பது உங்களுக்கே தெரியாது. ஆஞ்சனேயன் தன் பலத்தை மறந்திருந்ததால் ஞாபகப்படுத்தியபின் நன்கு பயன்படுத்தினன். நாம் வீடு திரும்பிய பின் தாய்தந்தையரின்காலில் விழுந்து வணங்க வேண்டும்.

சான்ருேர்களாக, வீரர்களாக, தாய்நாட்டின் செல்வர்களாக இருந்து இந்தப் பயிற்சியைச் சரியாகப் பயன்படுத்த வேண்டுமென்ருல் சமுதாயத்திற்கு நல்ல முறையில் பாடுபட வேண்டும். வாரத்தில் இரண்டு நாள் சமுதாயத்திற்குப் பயன்படுகிற முறையிலே நீங்கள் பாடுபடவேண்டும். பலனை மறந்துவிடுங்கள். பலன் தானுக வந்தமைகிறது. நல்ல பண்புகளை வளர்த்து வருவீர்களாக. நாட்டின் உண்மையான பிரஜைகளாக இருந்து நாட்டை மேல்நிலைக்குக் கொண்டு வருவீர்களாக.

எல்லாம் வல்ல இறைவன் சர்வ ஆற்றலையும் உங்களுக்கு அளிப்பானுக.

* * *

1. கேள்வி: பகவத் கீதை கூறும் நீதி என்ன?

விடை: உலக வாழ்க்கை ஒரு போராட்டத்திற்கு நிகர். உன்னை நீ பக்குவப்படுத்துகின்ற வளவு வாழ்வு என்ற போராட்டத்தை நீ சரியாக நடத்துவாய் என்பதே பகவத் கீதை கூறும் நீதி

2. கேள்வி: தசாவதாரத்தில் ஒன்பதாவது அவதாரம் புத்தரா? பலராமனு?

விடை: ஹிந்துக்களுக்கிடையில் ஒரு சம்பிரதாயத்தாருக்கிடையில் எட்டாவது அவதாரமாக இருப்பது கிருஷ்ணன். ஒன்பதாவது அவதாரம் பலராமன். ஆனல் பரிணமத்தை எடுத்துக் கொண்டால் படிப்படியாக மேல் நிலைக்குப் போவதில் பலராமனை அவதார மூர்த்தியாக எடுத்துக் கொள்வதற்கு அறிகுறிகள் அங்கில்லை. கௌரவர்களுக்குத் துணைபுரிந்தது பலராமனது போக்கு. அதர்மத்தில் ஈடுபட்ட கௌரவர்களை அழித்தது கிருஷ்ணனின் போக்கு. மேலும் ஒவ்வொரு அவதாரமூர்த்திகளின் மகிமைகளை ஆராய்ந்து பார்த்தால் பலராமனிடத்து அதிக மகிமை இருந்ததாகத் தெரியவில்லை. பரிணம வளர்ச்சியில் உன்னுடைய முயற்சியால் இத்தனையையும் பெறலாம் என்பதற்கு எடுத்துக்காட்டு புத்தர். ஆகவே அவரை ஒன்பதாவது அவதாரமாக எடுத்துக் கொள்வது இயற்கையின் நடைமுறைக்கு ஒத்ததாக இருக்கிறது. புத்தமதம் வேண்டாமென்று ஒதுக்குகின்ற சம்பிரதாயத்தினர் சிலர் ஹிந்துக்களிடையே இருக்கிருர்கள். உண்மையில் புத்தமதம் ஹிந்து மதத்தில் ஜீரணமாகியிருப்பது பலருக்குத் தெரியாது. இன்றிருக்கிற ஹிந்து மதத்தில் முக்கால் பங்கு புத்தமதம் என்பது தெரியாது. உன்னுடைய முயற்சியால் இத்தனையையும் அடையலாம் என்பது புத்தரின் செய்தி. இது மேலான தத்துவம். சிற்றுயிர் பேருயிராகப் பரிணமித்தல் தசாவதாரம் என்று பார்த்தால் அந்தத் திட்டத்தில் பலராமன் இடம் பெறுவதில்லை; புத்தர் இடம் பெறுகிருர்.

3. கேள்வி: ஏழைக் குடும்பத்தில் பிறந்த பல இளைஞர்கள் இந்தத் தேசத்திற்கும் சமுதாயத்திற்கும் சேவை செய்ய ஆசைப்படுகின்ருர்கள். ஆனல் குடும்பமா? நாடா? என்ற பிரச்னை வருகிறது. குடும்பத்திற்கு முதலிடம் தந்தால் நாட்டிற்குச் சேவை செய்ய முடியாதே என்ன செய்வது?

விடை: இப்பொழுது கேட்ட நிலையில் நரேந்திரர் இருந்தார். சிறுவனுக வளர்ந்து வந்த

பொழுது இராஜகுமாரன் போன்று எல்லா வசதிகளுடன் வாழ்ந்து வந்தார். தந்தையார் கல்கத்தாவில்ஹைகோர்ட்டு வக்கீல். ஏராளமா கப்பணம் சம்பாதித்தார். சம்பாதித்தபணத்தை எல்லாம் நல்வழியில் செலவழித்துக்கொண்டே இருந்தார். செல்வர்கட்காகவும், செல்வியர்கட் காகவும் ஒன்றும் சேர்த்து வைக்கக்கிடையாது. தாயாரால் தூண்டப்பட்டு நரேந்திரனே தந்தை யிடம் இந்தக் கேள்வியைக்கேட்டான்:"அப்பா! எதிர்காலத்தில் எனக்காக என்ன தேடிவைத் திருக்கிறீர்கள்?" தந்தையார் விஸ்வநாததத்தர்: "மகனே உனக்காகத் தேடிவைத்திருப்பது உன்னையே; உனக்கு வேறு செல்வம் ஒன்றும் தேடவில்லை. நீ எத்தகைய பாங்கு படைத்தவ னென்று கண்ணாடியில் போய்ப் பார்", என்று சொன்னார். மகன் மீது அவ்வளவு பெரிய நம் பிக்கை வைத்திருந்தார். திடீரென்று தந்தையார் மாரடைப்பால் மாண்டுபோனார். அடுத்தநாள் முதற் கொண்டே வறுமை நோய் வாட்டியது. பட்டினிகிடந்து திண்டாடுகின்ற நெருக்கடிக்கு வந்து விட்டார்கள். அதற்கிடையில் தாயா ரிடம் ஒரு கேள்வியைக் கிளப்புகின்றார் நரேந் திரர். "அம்மா, நமது குடும்ப நிலையைப் பார்த்தால் நான் ஏதாவது ஒரு தொழில்செய்து உங்களையெல்லாம் சம்ரட்சணை பண்ணக் கட மைப்பட்டிருக்கின்றேன். பரமஹம்சர் ஒரு பெரிய காரியத்திற்கு என்னை ஆயத்தப்படுத்தி இருக்கின்றார். குடும்பக்காரியத்தைக் கவனிப் பதா, பரமஹம்சர் போதித்த பெரிய காரியத் தைக் கவனிப்பதா என்ற திண்டாட்டத்தில் இருக்கின்றேன். நீங்கள் எப்படி அனுமதி தரு கின்றீர்களோ அப்படி நடந்துகொள்கிறேன்?" என்று தாயாரிடம் நரேந்திரன் கேட்டார். "மகனே, உனக்கு எது நல்லதென்று தோன்று கிறதோ அதைச் செய். என்னைப் பற்றியும், உடன் பிறந்த சகோதர சகோதரிகளைப் பற்றி யும்கவலை வேண்டாம். நான் எப்படியோ சமா ளித்துக் கொள்வேன்" என்றார். பாலகிருஷ்ண னாகஇருந்தபோது அன்பினுடையதத்துவத்தை யெல்லாம் கிருஷ்ணன் விளக்குகின்றார். கோபி மார்கள்தங்களுடைய வீட்டு வேலைகளையெல் லாம்விடுத்து அவர் கிளப்புகின்ற வேணு கானத்திற்கு வசப்பட்டவர்களாகக் கிளம்பு கின்றார்கள். குழந்தைக்குப் பாலூட்டிக் கொண் டிருந்தவள் குழந்தையை அப்படியே போட்டு விட்டு ராசலீலையில் ஈடுபட்டுப் போகின்றாள். கணவனுக்கு அமுது படைத்துக் கொண்டிருந் தவள் அப்படியே போட்டுவிட்டு ஓடுகின்றாள். பசுவினிடம் பால் கறந்து கொண்டிருந்தவள், சாதம் வடித்துக்கொண்டிருந்தவள் இப்படியாக எல்லாரும் அந்தந்த வேலைகளை அப்படியே போட்டுவிட்டுப் போகின்றார்கள். அத்தனைபேர் களும் போய்க்கிருஷ்ணமயமாக மாறுகிறார்கள். அதனுடைய விளைவாக வீட்டுக் காரியங்களைச் செய்வதற்கு வேறு ஆட்கள் வந்துசேர்ந்துவிடு கிறார்கள். வீட்டுக்காரியம் தடைப்படவில்லை. பெரிய லட்சியத்தின் பொருட்டு ஒருவன் சிறிய லட்சியத்தைப் புறக்கணித்தால் சிறிய லட்சியம் சிறியவர்களால் எப்படியும் நடந்து விடுகிறது. ஆதலால் யாரும் இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. சிறிய லட்சியங்கள் ஒழுங் காக நடந்துவிடும். (தொடரும்)

செய்திகள்

நிகழ்பவை:

அக்டோபர் மாதம் 18-ஆம் தேதி சனிக் கிழமையன்று இரவு வித்யாவன குருகுல மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து சரஸ்வதி பூஜையைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

'வ. வெ. சு. ஐயர் நினைவுகள்' என்னும் தலைப் பில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர் களின் ஒலிப்பதிவு செய்துள்ள பேச்சு 24-10-80 வெள்ளிக்கிழமை இரவு 9-15 மணிக்குத் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்படும்.

25—10—80 சனிக்கிழமையும், 26—10—80 ஞாயிற்றுக்கிழமையும் இரவு 7-00 மணி முதல் 8-00மணிவரை ஸ்ரீமத் அசலானந்தசுவாமிகள் மதுரைஜில்லா காமயகவுண்டன்பட்டி ஐயனார் கோயிலில் கீதை வகுப்பு நடத்துவார்கள்.

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுலப் பள்ளி மாணவர்கள் அக்டோபர் மாதம் 28-ஆம் தேதி மாலை 3-00 மணிக்கு மேல் தீபாவளி விடு முறைக்காக அவரவர்கள் ஊருக்குப் புறப்படு வார்கள். 11—11—80 தேதியன்று தீபாவளி விடுமுறைக்குப் பின் ஸ்ரீ விவேகானந்த வித்யா வன குருகுலப் பள்ளி திறக்கப்படுகிறது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை 13-ம் பதிப்பு பிரசார விலை	ரூ. 16-00
திருவாசகம்-பிரசார விலை	14-00
கர்மயோக விளக்கம்	10-00
ஞானயோக விளக்கம்	8-00
ராஜயோக விளக்கம்	8-00
பக்தியோக விளக்கம்	6-00
பரமஹம்சரின் பெருமை	6-00
விவேகானந்த விவரணம்	4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	4-00
விவேகானந்த உபநிஷதம்	4-00
கடவுளின் வடிவங்கள்	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II	3-50
தினசரி தியானம்-பிரசார விலை	3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி ஏழாம் பதிப்பு-பிரசார விலை	3-00
அனுஷ்டான வேதாந்தம்	3-00
எதிர்கால இந்தியா	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	2-00
கண்ணன் என்னும் கடவுள்	2-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை	3-50
பரிபூரணானந்தம் ஷை	3-00
சின்மயானந்த குரு ஷை	3-00
ஆனந்தமானபரம் ஷை	3-00
சுகவாரி ஷை	3-00
மௌனகுரு வணக்கம் ஷை	3-00
எங்கும்நிறைகின்றபொருள் ஷை	2-50
பரசிவ வணக்கம் ஷை	1-00
பஜனைப் பாடல்கள்	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	1-50
விபீஷணன் சரணாகதி ஷை	1-50
பரமஹம்ஸர் பாமாலை	1-50
சந்நியாசி	1-25
குழந்தைகளின் களிக்கூடம்	1-00
சகோதரி நிவேதிதை	1-00
காயத்ரீ	1-00
வாலி மோட்சம் (நாடகம்)	1-00
தவப்புதல்வர்கள் (நாடகம்)	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	1-00
இராவண தத்துவம்	1-00

பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	ரூ. 1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்)	0-80
நன்மக்களைப் பெறுதல்	0-80
நோய்க்கு இடம் கொடேல்	0-80
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	0-75
*ஆத்ம சக்தி	0-75
*சக்தி தத்துவம்	0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	0-60
*ஆலய வழிபாடு	0-60
*சூரிய நாராயணன்	0-50
*முருகக் கடவுள்	0-50
*விஷ்ணு தத்துவம்	0-50
தெய்வீக மகிமைகள்	0-50
சைவன் யார்?	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?	0-50
*கணபதி	0-40
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	0-40
வர்ணாச்ரம தர்மம்	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	0-30
The Bhagavad Gita (10th Imp.)	20-00
The Indian National Education	8-00
Sri Lalitambika Sahasranama Stotram	10-00
Ramakrisna Lives Vedanta	8-00
Facets of Brahman or The Hindu Gods	5-00
Daily Divine Digest (DELUXE)	4-50
Daily Divine Digest (Ordinary)	2-50
Mahabharata (with plastic cover)	4-00
Ramayana (do)	4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover)	4-00
Sri Vishnu Sahasranama Stotram	4-00
The Bhagavad Gita (Small Size)	4-00
Siva Sahasranama Stotram	3-50
Bheeshma The Superman	3-50
Hinduism Hosts Christianity	3-00
Holy Bible—In the Light of Vedanta	1-50
* Introducing the Gita	1-50
The Garland of Paraaparam	1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	1-00
* Key to Higher Life	0-75
* The Teacher	0-60
* The Student	0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 3-25ம் மஞ்ஜரிக்கு ரூ. 1-40ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 9—11—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ரயில்வே ஸ்டேஷனுக்கருகிலுள்ள லாயல்மில் ஆரம்பப் பாடசாலை

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

பல்லடம் தாலுகா—கேத்தனூரில் 15—11—80 சனிக்கிழமை

இடம்: ஸ்ரீ பெருமாள் கோவில்

நேரம்: இரவு 7-00 மணி முதல் 9-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—உடுமலைப்பேட்டையில் 16—11—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி உயர்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—வையம்பாளையத்தில் 16—11—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சுதந்திர உயர்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும் தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

தர்ம சக்கரத்திற்கு தை மாதம் முதல் அடுத்த மார்கழி மாதம் முடிய 12 மாதங்கள் ஒரு ஆண்டு என கணக்கிடப்படுகிறது. சந்தாதாரர்களின் சௌகரியத்தை முன்னிட்டு எந்த மாதம்முதல் வேண்டுமானாலும் சந்தா சேரலாம் என வழிசெய்யப்பட்டுள்ளது. பங்குனியில் ஒருவர் சந்தா செலுத்தினால் அடுத்த ஆண்டு மாசி முடிய 12 இதழ்கள் அவருக்கு அனுப்பப்படுகிறது. அவரது சந்தா தீருகிற மாதம் அவரது இதழில் சந்தா தீருவதுபற்றி தெரிவித்து அடுத்த ஆண்டு சந்தா தொகையை அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுமாறு வேண்டுகோள் நோட்டீஸ் வைக்கப்படுகிறது. சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை தவறாமல் புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆண்டுதோறும் புதுப்பிக்கிற சிரமம் இல்லாமல் இருப்பதற்காகத்தான் டிபாசிட் சந்தாமுறை கொண்டுவரப்பட்டது. தர்ம சக்கரத்தை தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் படித்து பயனடைவதுடன் பலருக்கும் படிக்கத் தாருங்கள். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து அவர்களும் பயனடையச் செய்யுங்கள். இங்ஙனம் தர்ம சக்கரம் செய்யும் ஞானயக்ஞத்தை பயனுடையதாக்குமாறு சந்தாதாரர்களை வேண்டிக்கொள்கிறோம்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.